Registered as a News paper in Ceylon

★ ★ விலை சதம் 20

# ஈழநாடு

வாரமலர்

மலர் 13 | பங்குனி 4 | முஹறம் 20 | (18 – 3 – 71) | வியாழக்கிழமை | இதழ் 36

'பொய்யான வழியில் பொருள் தேட முயலாதீர்கள். அறத்தால் வருவதே இன்பம்'

''சமயஜோதி''

காலம் பெறுமதியானது. காலத்தை வீணாக்காதீர்கள். மில்க்வைற் சலவைப் பவுடர் வாங்கிப் பாவித்து நேரத்தையும், பணத்தையும் மிச்சப்படுத்துங்கள். பாவித்த உறைகளை அனுப்பி பரிசுகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க்வைற் சோப் தொழிற்சாலை

யாழ்ப்பாணம்.

### குழப்பம் – இரத்தக்களரி ஏற்பட தீயசக்திகள் திட்டமிடுவதால்

# 'பொதுமக்களுக்கு பாதுகாப்பு அளிக்கவே அவசரகாலநிலை

## தவருன வழியில் இளைஞர்களே செல்லாதீர்; தாய்மாரே தடுங்கள்'

### வானொலி மூலம் பிரதமர் வேண்டுகோள்

[நமது நிருபர்]



''நாட்டில் குழப்பத்தையும் இரத்தக்களரியையும் ஏற்படுத்த சில தீய சக்திகள் முனைகின்றன. நாட்டு மக்களுக்குப் பாதுகாப்பும் அமைதியும் அளிக்கவேண்டியது அரசின் பொறுப்பாதலால் அவசர கால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது'' என்று பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகா நேற்றுக் காலை வானொலி மூலம் பொதுமக்களுக்கு விளக்கம் கூறினார். அவரது பேச்சின் முக்கிய அம்சங்கள்:

இளைஞர்களின் பிரச்னைகளை நாம் நன்கு அறிவோம், அவற்றைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்துவருகிறோம்

நாட்டில் வன்முறையையும் குழப்பத்தையும் ஏற்படுத்தி புரட்சிமூலம் சுபீட்சத்தை ஏற்படுத்தலாம் என்பதை ஏற்கமுடியாது.

நாசகாரக் கும்பலின் பின்னே சென்று தவருன வழிகளைப் பின்பற்றுமல் தடுக்கவேண்டுமென்று நானும் ஒரு தாய் என்ற முறையில், தாய்மார்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சுயநலம் மிக்க சிலரின் தவருன வழிகாட்டலினுல் உங்களுக்கும் உங்கள் பெற்றோருக்கும் இந்த நாட்டுக்கும் கேடு தேடாதீர்கள் என்று இளைஞர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிரதமரின் வானொலி உரையின் விபரம் வருமாறு:

### சேகுவேராவும் வேறு பெயர்களும்

கடந்த சில வருடங்களாக பகிரங்கமாகவும் அந்தரங்கமாகவும் சில தேசவிரோத சக்திகள் செயற்பட்டுவருகின்றன. இச்சக்தி சேகுவேரா என்றும் மற்றும் வேறு பெயர்களிலும் அழைக்கப்பட்டுவருகின்றன. எனது அரசு ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்துள்ளதாலும், அதன் வழியில் நடந்துவருவதாலும், இவர்களின் செயல்களைப் பொறுத்துவந்திருக்கிறது. இவர்களின் செயல்பற்றி நானும் எனது மந்திரிசபையும் தீர்க்கமாகப் பரிசிலனை செய்தோம். மிகவும் சிறுபான்மையினரான பகுதியினரால், நாட்டில்ரத்தக்களரி ஏற்படுத்தவும், வேண்டும்பொழுது அரசைப் பலாத்காரமூலம் கைப்பற்றுவதற்கும் திட்டமிட்டு செயல்பட்டு வருகிறது இவர்கள் தாமே ஆயுதங்களைச் செய்தும், ஆயுதங்களைச் சேகரித்தும் வருகின்றனர். கைக்குண்டு, எறிகுண்டு மற்றும் இவைபோன்ற வன்முறை ஆயுதங்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் பல நாட்டின் சில பகுதிகளில் நடைபெற்றுவருவதை நீங்கள் அறிவீர்கள். அண்மையில் டெடிகமப் பகுதியில் இவ்விதமான வெடி விபத்தில் 5 இளைஞர்கள் இறந்ததும், கேகாலை போன்ற பகுதிகளில்நடைபெற்ற சம்பவமும் நீங்கள் அறிந்ததுதான்.

### 'தாய்மார்களைக் கேட்கிறேன்'

'பிள்ளைகளைப் பெற்றெடுத்த தாய் என்பதனுல் தாய்மார்களிடம் நான் கேட்டுக்கொள்வதென்னவென்றுல், இவ்விதமான தீய நாசகாரக் கும்பலின் பின்னே சென்று உங்கள் பிள்ளைகளும் இவ்விதமான செயல்களில் ஈடுபடாமல் பார்த்துக்கொள்ளுங்கள். உங்களது பிள்ளைகள் இதற்குமுன்பு இச்சக்திகளுடன் தொடர்புடையவர்களாய் இருந்தால் அதிலிருந்து அவர்களைத் தடுத்துவிடுங்கள்.

இந்தநாடு கிட்டத்தட்ட 2000 ஆண்டுகளாக புத்தரின் போதனையைப் பின்பற்றிவருகிறது. புத்த சமயத்தால் போதிக்கப்படும் அன்பு கருணைதியாகம் ஆகிய கொள்கைகள் பேணப்பட்டு வந்துள்ளன. இந்நாட்டுமக்களின் எண்ணங்களையும் அபிலாசைகளையும் இந்த அரசு பிரதிபலிக்கும் வகையில் நடந்து வருகிறது.

இந்நாட்டு மக்கள் அமைதியாகவும், இலகுவாகவும் எவ்வித ஆபத்துமின்றிவாழ வேண்டும் சோஷலிசம் ஜனநாயகம் ஆகிய இரு கோட்பாடுகளையும் இந்த அரசு கொண்டிருக்கிறது. பலரின் வாழ்வை சிலரின் வாழ்வால் நிர்மானிக்க முடியாது.

இந்த நாட்டில் உள்ள வேலையில்லாத் திண்டாட்டம் நீக்கப்படவேண்டும். வேலை வாய்ப்பு அதிகரிப்பதற்கு சகல நடவடிக்கைகளையும் அரசு செய்துவருகிறது.

### பிரச்னைகளைச் சமாளிக்கவேண்டும்

1970-ம் ஆண்டு நீங்கள் எங்களிடம் ஒப்படைத்த பொறுப்புகளை அமைதியாக செயலாற்ற முன்னேறிக்கொண்டிருக்கிறோம். இன்று எம்மைஎதிர்நோக்கும் பிரச்னைகளைநாம் சமாளித்தாக வேண்டும்.

கடந்த அரசாங்கம் விட்ட பிழைகள் காரணமாக அந்தப் பிழைகளை நிவிர்த்தி [illegible] வருமானத்தைச் செலவிட வேண்டியுள்ளது. இதுபற்றி நிதியமைச்சர் கலாநிதி என். எம். பெரேரா விளக்கியுள்ளார். நிலைமை இப்படியிருக்க நாட்டில் இச்சக்திகள் அரசுமீது பல குறைகளைக் கூறி நாட்டில் அமைதியின்மையை ஏற்படுத்த முயல்கிறது.

எமது அண்டை நாடுகளில் அண்மைக்காலத்து வாக்கு மூலம் ஜனநாயகப் புரட்சியைமக்கள்செய்திருக்கின்றனர். இதனைவிடுத்து நாட்டில் வன்முறையையும் குழப்பத்தையும் ஏற்படுத்தி, புரட்சி மூலம் நாட்டில் சுபீட்சத்தை ஏற்படுத்தலாம் என்பதை என்னுல் ஏற்றுக்கொள்ள முடியாது.

மூன்றில் இரண்டு பெரும்பான்மைப்பலம் கொண்டிருக்கும் நீங்கள், ஏன் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு வேண்டிய விரைவான நடவடிக்கைகளை எடுக்கக்கூடாதெனப் பலர் எம்மிடம் கேட்கிருர்கள். இப்போதைய அரசியல் சாசனத்தின்படி, மக்கள் பிரதிநிதிசபையும் செனட்சபையும் சேர்ந்ததே ஆட்சிமன்றம் என்பதை இவர்கள் மறந்து விடுகிருர்கள். செனட்சபையில் எமக்குப் பெரும்பான்மை பலம் இல்லை. இதற்காகவே புதிய அரசியல் திட்டத்தை விரைவாகத் தயாரித்து, அதன்கீழ் எமது பொருளாதாரத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முயல்கின்ருேம்.

நான் இந்நாட்டின் மூலைமுடக்குகளுக்கெல்லாம் சென்றவள் என்றமுறையில் அங்கெல்லாம்இளைஞர்களின் தேசாபிமானத்தையும் தேசபக்தியையும் அவர்களிடம் நான் கண்டேன். அவர்கள் மத்தியில் பிரச்னைகள் உண்டு என்பதை நான் உணர்கின்றேன், வருங்காலத்தலைவர்களாகிய அவர்களிடம்தான் இந்நாட்டின் எதிர்காலச் சிறப்பே தங்கியிருக்கிறது.

அவர்களுடைய ஒத்துழைப்பும் பெரும் ஆதரவும் செயல்பாடுந்தான் இந்த அரசை இவ்வளவு பெரு வெற்றியுடையதாகச் செய்தது என்பதை நான் உணர்கின்றேன் அரசாங்கம் அவர்களின் பிரச்னைகளைத்தீர்த்து வைக்க பல திட்டங்களைத் தீட்டிவருகிறது. இந்த நிலையில்அநீதியானதும் தீயசக்தியுடையதுமானதேசவிரோத நாசகாரச் சக்திகளுடன் சேர்ந்து சாதாரணக்குற்றவாளிகள் போல் இளைஞர்களே நடந்துகொள்ளாதீர்கள். இதுவரை நீங்கள் தவருன வழியில் சென்றுலும் இனிமேலாவது அவ்வழியில் செல்லாதீர்கள். சுயநலம் மிக்க சிலரின் தவருன வழிகாட்டலினுல் உங்களுக்கும் உங்கள் பெற்ருேருக்கும் இந்த நாட்டுக்கும் கேடு தேடாதீர்கள்.

(16-ம் பக்கம் பார்க்க)

## ஆதரவு தெரிவித்து பிரதமருக்கு வாழ்த்து

கோட்டை, புதன்

அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைக்கு ஆதரவு தரும்படி பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா வானொலி மூலம் விடுத்த வேண்டுகோளுக்கு பலத்த ஆதரவு தெரிவிக்கப்படுவதாக அறிவிக்கப்படுகிறது

ஸ்ரீலங்கா எழுதுவினைஞர் சங்கம், சிங்கள கவிஞர் பேரவை, பத்திரிகையாளர் எழுத்தாளர் சங்கம் ஆகியன பிரதமருக்கு அனுப்பிவைத்துள்ள செய்தியில், அரசாங்கத்தின் முற்போக்கு நடவடிக்கைகளுக்கு தங்களின் ஆதரவு எப்பொழுதும் கிடைக்குமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் நிர்ணய சபை

# சமஷ்டிககட்சி நம்பிக்கை; பெரும்பான்மைக் கட்சியின் பெரும் பொறுப்பு

அரசியல் நிர்ணயசபையிலே இலங்கை தமிழரசுக் கட்சியினர்உள்ளிட்டு எல்லா அங்கத்தவர்களும் 'ஸ்ரீ லங்கா, ஒரு சுதந்திர ஆதிபத்தியமுள்ளசுயேச்சை குடியரசாகும்' என்றமுதல் தீர்மானத்தைஏகமனதாகநிறைவேற்றியுள்ளனர். இலங்கையின் எதிர்கால ஒற்றுமைக்கும் முன்னேற்றத்துக்கும் இது நல்ல சுபசூசகமாக இருக்கவேண்டும்.

ராணியாக இருந்து வந்தார். நமது வழக்குகளை முடிவாகத் தீர்மானிக்கும் அதிகாரம் பிரிட்டனின் பிரிவுக் கவுன்ஸிலுக்கே இருந்துவந்துள்ளது. நாட்டின் மானத்தையும் மதிப்பையும் இது உயர்த்தக்கூடியதல்ல. இந்நிலையை மாற்றி, சுதந்திரக் குடியரசாக பிரகடனம்செய்துள்ளதைப்பற்றி தேசாபிமானிகள் அனைவரும் பெருமகிழ்ச்சியும் பெருமையும் தமிழ்ப்பிரதிநிதிகள் காட்டியிருக்கிறார்கள். பெரும்பான்மைச் சமூகத்தவர்களின் நல்லெண்ணமே தங்களுக்கு உண்மையான பாதுகாப்பென்பதையும் அவர்கள் இதன்மூலம் உணர்த்தியுள்ளனர். இந்த நம்பிக்கையைப் பலப்படுத்தவேண்டிய பெரும் பொறுப்பு பெரும்பான்மைச் சமூகத்தையே சார்ந்ததாகும்.

0 0 0

சுதந்திர குடியரசாக ஸ்ரீ லங்காவை பிரகடனப்படுத்தினாலும். கசமன் வெல்த் குடும்பத்தை விட்டு விலக இலங்கைஅவசரப்படவில்லை. காமன்வெல்த் திலிருந்து விலகவேண்டுமென்ற காலிமெம்பரின் தீர்மானத்தை ஆதரிப்பதற்கு அச்சபையில் யாரும் முன்வரத் தயாராக இல்லையென்பது குறிப்பிடத்தக்கது. இதிலிருந்து அரசியல் நிர்ணயசபை, எவ்வளவு பொறுப்புணர்ச்சியுடன் உணர்ச்சிவசப்படாமல் காரியம் செய்கிறதென்பதும் விளங்கும். இதே சமயத்தில், இவ்விஷயத்திலே, இந்தியா, பாகிஸ்தான் இவற்றின் வழியிலேயே இலங்கை செல்வதும் மூன்றுக்கும் ஒரு பொதுவான கொள்கை உருவாகி வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

0 0 0

தங்களை ஆட்சி செய்து கொள்ளும் ஆதிபத்திய உரிமையை நாட்டு மக்கள் எடுத்துக்கொள்ளுவதாக, அரசியலமைப்பு அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்தார். பெரிய உரிமையைப் பெறும் அதே சமயத்தில் சிறப்பாகப் பெரும்பான்மை சமூகத்தவர் தங்கள் பொறுப்புகளையும் உணர்ந்து நடந்தாலே, எதிர்கால இலங்கை அமைதியாகவும், ஒற்றுமையாகவும், சுபீட்சமாகவும் முன்னேற முடியும். பழைய தவறுகளை உணர்ந்து அதைத் திருத்திக்கொள்ள இம்முக்கியமான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

பார்லிமெண்ட் சபைக்கும் அரசியல் நிர்ணயசபைக்கும் ஒரு பெரிய வேற்றுமையுண்டு. பார்லிமெண்டில் கட்சிக் கட்டுப்பாடுகள் உண்டு. அரசியல் நிர்ணய சபையில் அவ்விதகட்டுப்பாடு இருக்கத் தேவையில்லை. இருக்கவும் கூடாது. நவரங்கஹலாவில் நடைபெற்ற ஆரம்ப விழாவில், எம். பி. மார்கள் கட்சிமுறையின்றி இஷ்டமான இடத்தில் கலந்து அமர்ந்தது குறிப்பிடத்தக்கது. ஆனால் இப்போது கட்சிமுறையிலே எல்லாம் நடக்கின்றன.

"மெஜாரிட்டி கட்சியினர் தங்கள் கொள்கைகள் படியே காரியம் செய்வதாயின், அரசியல் நிர்ணய சபையில் சிறுபான்மையோரான தமிழர்களுக்கு இடமில்லை. பல கட்சியினரும் தங்களுக்கிடையே விட்டுக் கொடுக்கும் உணர்ச்சியுடன் வேறுமேலான மனப்பான்மைகாட்டவேண்டும்" என்று தமிழரசுக் கட்சித் தலைவர் திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் சரியாக அறிவுறுத்தினார். இதிலிரு[illegible] கொடுக்கத் தயார் என்பதை தமிழரசுக் கட்சித் தலைவர் மறைமுகமாகத் தெரிவித்துள்ளார். அதேபோல் பெரும்பான்மை கட்சியினர் செய்வார்களா? இக்கேள்விக்கான பதிலில்தான் இலங்கையின் எதிர்கால அரசியலும் பெரிதும் அடங்கியிருக்கும்.

## ஒற்றை ஆட்சி

இரண்டாவது அடிப்படைத் தீர்மானம் "ஸ்ரீலங்கா குடி அரசு ஒற்றை ஆட்சியாக இருக்கவேண்டும்" என்பது: இதைப்

— பராசரன் —

பிரேரித்து அரசியல் அமைச்சர் பேசுகையில், வகுப்புவாத உணர்ச்சிகளை விட்டு சமஷ்டிக் கொள்கை பற்றி விவாதிக்கவேண்டுமெனவும் அந்த நம்பிக்கையிலே தாம் இதைக்கொண்டு வந்துள்ளதாகவும். ஒற்றை ஆட்சிமூலமே நாடு அபிவிருத்தியடையுமெனவும் தெரிவித்தார்

"ஒற்றை ஆட்சி" என்பதற்குப்பதில் 'சமஷ்டி ஆட்சி' என்று உடுவில் பிரதிநிதி தர்மலிங்கம் அவர்கள் ஒரு பிரேரணை கொண்டுவந்திருக்கிறார். இது மிக முக்கியமானதோர் திருத்தம். பெரும்பான்மையோர் இதை ஏற்றுமாட்டார்கள் என்பது தெரிந்ததே என்றாலும் இதைபற்றிப் பகிரங்கமாக, உணர்ச்சிவசப்படாமல் விவாதிக்க ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளதே பெரிய காரியம்.

முதல் நாளன்று சாவகச்சேரி பிரதிநிதி திரு. வி. என். நவரத்தினம் பேசுகையில், தாங்கள் பிரதம மந்திரியைக் கண்டு பேசியதில், தமிழ் மக்களின் மொழி, மத உரிமைகளை புதிய அரசியலமைப்பு பாதுகாக்கும் என்ற நம்பிக்கை ஊட்டியுள்ளதாகவும், அந்த நம்பிக்கையுடன்தான் தமிழரசுக் கட்சி இக் கூட்டத்தில் கலந்து கொள்வதாவும் சொன்னார். தமிழ் மக்களின் பீதிகளையும் குறைகளையும் தீர்க்க ஏதும் விட்டுக்கொடுப்பார்களா? என்பதை சிறப்பாக இந் நாட்டிலுள்ள தமிழ் சமூகத்தவர் ஆவலுடன் கவனித்து வருகிறார்கள்.

## அரசியல் அரங்கு

அந்நியர்கள் இங்கு வரு முன் இலங்கை பல ராஜ்யங்களாகப் பிரிந்து இருந்தது. மன்னர்களே ஆட்சி புரிந்து வந்தனர். மன்னர்களுக்குள் அடிக்கடி சண்டை ஏற்படும். மக்களின் அமைதி குலையும். ஆனால் இப்போது இலங்கை மக்கள், அனைவரும் ஒன்றாக, ஒரு சுதந்திர, ஆதிபத்தியமுள்ள சுயேச்சைக் குடியரசாக இருக்கவேண்டுமென்று தீர்மானித்துள்ளது இலங்கையின் சரித்திரத்திலேயே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய விஷயமாகும்.

மன்னர்களுக்குப்பின், நாம் அந்நியர்களுக்கு அடிமைப்பட்டு, சொல்லொணாத இன்னல்களுக்கும் சிறுமைகளுக்கும் ஆளாகி இருந்தோம். 1948-ம் ஆண்டுநாடுசுதந்திரமடைந்ததெனினும், பிரிட்டிஷ் ராணியே இலங்கை அடைவர்

சுதந்திரம் பெற்ற புதிதில், உணர்ச்சிவேகத்தில் பல அரசியல் தவறுகள் செய்யப்பட்டன. நாட்டின் ஒற்றுமையும், அமைதியும், முன்னேற்றமும்குலைந்தன இங்கு இரண்டாவது பெரிய சமூகத்தவரான தமிழருக்கிருந்த மொழியுரிமை பறிக்கப்பட்டது என்றாலும் அரசியல் நிர்ணயசபையிலே தமிழ் கட்சியினர், இந்தத் தீர்மானத்தைப் பூரணமாக ஆதரித்ததன்மூலம், தங்கள் தேசாபிமானத்தை நிரூபித்துக்காட்டியுள்ளனர். அவர்கள்மீது இதுபற்றிய குற்றச்சாட்டை யாரும் இனிச் சுமத்தமுடியாது. தங்களுக்கு நியாயமான குறைகள் இருந்தும், பெரும்பான்மை சமூகத்தவர்கள் முதலில் தங்களுக்கு நியாயம் வழங்குவர் என்றநம்பிக்கையையும்

திரு. ஏ. ஈ தம்பர் அவர்கள் அமரத்துவம் எய்திய 31-வது தினத்தையொட்டி இக்கவிதை பிரசுரமாகின்றது.

## ஆற்றலால் அறிவால் வாழ்ந்தவர்

இ. நா:

"தேற்றுள மாந்தர் இன்று
நீளுல கில்லா தாகும்
மாற்றரும் விதியை இங்கே
மாற்றுவார் இல்லை; ஆனால்
ஆற்றலால் அறிவால் நாட்டில்
அறவழிப் பணியே செய்வோர்
தோற்றிய வாறே யென்றும்
துலங்குதல் உண்மை யாகும்.

இத்தகை உண்மைக் கோர்
இலட்சிய பாக வாழ்ந்தார்;
நித்தியம் சாந்தி கண்ட
நெறியினில் தேசி யத்தில்
சித்தமே வைத்துக் காத்த
சீலனும் தம்பர்; இன்று
இத்தரை இல்லை; யானும்
இதயமி திருக்கின் றூராம்.

அடக்கமே முதல தாக
அன்புறு கொள்கை தன்னை
தொடக்கிய வாறே யென்றும்
தொடர்ந்தவர்; சொன்ன வற்றை
நடத்தையிக் காட்டி வந்தோர்.
நல்லறி ஞர்க்கே யுள்ளே
இடத்தையின் கமைத்து வான
இறைவனே டிணைந்து விட்டார்.

திருமலி ஈழ நாட்டின்
தேசியம் தழைக்க, நல்லோர்
இருதயம் இருந்தார், நல்ல
இயல்புகள் அமைந்த ஆன்ற
குருவென வாழ்ந்தார்: அன்புக்
கொள்கையால் உயர்ந்தே அன்பர்
இருவிழி நீரில் நீந்தி
இறைவனே டிணைந்தார் தம்பர்.

# பாரியும் தீமிரியும் படுத்தும் பாடு

யாழ்ப்பாணத்தில் இற்றைக்கு முப்பது ஆண்டுகளுக்கு முன் பிரபல்யமான நாதசுர வித்துவானும் மாவைக்கந்தன் தேவஸ்தானவித்துவானுகவும் விளங்கி சென்ற இருமாதங்களுக்குமுன் காலஞ் சென்ற திரு. சு' குழந்தைவேல் அவர்கள் சகோதரரான நாதசுர வித்துவான் திரு.

### சுவாரஸ்யமான ஒரு பேட்டி

சு. க. இராசா அவர்களுடன் உரையாடியபொழுதுபெரிய மேளம் என்று சொல்லப்படும் நாதசுர வாத்தியத்தைப்பற்றிய சில அரிய விஷயங்களை அறியக்கூடிய வாய்ப்புப் பெற்றதற்கு மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்

திரு. இராசா அவர்கள் காலத்துக்குக்காலம் சிறந்த கலை மேதைகளை இந்தியாவிலிருந்து வரவழைத்து தொழிலில் சிறந்து விளங்கியதோடல்லாமல் யாழ்ப்பாணத்தில் பிரபல்யம் வாய்ந்த நாதசுர கலைஞர்களான திருவாளர்கள் சோ. அப்புலிங்கம், அவர் சகோதரரின் மகன். இன்றுள்ள இளம் வித்துவான்களில் முன்னேறிவரும் செ. சிதம்பரநாதன், எம். எஸ், சண்முகநாதன், பி. எஸ். ஆறுமுகம்பிள்ளை, திரு சுந்தரமூர்த்தி, கோ, கானமூர்த்தி போன்ற பலருக்கு குருபீடம் தாங்கி வித்துவான்களாக்கிய பெருமையும் உடையவர். அறுபத்தைந்து வயதிலும் அவருடைய வாத்திய திறனையும் கற்பனாசக்தியையும் சுருதிசுத்தத்தையும் கம்பீரத்தையும் டாரசட்டமவிருக்க முடியாது.

அவர் கூறியவையாவன; நாதசுர நிலையானது வேதாகம காலம் தொடக்கம் கர்நாடக சங்கீதத்தை மிக விரிவாக எடுத்துரைத்து சங்ககாலத்திலும் சிறந்திருந்ததோடல்லாமல் இன்றும் கர்நாடக சங்கீதம் அழிந்து போகாமல் பேணி வளர்த்துவருவதும், பல்லாயிரம் மக்களை ஒரு மூச்சில் அறைகூவி அழைத்து பக்தியையும் இசையையும் இனிதூட்டும் பணியையும் இல்லறவாழ்க்கையையும் அறக்கோவிலையும் ஒன்று சேர்க்கும் பணியையும் கொண்ட பெருமையுடையது. இத்தொன்மையான வாத்தியத்திற்கு பக்கவாத்தியமாக அமைந்ததே தவில். உலகில் காலத்திற்குக் காலம் ஒவ்வொரு பெரியார்கள் தோன்றினார்கள். அவ்வண்ணம் தோன்றியவர்களில் நாதசுரத்திற்கு திரு. வேணுகோபாலபிள்ளையும் திரு. ரி.

பேட்டி கண்டவர்
'சுந்தரன்'

என். இராஜரத்தினம் பிள்ளையும். இவர்களுக்குமுன் ஒருவர் இருந்ததாக யான் அறியேன். இனிமேல் வருவார்களோ என்பதும் சந்தேகத்துக்கிடமானதே. இது போலவே தவிலுக்கு திரு. வி. தட்சணமூர்த்தி இவருக்கு முன் இவர்போல் இருந்ததில்லையென்று திடமாக கூறலாம்.

உலகில் ஒவ்வொரு துறையிலும் மாற்றங்கள் ஏற்பட்டு வரும் காலமிது. இது சங்கீதக் கலையையும் விட்டுவைக்கவில்லை. பண்

[15ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனத்தவரின் மும்மொழிக் கல்வெட்டில் சிங்களம் இடம் பெறாதது ஏன்?

ஆயிரத்தைத் தொள்ளாயிரத்துப் பதினோராம் வருஷத்தில் காலி நகரத்தில் உள்ள கிரிப்ஸ் றோட்டுக்குப் பக்கத்திலே ஒரு பாலத்துக்குள்ளிருந்து ஒரு கல்வெட்டு கண்டெடுக்கப்பட்டது. அப்போது மாகாணப் பொதுமராமத்து என்ஜினியராயிருந்த திரு. எச் எப். ரொம்லின் என்பவரால் இது கண்டுபிடிக்கப்பட்டது இப்பொழுது இக்கல்வெட்டு கொழும்பு நூதன பொருட்காட்சிசாலையில் வைக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

பதினைந்தாம் நூற்றூண்டு கி பி 1403 முதல் சீன மகா தேசத்துச் சர்க்கரவர்த்தியாயிருந்த யுங்லோவின் தூதரான சிங்ஹோ என்னும் கடற்படைத் தலைவர் கி பி. 1409-10-ம் ஆண்டில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டதன் ஞாபகார்த்தமாக இக்கல்வெட்டு எழுதப்பட்டுள்ளது கி பி 1409 முதல் 1415 வரை கோட்டை சிங்கள ராஜ்யம் சீன ஆதிக்கத்திற்குள்ளாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

சிங்ஹோ தமது நாட்டின் மதக்கொள்கைப்படி இலங்கையிலிருந்த பௌத்தமதம் இந்துமதம். இஸ்லாம் ஆகிய மூன்று முக்கிய சமயங்களுக்கும் பாரபட்சமின்றிப் பலவிதமான மதிப்பு வாய்ந்த பொருட்களை அன்பளிப்பாகச் செலுத்திவிட்டு புத்தபெருமானுக்காகக் கொடுத்தவைபற்றிச் சீன மொழியிலும் இஸ்லாத்துக்காக அளித்தவையை ஈரானிய மொழியிலும் இந்து மதத்துக்காகக் கொடுக்கப்பட்டவையைத் தமிழிலும் கல்வெட்டில் எழுதியிருக்கிறார். பௌத்தம் சம்பந்தமாகச் சீன மொழியை உபயோகித்தமையால் சிங்களத்துக்கு இதில் இடம் கிடைக்கவில்லைப்போலும்.

தமிழ்க் கல்வெட்டுமட்டும் இங்கு கீழே கொடுக்கப்படுகிறது:

'ஸவசதி ராசாதிராச பரமேசுரா பூரணசந்திரப பிரகாசன சீனததில மகா இராசா இலஙகா ராசசியததில நாயிஞா தெனவரை (Dondra) நாயிஞாககுத திரு முன் காணிக்கையாக நாயிஞா பிரகாசன கேடடு தூதர சிஙவோ உவிஞசுயிவ கையிலே வரககாட்டி வநதயிபபாசிதம கேட்பது, இந்தப் புவனததில உணடான பிராணிகள எலலாம நாயிஞா கிருபையினாலே சுகமே பரியா நிறைதது ஆநகு வருகிறா ஒஙகும மனிதரிம தெனவரை நாயிஞா திருஅருளால ஒழிநதா நதரை யால நினறது இபபடியேசு தெனவரை ஆழவாரககு காணிககை ஆக காடடினது ஆகபபடி பொன வெளளி துலுககி (துகில) சநதனம எணணைக் காபபுப பல காணிககைககுவகை: பொன

## — டபிள்யூ. எப். சிரிசேன —

ஆயிரம கழஞசு வெளளி ஐஞசாயிரம கழஞசு, பல நிறத துலுககி (துகில்) ஐமபது பல நிறமபடடு ஐமபது, பொன எழுதது காசு தாரத தூசஞசுவடு நாலு. (மணி பதிதத பொன வேலை செய்தது சங்கள் சோடு நாலு) சிவநத சுவடு (சோடு) இரணடு, நீலத தூசஞ சுவடு இரணடு. பழஞ செபபு தூபம இடுகிற செபபுப பாததிரம அஞசு. கறிகால அஞசு, பூககுததுகிற செபபு செணடி பதது, கறிகாலபதது, குதது விளககுச சாலான அஞசு கறிகால அஞசு, மரதாலே பொன் பூசின தாமரைப பூ சவடு ஆறு, அகில வைககிற பொன பூசின செப்பு அஞசு, மெழுகுதிரி சிவடு பததுஎணணை (எண்ணெய்) இரணடாயிரதது அஞஞறு கட்டி (வணிக நிறையள வொன்று) சதகன முறி பதது, ஆக இவவிசைபபடியால உள்ளது......நாயிஞா தெனவரை நாயிஞாககு திரு முககாணிக்கையாக கொடுககவும யுஙலோககு யாண்டு ஏழா (ஏழாவது) இரணடாம் மதி (moon or month)

மூன்று கல்வெட்டுகளிலும் பொறிக்கப்பட்டுள்ள வாசகங்கள் கருப்பொருள் ஏறக்குறைய சமமானவையாக சீன சாஸனத்தில் புத்த பெருமானைப்பற்றியும் ஆலயங்களைப்பற்றியும் நிறைவாகவும் இனிமையான வசன நடையிலும் எழுதியிருக்கிறது. ஈரானிய மொழியில் எழுதப்பட்ட சாஸனத்தில் எழுத்து வரிகள் துண்டு துண்டாகப் பழுதடைந்து நேரே வாசித்துப் பொருள் விளங்க அரியதாக இருக்கின்றன. அதில் காணப்படும் சில மொழிப்பகுதிகள் வருமாறு:

'பாட்ஷா மூ' அஹாம் (மகா சக்கிரவர்த்தி) மிங் (மில் மரபு) நூரெ இஸ்லாம் (இஸ்லாத்தின் ஒளி) ஸர் ஹஸார் மித்கால்(பொன்:1000 மிஸ்கால்) நுக்ரா பஞ்ச் ஹஸாரீ மித்கால் (வெள்ளி: 5000 மிஸ்கால்) ஸர் நிஷான பஞ்ச் தத் (பொன் பூசின...ஐந்து' ஹாப் (f)தும் ஸால் (ஏழாம் ஆண்டு) யாகும்... மாஹ் (மூன்றாம் திகதி...மாதம்)

பல சொற்கள் அழிந்துவிட்டிருக்குமாயின் மற்றைய சாஸனங்களின் உதவியால் தான் அதன் பொருள் தெளிவாக்கக்கூடியதாயிருக்கும்.

தற்கால சரித்திர நிலைமை:

கி பி 1405-ம் ஆண்டில் சிங்ஹோ கொழும்பை அடைந்து கோட்டை சிங்கள அரசனாயிருந்த வீர அழகேஸ்வரனிடமிருந்து (விஜய வாகு vi) அக்காலத்தில் கோட்டை 'தளதா' மாளிகையில் வைத்திருந்த புத்தரின் 'தந்ததாதுவை (Tooth relic) சீனாவுக்குக் கொண்டுபோக அனுமதி கோரினார். இவ்வனுமதி மறுக்கப்பட்டதுமல்லாமல் சிங்ஹோ திரும்பும் வழியில் அவரது பொருட்களும் நாட்டு மக்களால் கொள்ளையடிக்கப்பட்டன.

சிங்ஹோ கோபாவேசத்துடன் சீனாவுக்குத் திரும்பி பெரிய கடற்படையுடன் மீளவும் வந்து வீர அழகேஸ்வரனைப் பயமுறுத்தி ராஜ்யத்தைப் பறித்து வேறொரு இளவரசனை அரசனாக்கி, மன்னனையும் அவன் மனைவி மக்களையும் கைதிகளாகச் சீனாவுக்குக் கொண்டு சென்றார். தென் கரையோரமாகச் சீனாவுக்குப் போகும் வழியில் தமது வெற்றியைக் கொண்டாடும் பொருட்டு காலியில் அல்லது தெனவரையில் (Dondra) சிங்ஹோ இறங்கி இக்கல்வெட்டையும் நாட்டுவித்துச் சென்றூரெனக் கருதலாம்

சிங்கள மன்னன் தனது குடும்பத்தோடு கைதியாகக் கப்பலேற்றப்பட்டிருந்த அந்நேரத்தில் சிங்கள மொழி சிலாசாஸனத்தில் இடம் பெறவிட்டால் அதில் அதிசயம் எதுவும் இல்லை.

வீர அழகேஸ்வரன் கி. பி 1412-ம் ஆண்டில் விடுதலை பெற்றுத் தனது நாடு திரும்பிய அதே இரவில் கோரமான மரணத்துக்குள்ளானான். பண்டைக்காலலம்பகர்ண' எனும் இராச மரபிற் சேர்ந்த ஆரும் பராக்கிரமபாகுவின் எழுச்சியோடு நாட்டின் இப்பரிதாப நிலை மாறிவிட்டது. (கி. பி. 1412/15—1467)

கவனிக்கத்தக்க இன்னும் சில விஷயங்களை இங்கு குறிப்பிடலாம் சீன மொழியில்மாத்திரம் சாஸனத்தை எழுதாமல் தமிழிலும், ஈரானியத்திலும் எழுதுவதற்கு விசேஷ காரணமுண்டா? சீனாவின் செல்வாக்கையும் மாட்சியையும் சிறப்பிக்க சீன மொழியில் எழுதியிருப்பது ஆச்சரியம் ஆகாது.

இந்து மதத்துக்குரிய மொழியிலிருந்தாலும் 13 ம், 14-ம் நூற்றூண்டுகளில் தமிழ் பேசும் மக்கள் மேற்கரைப்பகுதிகளில் குடியேறி இருந்தமையாலும் தமிழ் ஒரு வர்த்தக மொழியாயிருந்தாலும் தமிழ் இக்கல்வெட்டில் இடம் பெற்றுள்ளது. இஸ்லாத்துக்குரிய மொழி அரபு ஆகிலும் மேலும் மத்திய கிழக்குநாடுகளில் மாத்திரமல்லாமல் முழு கீழ்த்திசையிலும் வர்த்தகப் பாஷையாக வியாபித்திருந்தாலும் ஈரானிய உபயோகித்தல் இயல்பாகும்.

### யாழ்ப்பாணம் சுப்பிறீம்கோடு (1852)

சாவகச்சேரியைச் சேர்ந்த மீசாலையென்னுங் குறிச்சியிலிருந்து ஐந்து கள்வர் பூநகரிக்குப்போய் அங்கே ஒரு கமத்திலே தனிப்பட இருந்த ஒரு கிழவனுடைய வீட்டை இடித்து அவனுடைய பொருள்களைக் களவெடுத்ததுமன்றிச் சாகத்தக்கனையாய் அவனை அடித்துக் காயப்படுத்தினார்கள். இவர்கள் ஐந்து பேருங் குற்றவாளிகளாகக் காணப்பட்டதினால் முதலாம் மூன்றும் நாலாம் மறியற்காரர் விலங்குடன் கடூர ஊழியமுஞ் செய்துகொண்டு மூன்று வருடம் மறியலிருக்கவும், இரண்டாம் மறியற்காரன் ஏழு வருடத்திற்குப் பிறவூருக்கு ஏற்றப்படவும், கிழவனை அடித்துக் காயப்படுத்தின ஐந்தாம் மறியற்காரன் ஐம்பது அடிபடவும் ஏழு வருடம் பிறவூருக்கு ஏற்றப்படவும் தீர்மானமாயிற்று

(உதயதாரகை 26-8-1852)

-தகவல்-மக்கள் கவிமணி

### செஞ்சொற் செயல்மா ஜெயவீரா!

(ஐயா வாணிதாசன்)

கருணை நிதியே! கலையாள் கவியே!
கன்னித் தமிழ்நா டகத்தோனே!
பெருமா நிலத்தைப் பிறங்கப் பேணும்
பிரதம நிதியே! பேரறிஞ!
தெரிதிரா விடமுன் னேற்றக் கழகச்
செஞ்சொற் செயல்மா ஜெயவீரா!
பரவும் பணியால் பாரில் நிறைந்தாய்
பண்பா! வாழிய வாழியவே!

### இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**18-3-71 வியாழன்**

செய்திகள்: காலை 6-45, 12-45, மாலை 6-00, இரவு 9-00

**344M & 61M**

6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை. 6-35 பௌத்த நற்சிந்தனை, 6-40 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 இசைவேளை, 8-15 பேச்சு, 8-30 சைவநீதி,

**344M & 49M**

9-30 முஸ்லிம் நிகழ்ச்சி, 10-00 தொழிலாளருடன், 10-30 படித்திலிருந்து. 11-15 சிறுவர் மலர், 12-00 எமததிதி, 1-05 பெண்ணுலகம்.

**344M & 61M**


4-30 சங்கமம், 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள்' 5-30 வயலின், 6-15 மெல்லிசை, 7-00 கத்தோலிக்க நிகழ்ச்சி, 7-30 விவேகச்சக்கரம் 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி 9-30 நிகழ்ச்சித் தொகுப்பு 9-45 பாட்டு, 10-00 செய்தித் தொகுப்பு.

### மலரக் காண்போம்

தீந்தமிழர் தமிழகத்தில் சேர்ந்துநின்று
திருக்குறளின் வழிசெல்லும் ஆட்சியொன்றை
ஈந்திருக்கும் இந்நேரம் இனியவேளை
எந்நாட்டின் கலைஞர்களும் மகிழும்ஆட்சி
சார்ந்ததனுல் மொழியதனுல் தரணிமீது
தமிழ்வாழும் இடமெல்லாம் இன்பம்! இன்பம்!
சேர்ந்ததுவே திலகமது அன்னைநெற்றி
திருவோடு விளங்குவதைக் காண்கின்றேமே!

அன்னையவள் ஒருத்தியென இருந்தபோதும்
அகிலமதில் சண்டையிடும் அண்ணன்தம்பி
தென்னகத்தில் இல்லையெனக் காண்கின்றேமே
தேர்ந்தவர்கள் இதற்குத்தான் மதிப்புத்தந்தார்
கன்னல்மொழி சமயமதில் மலரப்பெற்ருள்
காசினியில் பலர்நினைக்கும் வாய்ப்புப்பெற்ருள்
என்னவது திருக்குறளார் என்போரெல்லாம்
இனிமதிக்கும் ஒருகாலம் மலரக்காண்போம்

—நிலவின்தாசன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சிறுவர் கவி நயம் — 25

# தமிழ் மொழி வாழ்த்து!

அன்புள்ள தம்பி,
தங்கைகளே,

நீங்கள் பாடி அனுபவிப்பதற்காகச் சென்ற இருபத்திநான்கு பாடல்களை அறிமுகம் செய்துவைத்தேன். இது இறுதிக்கட்டுரை. இத்தக்கட்டுரையில் வாழ்த்தாக ஒரு பாடலை அறிமுகம்செய்யலாம் என்று எண்ணினேன். ஆம். நம் அருமைத் தமிழ்மொழியை வாழ்த்தாமல் எதை வாழ்த்துவது? தமது ஊனும் உயிருமாய் இருப்பது நமது மொழி. நமக்கு வாழ்வும் வளமும் அளிப்பது நமது தமிழ் மொழி. அதை வாழ்த்துவதும் போற்றுவதும் சிறுவர்களாகிய உங்கள் கடன்.

'வாழ்க நிரந்தரம், வாழ்க தமிழ்மொழி' எனப் பாரதியார் அருமையான வாழ்த்து ஒன்றைப் பாடித் தந்துள்ளார். "வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே' எனப்பாரதிதாசன் அருமையான பாடலைத் தந்திருக்கிறார். 'வள்ளுவன் தந்த திருமறையை' என்ற பாடலை நமக்களித்துள்ளார் தேசிக விநாயகம்பிள்ளை. சோமசுந்தரப்புலவரும் வேந்தனும் தமிழ்வாழ்த்தாக எவ்வளவோ பாடியுள்ளார்கள். இவைகள் நல்ல இனிய பாடல்கள், படித்து மகிழ வேண்டிய பாடல்கள். இந்த இந்தப்பாடலும் நல்ல சந்த அமைப்போடு பாலர்கள் பலர் சேர்ந்து தமிழ்மொழியின் பெருமையை, புலவர்களின் மேன்மையை உணர்ந்து பாடக்கூடிய பாடல்தான். எல்லாப் பாடசாலைகளிலும் பொதுமன்றங்களிலும் பாடினால் நன்றாய் இருக்கும். அதனால்தான் இப்பாடலை அறிமுகம் செய்திருக்கிறேன்.

ஆதியில் தமிழினில்
அரியதோர் இலக்கணம்
அமைத்தொளிர்
அகத்தியர் பெயர்
வாழி

நீதியில் நிகரற
நிலவிடு திருக்குறள்
நிறுவிய வள்ளுவர்
பதம்வாழி

அகத்தியம் என்ற இலக்கணநூலை ஆக்கித் தமிழ் மொழிக்கு வரம்பு செய்த அகத்தியரை வாழ்த்திக் கவிஞர் தொடங்குகிறார். நீதியில் நிகரற விளங்கு திருக்குறள் என்றவரியில் உள்ள ஒவ்வொரு சொல்லும் சிந்திக்கத்தக்கது.

சிலப்பதிகாரம்
தொல்காப்பிய சீவக
சிந்தாமணிசெய்
தோர்வாழி

புலவர்கள் பலர்பலர்
பரிவொடு பாடிய
புகழ்பெறு
நாலடி யார்வாழி.

அகத்தியரின் மாணாக்கர் தொல்காப்பியர். அவர் தொல்காப்பியம் என்னும் இலக்கணநூலைச் செய்தவர். இன்று நமக்குக் கிடைக்கும் நூல்களில் மிகப் பழையது அதுதான். அவரை வாழ்த்துவதோடு சிலப்பதிகாரம், சிந்தாமணி, நாலடியார் என்ற நூல்களை எமக்கருளிய புலவர்களையும் வாழ்த்த வேண்டும் என்கிறார் புலவர்.

தந்தையின் மொழிதவரு
ரகுநாதனின்
தகைமைசொல்
கம்பர்தம் நூல்வாழி

நந்தமக் காகவே
நல்வழி நீதி
நல்கிய அவ்வையின்
சீர்வாழி

தமிழ்த்தாயின் மணிமுடி இராமாயணம். அதைப் பாடியவர் கவிச் சக்கரவர்த்தி கம்பர். குழந்தைகளாகிய உங்களுக்கு ஏற்ற பாடல்களைப் பாடியவர் தமிழ் மூதாட்டி ஔவையார். தம்பி தங்கைகளே, யாரை மறந்தாலும் நீங்கள் ஔவையாரையும் கம்பரையும் மறத்தல்கூடாது. அவர்களை வாழ்க என்று வாழ்த்த வேண்டும்.

சிற்ப மேகவியம்
சீர்மிகு மருத்துவம்
செப்பிய புலவர்கள்
திறம்வாழி

அப்புத அடியவர்
ஆழ்வசர் பாடிய
அழகொளிர் பாடலின்
புகழ்வாழி.

சில நூல்களை அறிவுக்காகப் படிக்கிறோம். சிலவற்றைப் பொழுதுபோக்காகப் படிக்கிறோம். ஆனால் தேவார திருவாசகங்களை இறைவன் புகழ்பாடப் படிக்கிறோம். வெறும் உடம்பை வளர்க்கப் படிக்கும் படிப்பிலும் பார்க்க நமது உயிரை வளர்க்கும் பாடல்களை நிச்சயம் நாம் படித்தல் வேண்டும். அவைதான் நால்வர் பாடிய தேவாரதிருவாசகங்களும் ஆழ்வார்கள் பாடிய பாடல்களுமாகும். அவற்றை வாழ்த்தி வணங்கிப் படித்தல் உங்கள் கடன்.

உலகத்து மொழிகளில் மூத்தமொழி தமிழ்மொழி. அதனோடு தோன்றிய பல மொழிகள் அழிந்துவிட்டன. இன்றும் அழியாது நமது மொழி இருப்பதற்குக் காலம்தோறும் தோன்றிய புலவர்கள்தான் காரணம். இன்னும் இளமையோடு தமிழ்மாதா இருக்கவேண்டுமென்றால் இப்போதையபுலவர்களும், இனிமேல் வரும் புலவர்களும் புதுப்புது நூல்களை ஆக்கவேண்டும். அவர்களையும் நாம் வாழ்த்த வேண்டும்.

நல்ல இந்த தமிழ்மொழி வாழ்த்தைப் பாடியவர் மயிலைசிவலை முத்து. குழந்தைகளுக்காகவே வாழ்நாள் முழுதும் உலழைத்த பேராசிரியர். அவருடைய கவிதை நூல் முத்துப்பாடல்கள் அருமையான இந்தநூலை வெளியிட்டவர்கள் 'புக்ஸ் பிறைவேற் லிமிடெட், 13, பவழக்காரத்தெரு, சென்னை - 1. பாடலை ஒருசேர மீண்டும் பாடுங்கள்,

ஆதியில் தமிழினில்
அரியதோர் இலக்கணம்
அமைத்தொழிர்
அகத்தியர் பெயர்
வாழி

நீதியில் நிகரற
நிலவிடு திருக்குறள்
நிறுவிய வள்ளுவர்
பதம்வாழி

சிலப்பதிகாரம்
தொல்காப்பியம்சீவக
சிந்தாமணி, செய்
தோர்வாழி

புலவர்கள் பலர்பலர்
பரிவொடு பாடிய
புகழ்பெறு
நாலடியார் வாழி.

தந்தையின் மொழிதவ
றுரகு நாதனின்
தகைமைசொல்
கம்பர்தம் நூல்வாழி

நந்தமக் காகவே
நல்வழி நீதிகள்
நல்கிய அவ்வையின்
சீர்வாழி.

சிற்பமோ டோவியம்
சீர்மிகு மருத்துவம்
செப்பிய புலவர்கள்
திறம் வாழி

அற்புத அடியவர்
ஆழ்வார் பாடிய
அழகொளிர் பாடலின்
புகழ்வாழி.

நூறு நூறாயிரம்
நூல்கள் இயற்றிய
நுண்ணறி வாளர்தம்
வழி வாழி

வேறுநற் கலைபல
சீருடன் வெளிவர
[illegible] தமிழ்
மொழிவாழி.

— இரசிகமணி.கனக.செந்திநாதன் —

## தெரிந்து கொள்ளுங்கள்!

ரொறி செல்லீ என்னும் அறிஞர் காற்றின் அழுத்தத்தை அளக்கும் பாதரச பாரமானியைக் கண்டுபிடித்தார் வெவ்வேறுஇடங்களில் காற்றின் அழுத்தம் வெவ்வேருக இருக்கும் பொழுது இவ்விரு இடங்களுக்குமிடையே காற்றேட்டம் ஏற்படுகிறது. அதனால், வெவ்வேறு இடங்களில் காற்றின் அழுத்தம் எவ்வாறு உள்ளது என்பதை அளந்தறிவதன் மூலம் காற்றேட்டத்தின் போக்கை முன்கூட்டியே தெரிந்து கொள்ளமுடியும். இது வானிலை அறிவிப்பிற்குப் பெரிதும் உதவுகிறது.

0 0 0

காற்றிலுள்ள ஈரப்பதனை அறிந்து கொள்வது வானிலை ஆய்வாளர்களுக்கு மிகவும் முக்கியமாகும். ஈரப்பதனிலிருந்துதான் மேகங்களும் மூடுபனிகளும் தோன்றுகின்றன. நமது பூமியைப பசுமையாக்கும் மழையும் பனியும் பெய்கின்றன. 1825-ல்ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த ரிச்சர்ட் ஆஸமன் என்பவர் முதன்முதலாக ஈரமானியைக் கண்டுபிடித்தார். இது காற்றிலுள்ள ஈரத்தை மிகத் திருத்தமாக அளக்கப் பயன்படுகிறது.

0 0 0

1783-ல், பிரான்ஸ் நாட்டைச்சேர்ந்த மாண்ட்கோல்பியே சகோதரர்கள் காற்று மண்டலத்தின் உயர்ந்த அடுக்குகளில் ஆய்வுகள் நடத்தும் பொருட்டு முதன்முதலில் வானவெளியில் பலூன்களைப் பறக்கவிடத் தொடங்கினர். இப்பலூன்களில் மனிதர்களும் உயரப்பறந்து சென்று வானிலை ஆய்வுகள் நடத்தினர். காற்றுக்கடலின் உயர்ந்த அடுக்குகளில் காற்றேட்டங்களின் திசை, வேகம், காற்றின் வெப்பநிலை, ஈரப்பதன் முதலியவைகளைத் தெளிவாக அறியப் பலூன்கள் பயன்பட்டன.

## உங்களுக்குத் தெரியுமா?

**கேள்விகள்:**

1. உலகத்தில் மழைகூடிய இடம் யாது?
2. 1968-ம ஆண்டு ஜனவரி மாதம் 8-ந் திகதி நடைபெற்ற வேலைநிறுத்தத்தின்போது சுட்டுக் கொல்லப்பட்ட தேரோவின் பெயர் என்ன?
3. பர்மா எப்போது சுதந்திரம் அடைந்தது?
4. பாங்கொக்கில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில், இலங்கைக்கு இரண்டு தங்கப்பதக்கங்களைப் பெற்றுக் கொடுத்த வீராங்கனை யார்?
5. இலங்கைக்கு அண்மையில் விஜயம் செய்த கனேடிய பிரதமர் ரூடோ விவாகம் செய்த பெண்ணின் பெயர் யாது?
6. மிளகாய்க்கு வரும் நோய்கள் எவை?
7. பறக்கும் மிருகம் எது?
8. தோட்டக்காரனுக்கு உதவும் முக்கியபுழு எது?
9. பிரான்சியப் பாராளுமன்றத்தின் பெயர் என்ன?
10. ஜோர்ஜ்ஸ்ரிடிபன் கண்டுபிடித்த புகையிரதத்தின் மணித்தியால வேகம் என்ன?

**விடைகள்:**

1. சிராப்பூஞ்சி.
2. ரத்தினசாரதேரோ.
3. 4—1 1948ம் ஆண்டு.
4. ஹாசியன் றேசா.
5. மார்கிரட்.
6. அழுக்கணவன், சுருந்தடி.
7. வௌவால்.
8. மண்புழு.
9. ஸ்ரேட் ஜெனரல்.
10. மணித்தியாலத்துக்கு 30 மைல்.

அனுப்பியவர்.
கனகேஸ்வரன் வைத்திலிங்கம், ஊரெழு.

## காலைக் காட்சி!

[கே என் ராஜா]

காலைப் பொழுது புலருது
கரிய இருளும் அகலுது
கீழை வானில்
மெல்லெனவே
கதிரும் கிளர்ந்து
எழுந்தது

காக்கைக் கூட்டம்
வருகுது
காக்கா என்று கத்துது
கதிரவனின் வரவு
தன்னைக்
காசினிக் கெடுத்
தியம்புது.

குருவிக் கூட்டம் வருகுது
கீகீ என்று கத்துது
குருவிக் கூட்டம்
ஒன்றுகூடி
குதூகலித் தெங்கோ
செல்லுது

மலர்கள் எல்லாம்
முகைஅவிழ்த்து
மகிழ்ந்தும் மெல்லப்
பூக்குது
மலர்களின் வாசனை எம்
மனதைப் பற்றி
இழுக்குது

பள்ளி செல்லும்
சிறுவர்கூட்டம்
பவனி எங்கும்
செல்லுது
துள்ளி துள்ளி ஓடியாடி
துரித முடன் செல்லுது

எங்கு நின்று நோக்கினும்
எழில் நிரம்பி வழியுது
பொங்குமெம் உள்ளந்
தன்னில்
புத்து ணர்ச்சி
பிறக்குது.

வாருங்கள்! வாருங்கள்!! வாருங்கள்!!!

ரொலறம்ஸ் - பொகுமால்ஸ்

ஸ்தாபனத்தாரின்

இருப்பு எடுக்கும் மலிவு விற்பனை

12-3-71 தொடக்கம் 31-3-71 வரையும் சகல விற்பனைப் பகுதிகளிலும் விலைகள் மிக மிகக் குறைக்கப்பட்டுள்ளபடியால் மக்கள் குவிந்த வண்ணம் இருப்பதால் குறைந்த விலையில் சிறந்த பொருட்கள் பெறுவதற்கு இன்றே விஜயம் செய்யுங்கள்.

குறிப்பு:- லங்கா மணிப்புரி சாறிகள் கொள் விலையிலும் பார்க்க குறைந்த விலையில் விற்பனையாகின்றன.

ரொலறம்ஸ் - பொகுமால்ஸ்

46 — 49; பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

( போன்: 7099 )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவிரி ஓடுகின்றாள்

இந்த மூன்று நாட்களில்தான் எத்தனை மாற்றங்கள்! சூழ்நிலையின் தன்மைக்கு ஏற்றமாதிரி மனமும் மாறிவிடுகின்றதே. யாழ்ப்பாணத்தில் இருக்கும்பொழுது ஏற்படாத உணர்ச்சிகள் இந்த மண்ணில் காலடி எடுத்து வைத்ததுமே பிரவாகம் எடுத்தல்லவா பாய்கின்றன.

புண்ணியபூமி என்று முன்னோர்கள் தெரியாமலா கூறிவைத்தனர். ஆறும் அதன் அழகும் அந்த ஆற்றுநீரில் தமமைமறந்து ஸ்நானம் பண்ணிக்கொண்டு நிற்கும் மக்களும் அதனிருமருங்கும் ஓங்கி வளர்ந்த விருட்சங்களும். அந்த விருட்சங்களுக்கூடாக இடையிடையே நிவந்தோங்கி விளங்கும் கோவில் கோபுரக் கலசங்களும் மனத்தை எங்கேயோ இழுத்துச் செல்கின்றனவே.

நாம் உலாவும் இடங்கள், பார்க்கும் பொருட்கள் யாவற்றிலும் எங்கும் காணுகை தெய்வீக மணம் பரவிக்கொண்டிருக்கிறது

கூடவே ஒரு வேதனை...

இந்த மண்ணில் பிறக்காமல் போனேனே என்று ஒரு தாபம் மனதை உறுத்தவும் செய்கிறது

விடிந்ததும் காவிரியில் குளிக்கப் போகின்றேன் மனம் களிப்பில் மிதக்கின்றது. ஆண்டுக்கணக்காக எண்ணற்ற கதைகளிலும் கவிதைகளிலும் படித்த காவிரி! ஆஈ! அவள்தான் எத்தனை அழகாக ஓடுகின்றாள். ஒருவரின் சொல்லுக்கும் கட்டுப்படாமல் தன் இஷ்டப்படி வளைந்து நெளிந்து ஒரு நளினமான லாவண்யத்தோடு கவலையற்று பருவப் பூரிப்பிலே வளையவரும் இளம் பெண்ணைப் போல...

அவளுடைய அழகை அவள்தரும் சுகத்தை அவள் தன் அரவணைப்பில் ஆதரவு பெற்றுச் செழித்துக் கொழிக்கும் அயலிடங்களையெல்லாம் ஆவல் பொங்கும் விழிகளினால் அள்ளிப் பருகப் போகின்றேன்.

எனக்கு இந்த வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த என் சித்தப்பா கேசவனை நன்றியுடன் திரும்பிப் பார்த்தேன்.

ஆனால் அவரோ...

நான் ஒன்றும் புரியாமல் விழித்தேன்.

இவருக்கு என்ன நேர்ந்துவிட்டது?

யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டபோதெல்லாம் அவர் வெகு உற்சாகமாகத்தானே இருந்தார். நான் இந்தப் பிரயாணத்தை மேற்கொண்டதே அவரது தூண்டுதலால்தானே! என் தந்தையின் ஒன்றுவிட்ட தம்பியான அவர் ஆசிரியராய் இருந்து ஓய்வு பெற்றவர். பிரம்மசாரி. நான் கல்லூரியில் படிக்கும்பொழுது உயர்வகுப்புகளில் தொடர்ந்து தமிழும் சமயமும் போதித்தவர். தமிழ்நாட்டில் சுதந்திரப் போராட்டம் நடந்த சமயத்தில் இங்கு ஒரு பத்திரிகையில் உதவி ஆசிரியராகப் பணி புரிந்தவர். இது அவர் வாயிலாகவும், மற்றவர்கள் சொல்லியும் கேட்ட விஷயம்.

வகுப்பில் படிப்பிக்கும் சமயங்களில் தன்னுடைய தமிழ்நாட்டு அனுபவங்களை சுவைபடக் கூறுவார். தென்நாட்டு ஸ்தலங்களை அவற்றின் சிறப்புகளை அங்குள்ள இயற்கை அழகுகளையெல்லாம் இலக்கியச் சுவை சொட்ட படம் எழுதிக் காட்டுவதுபோல அவர் கூறுவதை மகுடிக்கு மயங்கி நிற்கும் அரவம்போல் சொக்கிப்போய் கேட்டுக்கொண்டிருப்போம். அப்படிப்பட்டவரோடு சென்று அந்த இடங்களையெல்லாம் பார்க்கப் போகின்றேன் என்று எண்ணி எண்ணி அகமகிழ்ந்தேன்.

ஆனால் எந்தக் காவிரியைப் பற்றி இன்பக் கதைகள் எல்லாம் சொன்னாரோ அவர்...

சென்னையிலிருந்து இரவு மெயில்வண்டியில் திருச்சியை நோக்கி வந்துகொண்டிருந்தோம். மார்கழி மாதத்தில் வரும் வைகுண்ட ஏகாதசித் தினத்தன்று ஸ்ரீரங்கத்திலிருக்க வேண்டுமென்பது எங்கள் திட்டம் இருளைக் கிழித்துக்கொண்டு தெற்கே செல்லும் வண்டி ஓடியது. இரண்டாம் வகுப்புப்பெட்டி. தூக்கம் சரியாக வரவில்லை. கோழித் தூக்கம் தூங்கிக்கொண்டே வந்தோம் விடியற்காலை நாலு மணி வரையிலிருக்கும். வண்டி ஒரு பாலத்தின்மேல் மெதுவாகச் சென்றது.



'தம்பி இதோ பார். இது தான் காவேரிப் பாலம்! இது அகண்ட காவேரி' அடுத்த ஸ்டேசன் ஸ்ரீரங்கம்!' சித்தப்பாவின் குரல் என்னைத் திடுக்கிட வைத்தது. அவரது குரலில் காணப்பட்ட ஒரு ஏக்கம் என்னை வியப்பில் ஆழ்த்தியது. அவர் நிலைகொள்ளாமல் தவித்தவர் மாதிரி தோன்றினார். இரு கைகளாலும் ஜன்னல் விளிம்பைப் பற்றியபடியே வெளியே கூர்ந்து நோக்கினார்.

சுக்கில பட்சத்துச் சந்திரனும் வெளிறிய தன் கிரணங்களை ஒடுக்கிக்கொண்டு மேற்குவானிலே மறைந்துவிட்டிருந்தான். அவன் மறைந்த சுவடு மேல்வானத்திலும் பரந்து நின்ற அகண்ட காவிரிநதியின் நீர்ப்பரப்பிலும் லேசாகத் தெரிந்தது பயங்கர அமைதி அந்த அமைதியை நோக்கிப் பாய்கின்றது நதிப்பிரவாகம். அந்த அமைதிக்குள்ளே கப்பிக் கவிந்திருந்த இருளுக்குள்ளே அவர் எதையோ தேடுவதுபோல பார்த்துக்கொண்டிருந்துவிட்டு ரெயில்வண்டி பாலத்தைக் கடந்ததும் 'உம்! காவேரி போய்விட்டாள்' என்று முணுமுணுத்தபடியே முகத்தை என்பக்கம் திருப்பினார்.

பெட்டியிலிருந்த மங்கலான வெளிச்சத்தில் அவர் கன்னத்தில் வழிந்த கண்ணீர் கோடுகள் துல்லியமாகத் தெரிந்தன.

என்னுள் ஏதேதோ உணர்ச்சிகள்...!

'என்ன சித்தப்பா இது? உங்களுக்கு என்ன வந்துவிட்டது?

அவர் நெஞ்சைப் பிளந்து கொண்டு வந்த நெட்டுயிர்ப்பிலே 'ஒன்றுமில்லை' என்று அவர் கூறிய பதில் கரைந்தது. அவசரம் அவசரமாக கண்களை மேற்துண்டால் ஒற்றிவிட்டார் அவர்.

இதற்குள் ஸ்ரீரங்கம் ஸ்டேசன் வந்துவிட்டது. நான் ஜன்னலுக்கூடாகப் பார்வையைச் செலுத்தினேன். மார்கழி மாதத்துப் பனியில் ஸ்ரீரங்கமே குளிரில் நடுங்கிக்கொண்டிருந்தது. வண்டி நின்றதுகூடத் தெரியவில்லை. அங்கொன்று இங்கொன்றாக இரண்டொரு பிரயாணிகளின் அரவம் கேட்டது. அந்த மோகனமான அமைதியிலே மிதந்து வந்துகொண்டிருந்தது திருப்பாவை இசை. 'சங்கே நீ என்ன தவம் செய்தாயோ? மாதவனின் இதழ் சுவைக்க' என்ற பொருள் பதிந்த பாடல். ஆண்டாள் தன் ஆராமையை வாய்விட்டுக் கூறும் இடம் தம்பி.'

சித்தப்பாவின் இலக்கிய பாடம் ரெயில் வண்டியில் நடந்தது.

யாழ்ப்பாணத்தில் விழா நிகழ்ச்சிகளில் காதைக்கிழித்துக் கொண்டு போகின்ற மாதிரி ஒலிபெருக்கி வைப்பார்களே!

இப்பொழுது அதை நினைத்துக்கொண்டேன். ஆனால் இங்கோ...

ரங்கநாதர் ஆலயக்கோபுரத்தில் அமைந்த ஒலிபெருக்கியும் அந்தச் சங்கின் தவம் செய்தது போலும். இல்லாவிட்டால் உள்ளத்தை உருக்கும் இசையை அது எப்படிப் பொழிய முடியும்?

ரெயில் நிலையத்து வெளிச்சத்தைக்கூட அந்தப் பனி மூட்டமும் இருளும் கப்பிக்கொண்டிருந்தன அங்கொன்று இங்கொன்றாக விழும் பனித்துளிகளின் ஓசை அவ்விடத்து அமைதியை அதிகப்படுத்தியது.

"ரோஜா அப்பு... கதம்போ ஓம்...

அம்மா பூவாங்கலிங்களா?'

அந்த மனமோகன அமைதியிலே பூக்காரியின் ஓசை சதங்கை ஒலிபோலச் சன்னமாகக் கேட்டது. பிளாட்பாரத்தில் இறங்கிய நான் சுற்றுமுற்றும் பார்த்தேன். ரோஜாப்பூ என்றால் எனக்கு கொள்ளை ஆசை இரண்டொரு பூ வேண்டிக்கொள்ள என் மனம் துடித்தது சித்தப்பா அதைப் புரிந்துகொண்டார் 'தம்பி பூக்காரிகளை இந்த நேரத்திலே பிளாட்பாரத்தில்வந்து பூ விற்க விடமாட்டார்கள். வண்டிக்கு அந்தப் பக்கத்தில் கூவிக்கொண்டு போகின்றாள் காலையில் கோவில் வீதியிலேயே வேண்டிக்கொள்ளலாம் வா' என்று கூறிப் பிளாட்பாரத்துக்குவெளியே என்னை அழைத்து வந்தார்.

## — து. வைத்திலிங்கம் —

இருவருமாக ஒரு வண்டி வைத்துக்கொண்டு சித்தப்பாவின் நண்பருடைய வீட்டில் போய்த் தங்கினோம். நன்றாக விடிந்தபின் ஸ்ரீரங்கத்துச் செழிப்பையெல்லாம் அள்ளிப் பருகிக்கொண்டு அம்மா மண்டபத்துப் படித்துறை நோக்கிச் சென்றோம். மாவும். பலாவும், வாழையும், கமுகும், தென்னையும் செழித்து வளர்ந்திருந்த அவ்விடத்துச் சூழலில் என்னைப் பறிகொடுத்து நின்றேன். மாமரங்களின் கிளைகள் பாவிப் படர்ந்து காவிரி நீரில் படிவதும் நிமிர்வதுமான காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது ஆண்களும், பெண்களும், குழந்தைகளும், பெரியவர்களும் காவிரி நீரில் மூழ்கித் திளைத்தனர். ஆற்றுமணலில் குடங்களை விளக்கிப் பொற்குடங்களைப் ... [illegible] இடுப்பில் தூக்கி வைத்துக்கொண்டு சென்றார்கள். இலங்கையிலிருந்து முதன்முதலாகச் சென்ற எனக்கு இவை எல்லாம் புதுமையாய் இருந்தன. இலக்கியங்களில் படித்தேனே அன்றி. இப்படி இன்று கண்ணால் காணக்கூடியதாக இருந்தது காவிரி நாகரிகம் தமிழ் நாட்டுக் காட்சி! மனதைப் பறிகொடுத்து நெடுநேரம் சிலையாக நின்றேன்.

காவிரியின் குளிர்ந்த நீரில் ஸ்நானம் பண்ணினோம். குப்புறப் படுத்துக்கொண்டால்தான் நீர் முதுகை நனைக்கும்.

எனக்கு இது புதுமையாக இருந்தது. அப்படியே படுத்துக்கொள். காவிரித் தாய் உன் உடலிலுள்ள நோய்களையெல்லாம் கழுவிக்கொண்டு போய்விடுவாள்' என்றார் சித்தப்பா.

ஸ்நானம் முடிந்தது. புத்துணர்ச்சியுடன் புறப்பட்டோம். பிரயாண அலுப்பெல்லாம் பறந்து விட்டது.

கோவிலுக்கு வந்ததும் அவரின் கலகலப்பு மறுபடியும் வந்துவிட்டது. ஒவ்வொரு இடங்களையும் தனக்கே உரிய இயல்புடன் சிறப்பாக வர்ணித்து காட்டிக்கொண்டு வந்தார்.

அனந்தசயனத்தில் மோனத்துயில் புரியும் காட்சி அளித்த ஸ்ரீரங்கநாதப் பெருமானை மனமாரச் சேவித்தோம். அர்ச்சனையெல்லாம் செய்வித்து பிரசாதம் பெற்றுக்கொண்டு வெளியே வந்து ஹோட்டல் ஒன்றில் கோப்பி குடித்துவிட்டு ஸ்டேசன் பக்கம் சென்றோம்.

விடியற்காலையில் பனி மூட்டத்தில் பார்த்த காட்சிகள் இப்பொழுது காலைக் கதிரவனின் மஞ்சள் கதிர்பட்டு மேலும் சோபையைத் தந்தன. ஸ்ரீரங்கம் ஒரு தீவைப்போல் அமைந்துள்ளது. காவிரிநதி ஸ்ரீரங்கத்துக்கு ஆரம்சாத்தினாற்போல் ஊரைச்சுற்றி ஓடுகிறது. அவ்விடத்தின் செழிப்புக்கு அதுதான் காரணமாயிருக்க வேண்டும்.

காவிரியின் அரவணைப்பிலிருக்கும் ஸ்ரீரங்கத்தின் அழகு சொல்லுந்தரமன்று

ஒதுக்குப்புறமாக இருந்த ஒரு சீமெந்து பலகையில் சித்தப்பாவும் நானும் அமர்ந்தோம். எங்களிடையே சிறிது மௌனம் நிலவியது. அவர் பழையபடி கற்பனுலோகத்துக்குப் போய் விட்டார்.

இதேதடா சங்கடமாய்ப் போய்விட்டது ஸ்ரீரங்கத்து மண்ணில் மிதித்ததும் மனுஷன் இப்படி மாறிவிட்டாரே. 'என்ன சித்தப்பா இது அடிக்கடி ஏதோ சிந்தனையில் மூழ்கி விடுகிறீர்களே ஸ்ரீரங்கத்துக்கும் உங்களுக்கும் பொருந்தாது போலிருக்கே!' என்று அவரைத் தூண்டி இழுத்தேன்.

'தம்பி. இது என் வாழ்க்கை திசைதிரும்பிய இடம். வா ஆற்றங்கரைப் பக்கமாக போயிருந்து சொல்கிறேன். —அவர் இருக்கையை விட்டு எழுந்தார்.

(12-ம் பக்கம் பார்க்க)



# கையிருப்பில் கிடைக்கும்

வாக்கர்ஸ் யாழ்ப்பாணம்

WALKER-WOLSELEY

நீர்ப்பாசன பம்புகள்

★ மணிக்கு 10,000 கலன்
★ குறைந்த இயக்கச் செலவு
★ பராமரிப்புச் சுலபம்



2" பெற்ரோல் / மண்ணெண்ணெய் பம்ப்

நீர்ப்பாசன. மற்றும் பொதுவான இறைப்பு வேலைகளுக்கான பிரசித்திபெற்ற நம்பகமான வாக்கர் வூல்ஸ்லி பெற்ரோல்/ மண்ணெண்ணெய் யந்திரங்கள் இப்பொழுது வாக்கர் இன்டஸ்ரீஸ் (சிலோன்) லிமிட்டெட்டால் இலங்கையில் தயாரிக்கப்படுகின்றன;

WI

வாக்கர் இன்டஸ்ரீஸ் தயாரிப்பு

பக்கபலமான பராமரிப்பு ஊழியர்களுடன் சகலவித உதிரிப்பாகங்களும்.

வாக்கர்ஸ் யாழ்ப்பாணம்

இல; 37/39, ஸ்ரான்லி ரேட், யாழ்ப்பாணம்

தொடர்பு கொள்க:


திரு: ஏ. சி. ஜோசெப (மனேஜர்

தொலைபேசி: 7031


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கைரேகை அனுபவம்- 13

# செவ்வாய் மேடும் இருதய ரேகையும்



படத்தில் a தொடக்கம் g வரை ஏழு மேடுகள் இருக்கின்றன. இதுவரைமுறையே குருமேடு சனிமேடு சூரிய மேடு, புதன்மேடு சுக்கிர மேடு, சந்திரமேடு ஆகிய ஆறுமேடுகளைப் பற்றி ஆராய்ந்தோம். இப்பொழுது ஏழாவது மேடாகிய செவ்வாய் மேட்டைப் பற்றிப் பார்ப்போம். படத்தில் f பகுதியாகிய சந்திரமேட்டுக்கும் d பகுதியாகிய புதன் மேட்டுக்கும் இடையில் g பகுதியாகிய மேடு தெரிகின்றது. இதுவே செவ்வாய் மேடாகும். செவ்வாய்மேடு வீரத்திற்குக் காரணமாயிருக்கின்றது. செவ்வாய்மேடு நன்கு அமையப்பெறுதவர்கள் வீரம் குறைந்தவர்களாகக் காணப்படுவர் வீரம் என்று கூறும்பொழுது மனத்தில உண்டாகும் துணிவு ஓர்மம் ஆகியவைகளையே இங்கு குறிக்கும். செவ்வாய் மேடு நன்கு அமையாதவர்கள் கருமங்களை அதிகம் அக்கறையில்லாமலும் ஆர்வமில்லாமலும் செய்வார்கள்.

செய்வாய்மேடு நன்கு அமைந்தவர்கள் விடாமுயற்சியுடனும் துணிவுடனும் திடமான நம்பிக்கையுடனும் கருமமாற்றுவார்கள். எவ்வித இடர் வந்தபொழுதும் கருமமே கண்ணுயிருப்பர். செவ்வாய்மேடு நன்கு அமையப்பெற்று அகண்ட கையையுடையவர்கள் ஏனைய ரேகைகளின் பலத்துடனும் பொலிஸ், பட்டாளம் போன்ற பகுதிகளில் கடமை புரிகின்றார்கள். இவர்கள் மிகுந்த புஜபலமுள்ளவர்களாகவும் காணப்படுகின்றனர்.

செவ்வாய்மேடு அளவுக்கதிகமாயிருப்பின் சாமானியமாய் மேடு அமைந்த தன்மைக்கு மாறுன பலனையே கொடுக்கும். இத்தகையவர் முரட்டுச் சுபாவம் உள்ளவர்களாகக்காணப்படுவர். சாதாரண விடயத்தையும் பெரிதாகக் கருதி மிகுந்த குரலில் ஏசுவர். இவர்கள் மிகுந்த பொறுமையுள்ளவர்களாகக் காணப்படுவர். கொலையைக் கண்டோ அல்லது இரத்தத்தைக் கண்டோ திகிலடைபவர்கள் இருக்கின்றார்கள். ஆனல் செல்வாய்மேடு அதிகமானவர்கள் கொலை செய்யவோ அல்லது கொலைக்கு உடந்தையாகவோ இருப்பதில் பின்வாங்கமாட்டார்கள்.

ஏனைய மேடுகளில் காணப்படும் குறிகளைப்போல் செவ்வாய்மேட்டிலும் குறிகளைக் காணலாம். ஆனல் எவ்லோருடைய கைகளிலும் எல்லா மேடுகளிலும் எல்லாக் குறிகளையும் காண்பதரிது. இவைகள் தோன்றிப் பின் மறையும்வரையுள்ள இடைக்காலத்தில் தன்மைகளுக்கேற்றவாறு நல்ல பலனும் தீய பலனும் நிகழும். அவற்றிற்கு ஏற்றவாறு காலத்தின் தன்மையும் கணிக்கப்படுகிறது நல்ல பலனே அல்லது தீய பலனே என்று அறிவதற்கு கிரகமேடுகளின் தன்மைகளையும் ரேகைகளின் தன்மைகளையும் நன்றாகப் பரிசீலனை செய்ய வேண்டும். சிலருடைய கையில் செவ்வாய் மேட்டிக் தனித்த ஒரு ரேகை இருக்கக் காணலாம். கிரகமேடுகளில் பொதுவாக ஒரு நீண்டரேகை இருப்பது விசேடமானது. செவ்வாய் மேட்டில் ஒரு ரேகையிருப்பது நல்லது. இத்தகையவர் மிகவும் மனத்துணிவும் வீரத்தன்மையும் உள்ளவராகக் காணப்படுவர். இவர்கள் பெரும்பாலும் யந்திர சம்பந்தமான தொழில்களில் ஈடுபடுவர். மிகுந்த பலசாலியாகவும் சண்டித்தனப் போக்கையுடையவர்களாயும் இடையிடையே மற்றவர்களுக்குத் தெரிந்தோ தெரியாமலோ மதுவருந்துபவர்களாகவும் காணப்படுவர். சிலருடைய கையில் செவ்வாய் மேட்டில் அனேக சிறு ரேகைகள் இருக்கக் காணலாம். இவர்கள் முரடர்களாயும் மூர்க்கத்தனம் உள்ளவர்களாயும் காணப்படுவர். எந்த ஒரு கிரக மேட்டிலும் கறுப்போ அல்லது சிவப்போ புள்ளியிருப்பது நல்லதல்ல. அப்படிப் புள்ளியிருந்தால் அந்த மேட்டின் தன்மைக்கேற்றுற் போல் அதற்கு மாறுன பலனைச் செய்யும். செவ்வாய் வீரத்திற்கு ஆதாரமானது வீரத்தன்மையினுல் நல்ல பதவியும் பெயரும் புகழும் கிடைக்கும். இந்தநல்லபலனுக்குபதிலாக செவ்வாய் மேட்டில் ஒரு புள்ளியிருந்தால் ரத்தக்காயமுண்டாகும். அதுவும் சண்டைசச்சரவு செய்வதன் மூலம் ஏற்படுகின்றது. சிலருடைய கையில் செவ்வாய் மேட்டில் சூலக்குறியிருக்கக் காணலாம். ஆனல் அத்தகையவர் மனவாட்டத்துடனும், அமைதியற்றும் இருப்பர். இந்தநிலை சூழ்நிலை சந்தர்ப்பத்திற்கேற்றவாறு நிகழுகின்றது. இத்தகையவர் பிரதானமாகச் சண்டை சச்சரவினுல் அமைதியில்லாதிருப்பர். இவ்வாறுன நிலையில் சிலர் தனது எதிரியைக் கொலை செய்யவும் பின்வாங்கமாட்டார்கள். இவ்வாறு கொலை செய்பவர்களுடைய கையில் பிரதானமாகச் செவ்வாய் மேட்டில் நட்சத்திரக் குறியிருக்கக் காணலாம். செவ்வாய்மேட்டில் சதுரம் வட்டம், ஏணிபோன்ற ரேகைகள் இருக்கக் காணலாம். இந்தக் குறிகள் துர்க்குறிகளே. இவைகள் பெரும்பாலும் உடம்பில் காயம் உண்டாவதையும், அதனுலுண்டாகும் தீங்கையும் காட்டுவனவாகும். சிலருடைய கையில் செவ்வாய் மேட்டில் மூக்கோணம் இருக்கக் காணலாம். இந்தக்குறி மிகவும் அதிர்ஷ்டமானதே. கடற்படை, தரைப்படை போன்ற பகுடாளத்தை நிர்வகிப்பவருடைய கையில் இக்குறியிருக்கும். இக்குறி மிகமிகச் சிலருடைய கையிலே, அதுவும் செவ்வாய் மேட்டிலே தோன்றியிருக்கும்.

இதுவரை கையிலுள்ள கிரகமேடுகள் ஏழினுடைய தன்மைகளையும், அந்தந்த மேடுகளையும் குறிகளினுடைய தன்மைகளையும் அவற்றின் பலாபலன்களையும் பற்றி அறிந்தோம். இந்த மேடுகளும் இவற்றின் தன்மைகளின்படியும் எங்களுக்கு எவ்வாறு பலன்கள் ஏற்படுகின்றனவென்பதை பின்வரும் உதாரணமூலம் அறியலாம். உதாரணமாக ஒரு செடியை நாம் நிலத்தில் நாட்டும்பொழுது, அந்தச் செடி அந்தமண்ணில் வளருவதற்கு ஏற்ற தன்மையுடையதோ? என்று மண்ணை ஆராய்ச்சி செய்கிறோம்: மண்ணினுடைய தன்மை பலவாக இருக்கலாம். இவ்வாறே கிரக மேடுகளினுடைய தன்மைகளும் பலவாறுகவிருக்கின்றன. நிலத்தில் வைத்தசெடி மண்ணின் தன்மைக்கேற்றவாறு வளர்ந்து வருகின்றது. மனிதனும் கிரகமேடுகளின் தன்மைக்கேற்றவாறு அமைகிறுன். செடி வளர்ந்து பலனைக்கொடுப்பதுபோல் கிரக மேடுகளிலுள்ள ரேகைகளும் விருத்தியடைய அடைய மனிதனும் பலவாறுன பலன்களை அனுபவிக்கிருன். 'தினை விதைத்தவன் தினை அறுப்பான், வினைவிதைத்தவன் வினை அறுப்பான்' என்னும் முதுமொழியைப் போல்தான் அவர்களது நிலை இருக்கும். இங்கே நிலத்தைக் கிரகமேடுகளும், அதில் வளரும் செடியை ரேகைக்கும் ஒப்பனை உதாரணமாகக் கூறப்பட்டுள்ளது. ஆனல் விஞ்ஞானரீதியில் மண்ணினுடையதும், மரத்தினுடையதும் தன்மையை மாற்றியமைத்து எங்களுக்கு விரும்பியவாறு பலனைப்பெறலாம். ஆனல் மானிடர்களாகிய எங்களுடைய பலாபலன்களை எவ்வழிகளிலும்மாற்றியமைப்பதென்பது, முடியாத ஒன்றுகும். இவற்றின் தன்மைகள் மாறவேண்டுமானல் இறைவன் அருள் பெற வேண்டும். 'தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கன்றி மனக்கவலை மாற்றல் அரிது' என்றும் 'பிறவிப்பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவன் அடி சேராதார்' என்றும் கூறிய வள்ளுவர் வாக்கை இங்கு நினைவுகூருதல் நன்று.

இப்பொழுது இருதய ரேகையைப்பற்றிச் சிறிது சிந்திப்போம் படத்தில் தெரிவது போல் இருதயரேகை (ரேகை இலக்கம்-3) குரு மேட்டிற்கும், சனிமேட்டிற்கும் இடையில் ஆரம்பமாகிக் கிரக மேடுகளுக்கடியில் குறுக்கே அமைந்துள்ளது. இரு மேடுகளுக்கும் இடையில் ஆரம்பமாகிய ரேகை b மேடாகிய புதன்மேட்டின் கீழ்பகுதியில் மூடிவுற்றுள்ளது. இவ்வாறு சிலருக்குமாத்திரம் அமைந்திருக்கும். இவ்வாறு அமைந்தால் சந்தோஷக் குறை-குறைவான சம்பவங்கள் இடையிடையே வாழ்வில் நேரும். இதனல் தாக்கம் ஏற்படக்கூடியதாகவிருக்கின்றது இருதய ரேகையைக்கொண்டு ஒரு மனிதனின் தேகநிலையையும், மனநிலையையும், குணத்தன்மையையும்பற்றிக் கூறலாம். இருதயரேகை சிலருக்கு இல்லாமலிருக்கும். இத்தகையவர்கள் பேராசையும், தன்னயமும் உடையவர்களாகக் காணப்படுவர். சிலருக்கு


**— மு. குணரத்தினம் —**

(7-ம் பக்கம் பார்க்க)



## எரிச்சலா?

சில நாட்களாக, சுகக் குறைவா? களைப்பால் எழுச்சியின்றி, செய்யும் வேலையில் சிரத்தையற்று குழம்புகிறீர்களா? டியுரோல் அருந்துக. விட்டமின் பி. கொம்பிளக்ஸ்ம், இரும்புச்சத்தும் உட்கொண்ட அருமையான செரிப்பழ ருசியுடைய டியுரோல் தன் உள்ளடங்கிய முழுமையான உணவுப் பலத்தால் சக்தி அதிகரிக்கச் செய்து உங்களுக்கு புதுப்பலமளிக்கும்; வாழ்க்கையில் சிறப்புத்தோன்றும். டியுரோல் இரத்த புஷ்டியை ஊக்குவிக்கும்; உணவில் மெய் விருப்பு உண்டுபண்ணி, தளர்ந்த நரம்புகளுக்கு மறுமலர்ச்சியளிக்கவென விசேஷமாக மருத்துவ ரீதியில் தயாரான டானிக். சோர்விலிருந்து உங்களைத் தட்டியெழுப்பி புத்துயிர் அளிக்க வல்லது. ஓர் டியுமெக்ஸ் தயாரிப்பு.




டியூரோல் அருந்தி புத்துயிர் பெறுக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாமை, தினை, வரகு, இருக்கையில் கோதுமைக்கு ஏங்குவதேன்?

எங்கள் நாடு வளம்நிறைந்தது. இருந்தும் எமது உணவுத்தேவைக்கு நாம் இன்னும் சிலவருடத்தில் பிறநாடுகளை நம்பிக் கையேந்தி நிற்கவேண்டிய நிரந்தரநிலையொன்று உருவாகிவருகிறது. இந்நாட்டுக்குரிய முக்கிய உணவுப்பொருள் அரிசியே. அரிசியை அடுத்து நம் முன்னோர் குரக்கன், சாமை (சாமி), தினை வரகு, உழுந்து, பயறு எனப் பல வித உணவு வகைகளைப் பேணிப் பயன்பெற்றுவாழ்ந்தனர். இதனால் உணவுஉற்பத்திபெருகி நாடு வளம் பெற்றது. வேலை வாய்ப்பு இருந்தது. சத்துள்ள உணவுகளை உண்டு மக்கள் நோயின்றி வாழ்ந்தனர். நிலத்தைப் பொறுத்த அளவிலும், நெற்செய்கைக்குப் பொருந்தாத இடங்கள்வீண் போகவிடப்படவில்லை. அவை சிறுதானியத்துக்குரிய 'புன்செய்' நிலமாகப் பயன்படுத்தப்பட்டன.

ஆனால் இன்றைய நிலை என்ன? உள்ளூர் உழுந்தும் பயறும் கிழங்கிற் பலவகை மறைந்துவிட்டன. பனையும் பலாவும் அழிக்கப்படுகின்றன. சிறுதானியச் செய்கை அற்றுவிட்டது. விளைநிலம் பல வெறும் கல்நிலம் ஆகின்றன,

உரமும்சுவையும் உடைய உள்ளூர் உணவுப் பொருளை அழித்துகோதுமையை அத்தியாவசியப்பொருளாகஇன்று இலங்கைமுழுதுக்கும் அரிசிக்கு அடுத்த அதிமுக்கிய உணவுப்பொருள் கோதுமையே. கிராமத்திலிருந்து நகரம்வரை எங்கும் கோதுமைமா உணவே பெருகியுள்ளது. ஏனையவை அழிகின்றன. இதில் நாம் கவனிக்கவேண்டிய விடயங்கள் வருமாறு:

1. கோதுமை இந்நாட்டுக்குரிய விளைபொருள் அல்ல. நாம் விலைகொடுத்து வாங்கவேண்டிய இறக்குமதிப் பொருளாகவே கோதுமை எமக்கு என்றும் இருக்கும்.

## நாக. பத்மநாதன்

2 உணவுச் சத்தைப் பொறுத்த அளவிலும் எமது சிறுதானிய வகையிலும்பார்க்ககோதுமை பலபடி கீழானதே.

3. சுவைத்தில் கிடைக்கின்ற காரணத்தினால் எம்நாடு சிந்திக்காது கோதுமையை இறக்குமதி செய்கிறது. மக்களும் கோதுமை உணவுக்கு மிக விரைவாகப் பழக்கப்பட்டு வருகிறார்கள்.

4 இந்நிலை தொடரின் இன்னும் 15, 20 வருடத்துக்குள் இலங்கையில் சிறுதானியச் செய்கையும் அவற்றைப் பதனிட்டுப் பாவிக்கும் வழக்கமும் அடியோடு அற்றுவிடும். கோதுமைமா இல்லாது வாழமுடியாத நிலைக்கு மக்கள் உள்ளாவார்கள்.

5 இதனால் எமது இன்றியமையாத உணவுப் பொருள் கோதுமையே என்றநிலை உருவாகி இக்கோதுமைக்காகநாம் பிறநாடுகளிடம் கையேந்தி நிற்கவேண்டியநிரந்தரநிலைமை இடம்பெறுமல்லவா?

6 கோதுமையின் விலை அப்போது வேண்டுமெனக் கூட்டப்படின் எத்தனை வீண் நட்டத்துக்கும் கடனுக்கும் கஷ்டத்துக்கும் எம் நாடு உள்ளாகுமென்பதை இப்போதே சிந்திப்பது நலம். யுத்த நெருக்கடி ஏற்படின் இறக்குமதிக் கோதுமை கிடைப்பது நிச்சயமா? இவ்விதம் பொருளியலிலும் அரசியலிலும் எம்மை நாம்அடிமைப்படுத்துவது எதற்கு?

மேற்கூறிய அவலநிலை தவிர்க்கப்படக் கூடியதே. அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளவிருந்து தற்போது இலவசமாகவும் சொற்பவிலைக்கும் கடனுக்கும் கோதுமை கிடைக்கிறதென்பதற்காக இந் நாட்டு விளைபொருட்களை அழியவிடுவது மடமையாகும். எமது மண்ணில் விளையும் பயிர்களோ எமக்குநின்றுதவக்கூடியவை. இவ்விதம் பனையும் பலாவும் பெரும் செல்வங்கள். குரக்கன், வரகு தினை, என் ஆதியன உடலுக்கு உறுதிதரும் சிறுதானியங்கள்! ஊரின் பசி போக்க வல்ல சிறந்தஉணவு மரவள்ளி. இது 5, 10 பரப்புக்கென அல்லாது பிறநாடுகளில் 30, 100ஏக்கருக்கென வைக்கப்பட்டு சீவல்செய்து வற்றலாக்கி பெரும் வருவாயும் தருகின்றதாம்.

இங்கு இன்னொன்றையும் கவனிக்கவேண்டியுள்ளது. அதாவது எல்லா நிலமும் நெற்செய்கைக்கு உரியதல்ல. நெற்செய்கையால் மட்டும் நாடு தன்னிறைவு பெற்றுவிடாது. உலகின் மூன்றிலொரு பகுதிக்கு அரிசியைவிட வேறு பொருட்கள் தேவையே. இதற்குரிய உணவுவகைகள் இலங்கையிற் கிடையாதா? கோதுமை தான் எமக்குக் கதியாக வேண்டுமா?

எனவே எம்நாடு முழுதும் பயனுறவேண்டின் எம் வருங்காலம் பிறநாட்டுக் கோதுமையை நம்பிவாழும் நிலையிலிருந்து விடுபட வேண்டின் அதற்குரிய திருப்பமும் புரட்சியும் தேவை. கோதுமை இறக்குமதி இப்போதிருந்து சிறிது சிறிதாகக் குறைக்கப்பட்டு ஈற்றில் ஒழிக்கப்படவேண்டும். இதில் அரசாங்கம் விழிப்புற்றுச் செயற்பட வேண்டும் அத்துடன் விவசாய அபிவிருத்தித் திட்டங்களும் உள்ளூர் உணவு வகைக்கான ஆய்வுகூடங்களும் எழுப்பப்படவேண்டும். கோதுமைப்பாணுக்குப் பதிலாக வேறு மாஇனங்களைச் சேர்த்துப் பதனிடும் வகைமுறைகள் ஆராயப்படல் வேண்டும். வருடமொன்றிற்கு 70,000 தொன் கோதுமையை அரைத்துப் பையில் அடைக்கும் அரசாங்க ஆலையொன்று இப்போது கொழும்புத்துறைமுகத்தில் இயங்குகிறது. இதுபோல சிறு தானியங்களையும் மரவள்ளிச் சீவல் போன்ற உணவுவகைகளையும் அரைத்துப் பதனிடும் முறைகளில் முதலீடுசெய்து புதிய முன்னேற்றங்களை ஏற்படுத்த வேண்டும்.

இரண்டொரு மாவகைகள் சேர்த்துக் கலந்து விற்பனைக்கு வரும்போது அவை மக்கள் விரும்பும் பண்டங்களாகலாம்.

நெற்பயிர் ஆராய்ச்சி போல சிறுதானிய ஆராய்ச்சி இந்நாட்டில் இன்னும் கூடிய அளவில் இடம்பெற வேண்டும். விவசாயிகளுக்குப் போதிய ஊக்கமும் ஆக்கமும் உதவியும் கொடுபடவேண்டும்

இதற்கு அரசாங்க உணவு உற்பத்திக்கொள்கையில் புதியதொரு திருப்பம் தேவை. அரசியல் தலைவர்கள் இதில் விழிப்புற வேண்டும். நாட்டில் ஈடுபடுகொண்டோர் இதுபற்றிச் சிந்திக்க வேண்டும் பொதுமக்கள் ஒவ்வொருவரும் கோதுமை இறக்குமதியால் வரும் கேட்டையும் எம் சொந்தநாட்டின் விவசாயப் பெருக்கத்தால் வரவல்ல வாழ்வையும் மனத்திற் பதிக்க வேண்டும். இவ்வித புரட்சி ஏற்பட்டு நாடு வாழ, நாம் வாழ, வழி வகுப்போம் இது பற்றிய கருத்துக்களை இத்துறை வல்லுனர்கள் பொதுமக்களுக்கு வழங்கவேண்டும். அப்பொழுதுதான் சுதேசிய மனப்பான்மை வளரும். நாடு பொருளாதார சுபீட்சமடையும்.

"லேடன்" LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரி சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ கால்மேஸ் (Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
74 A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 330

# 'திருமணச்சடங்கு அவசியமல்ல'!

## ஈ. வே. ரா. பெரியார் ஆத்திகம்பேசுகிறார்!

இரண்டு வசனங்களுமே ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் தருகின்றனவல்லவா?

சமீபத்தில் ராமசாமிப் பெரியார் மூடநம்பிக்கைகளை அகற்றும் மகாநாடு ஒன்றை நடாத்தி தமிழ் நாடு முழுவதையும் ஒரு கலக்குக் கலக்கி விட்டிருக்கிறார். அந்த மகாநாட்டில் அவர் வெளியிட்ட கருத்துக்களில் ஒன்றுதான் 'திருமணம் செய்துகொள்வது அநாவசியமானது' என்பது.

எடுத்த எடுப்பில் பெரியார் இப்படிச் சொல்வதையே ஒரு மூடநம்பிக்கை என்று எல்லோரும் நினைக்கலாம். திருமணம் என்பது ஒரு பரிசுத்தமான சடங்கல்லவா? திருமணங்கள் பரலோகத்தில் நிச்சயிக்கப்படுகின்றன என்றும் கூறுவார்கள். மனிதனை காட்டு மிராண்டியாக்காமல் புனிதமாகவும் பண்போடும் வாழச் செய்வதல்லவா திருமணம்? அந்தச் சடங்கு இல்லாத சமுதாயம் என்ன சமுதாயம்? அது ஒழுக்கம் கெட்ட மந்தைக் கூட்டம் ஆகிவிடுமல்லவா?

திருமணச் சடங்கு ஏன் அநாவசியமானது என்று பெரியார் விளக்கம் கூறியதாக முழு விபரங்களும் பத்திரிகைகளில் வெளிவரவில்லை. ஆனால் அவருடைய அந்தக் கூற்றில் சிறிது ஆத்திகம் தொனிக்கிறது. வடிகட்டிய முழு நாத்திகரான ராமசாமிப் பெரியாருக்கும் ஆத்திகத்துக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்கத் தோன்றுகிறது. பெரியார் தம்மையும் அறியாமலேயே ஆத்திகராகிவிட்டாரா? பகுத்தறிவின் உச்சக் கட்டம் ஆத்திகமா? இந்த உண்மையை அவர் கண்டுபிடித்து விட்டாரா? வழி தவறிப்போன ஒரு சிற்றெறும்பு பல இடங்களும் அலைந்து திரிந்து தட்டித் தடுமாறி கடைசியாக தனது புற்றை வந்தடைவதுபோல ராமசாமிப் பெரியாரும் எங்கெங்கெல்லாமோ தடவிக் கடைசியில் வெளிச்சம் பெற்று விட்டாரா?

யேசுகிறீஸ்துநாதர் கற்பித்த போதனைகளில் பின்வருவதும் ஒன்று குடும்பப் பிணைப்புகளை அகற்றவேண்டும் நீ சந்திக்கும் ஒவ்வொரு பெண்ணும் உன்னை ஈன்ற தாயைப் போன்றவள். ஒவ்வொரு மனிதனும் உன் உடன்பிறந்த சகோதரன் போன்றவன். உனது உறவினர்கள் இறந்து விட்டார்களென்று ஈமச் சடங்குகளில் காலத்தைப் போக்காதே. சீவியத்தைக் கவனி மரணத்தையல்ல. பரலோக ராஜ்யம் உனக்குள்ளேயே இருக்கிறது. அந்த ராஜ்பத்தில் திருமணம் செய்வதுமில்லை. திருமணம் செய்து கொடுப்பதுமில்லை ஏனென்றால் உன்னுடைய சீவியத்தை இரண்டு தேவதைகளுக்கு பகிர்ந்துகொடுக்கமுடியாது ஒன்று கடவுள் [illegible] நீ திருமண[illegible] செய்[illegible]டவர்.

யேசுகிறிஸ்துநாதரே திருமணம் செய்து கொள்ளாதவர். பிபிலிய வேதத்தின் படி அவருடைய கருத்துக்

[11ம் பக்கம் பார்க்க]

— வி. என். பி. —


## கைரேகை..

6ம் பக்கத் தொடர்ச்சி

இரட்டித்த இருதய ரேகையிருக்கக் காணலாம். இவர்கள் ஒருவரில் ஆழ்ந்தபாசத்தைக் காட்டுவர். பாசத்தில் முறிவோ அல்லது இடிப்போ ஏற்பட்டுவிடும். அதனால் அவர் பெரிதும் பாதிக்கப்படுவர்.

இருதயரேகை எல்லோருடைய கைகளிலும் ஒரேநிறமாய் இருப்பதில்லை. இருதயரேகை பொதுவாகச்செந்நிறமாயும், வெளுத்து அகன்றும் இருக்கும். சிலருக்கு மாத்திரம் இருதய ரேகை மஞ்சள் நிறமுடையதாயிருக்கும், மஞ்சள் நிறமாயிருந்தால் ஈரல் சம்பந்தமான நோயுண்டாகுமென்பதைக் காட்டும். இருதய ரேகை செந்நிறமாயிருப்பவர்கள் முன்கோபக்காரர்களாகவும். பிடிவாதக்காரராயும் இருப்பர். சிலருக்குஇருதயரேகை வெளுத்து அகன்றிருக்கக்காணலாம். இத்தகையவர்கள் பலவீனமுள்ளவர்களாகவிருப்பர்' இவர்களுக்கு இருதய ரோகமுண்

(12-ம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரும்புக் கதவுகளைத் தாண்டி வெளியுலகிற் காலெடுத்து வைத்ததுமே, வெறுமையாய்க் கிடந்த அவன் மனதிற் சுமையேற ஆரம்பித்துவிட்டது.

வெளியே வீசிய குளிர்ந்த காற்றில், சோமுவுக்கு 'விடுதலை' தோன்றவில்லை.

'உலகமே ஒரு சிறைச்சாலைதானே!'

இந்த எண்ணம் மனத்தின் குறுக்கே ஓடுகிறது' சோமு நின்று மெதுவாகத் திரும்பிச் சிறைச்சாலையைப் பார்க்கிறான்.

ஏளனச் சிரிப்பொன்று. அவன் கடைவாய் ஓரத்தில் தோன்றி மறைகிறது.

"வெளியாலிருக்கிறவன் உள்ளே போகாமலும் உள்ளேயிருக்கிறவன் வெளிதே போகாமலுந்தானே இந்த மதிலையெல்லாம் மலைபோல உயரமாகக் கட்டியிருக்கிறார்கள். உள்ளே இருப்பதும் ஒரு சிறைச்சாலை. வெளியே இருப்பதும் ஒரு சிறைச்சாலை. உள்ளே இருக்கிறது சிறிசு, வெளியே இருக்கிறது பெரிசு-இதுதான் வித்தியாசம்.'

உலகத்தைப் பொறுத்த வரையில் அவன் சிறை சென்று திரும்பியவன், குற்றவாளி. ஆனால் அவனைப் பொறுத்தவரையில், உள்ளே தள்ளப்பட்டவனெல்லாம் குற்றவாளியுமல்ல, வெளியே தங்கிவிட்டவனெல்லாம் சுற்றவாளியுமல்ல.

ஐந்து வருடமாக அவன் மனத்திரையிற் பளிச்சிட்டுக்கொண்டிருந்த இந்த எண்ணம் மறுபடியும் அவனைச் சிரிக்கவைத்தது.

"ஏன் ஐயா, ரோட்டுமுழுதும் உங்க அப்பன்வீட்டுச் சொத்தா?"

யாரோ சைக்கிளிற்சென்ற ஒருவனின் ஏளனம் சோமுவுக்குப் புதிது. நடுவீதியிலிருந்து ஓரத்துக்கு அவன் இறங்க, 'ஓ, இந்த உலகத்துள் வந்துவிட்டோமா?' என்று அவன் மனமும் உலகத்துள் இறங்குகிறது.

'சின்ன வயசு அனுபவங்களை அடிப்படையாகவைச்சு இந்த உலகத்தின் பேக்கை-மாதிரியை - அதன் தன்மையை எல்லாம் பிச்சுப் பிச்சுக் காட்டி. உலகமே ஒரு சிறைச்சாலைதான் என்கிறதை நான் உணரவைச்ச என் குருவை, அவர்பெயரே குருசாமி, மறியல் வீட்டிலே வந்து சேர்ந்த முனிவரை, நான் கும்பிடுகிறேன்.'

கைகள் கூப்பி அஞ்சலி செய்த வண்ணம் அவன் மேலே நடக்கிறான்.

'அஞ்சு வருசமா என்னை அடைச்சு வைச்சிருந்து இப்ப வெளியேவிட்ட சிறை, சட்டத்தினாலை-புத்தியிலே தீட்டிய சட்டத்தினாலை. குற்றவாளியாகச் சாட்டப்பட்ட மனிசனை உள்ளே அடைச்சு வைக்கிறதுக்கு, வேறு மனிசனாலை கட்டப்பட்டது. ஆனா அதுக்கு வெளியே இருக்கிறவன் எல்லாம் தனக்குத் தனக்கெண்டு ஒரு சிறையைத் தன் மனசுக்குள்ளேயே கட்டிக்கொண்டு. தன்னையறியாமலே தன்னை அதுக்குள் அடைச்சுவைச்சு, அதிலை ஏதோ 'சுகம்' கண்டுவிட்டதாக ஏமாந்திருக்கிறான். மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை எல்லாம் அதுகளைச் சுத்திச் சுத்தி வாற யோசினையள் எல்லாம், அவனைச் சிறை பிடிச்சு வைச்சிருக்கிறதை அவன் அறியிறதில்லை.'

தன்னையும், தன்னைச் சுற்றியுள்ள சின்னஞ்சிறு உலகத்தையும் சிந்தித்து, அச்சிந்தனையே பெரிய பாரமாகி அழுத்துகிற அழுத்தலில் தன்னையிழந்து, நேரேயும் எதிரேயும் போகிற ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு விதமான சிறைக்கூடமாகத் தோன்ற, சோமு தனக்குள் தானே துழாவிப் பார்க்கிற நிலையிலே தன்னைக் காணுகிறான்.

'எனக்கு நானே ஒரு மறியல்வீடு!'

முன்னாலும் பின்னாலும் நீண்டு கிடந்த வீதியில் மக்களின் போக்குவரத்து வேகமும், அலறிக்கொண்டு அசுர வேகத்திற் செல்லுகிற வாகனங்களின் அவதியும் அவனது எண்ணத்தொடரிலே சில சமயங்களில் முறிவுகளை உண்டுபண்ணினாலும் அவன் நடையின் கதியோடு எண்ணங்களும் உருண்டு நீண்டு கொண்டே போயின.

ஒரு சுனையிலிருந்து பல திசைகளிலும் பெருக்கெடுத்துப் பாய்கிற அருவிகளாய் உள்ளத்திலிருந்து பீறிட்டுக் கடந்த காலத் திரைகளைக் கிழித்துப் பாய்கிற எண்ண அருவிகளின் மோதலில் அவன் தன்னை இழந்து, சிறைச்சாலையிலிருந்து நீண்டுகொண்டே போகிற தெருவில் நெடுந்தூரம்வந்து விட்டான்.

'எங்கே போகிறோம்?'

மனித குலத்துக்கேயில்லாத பிரச்னை.

வர்களைச் சித்திரவதை செய்து, அவர்கள் துடிக்கிறதைக் கண்டு சுவைத்து மகிழுகிறவனைப்போல் 'சப்ளையர்' சோமுவை, அவன் கஷ்டத்தை அனுபவித்து ரசிக்கிறான்.

'ஒரு பிளெயின் டீ'- யாரோ ஒருவரின் இந்த 'ஓடர்' சப்ளையரின் கவனத்தைத் திருப்புகிறது.

'பிளெயின் டீ ஒண்டு' என்று கூவியபடி தேப்பட்டறைக்குச் சப்ளையர் போகிறான்.




"எனக்கு நானே ஒரு மறியல்வீடா?"

'ஆமாம், மறியல்வீட்டிலே ஒரு மனிசனுக்குக் கிடைக்கிற சுதந்திரம்கூட எனக்குள்ளே எனக்கில்லை. சின்ன வயசிலே, எங்க குடும்பத்தைச் சின்னன்சின்னனாய்— அங்கம் அங்கமாய் - சதை சதையாய்ப் பிச்சுப்பிச்சுச் சித்திரவதை செய்தவரை. சமூகத்தை தனிமனிசன்களையெல்லாம் குற்றக்கூண்டிலே நிறுத்தி காலை-மாலை அந்தி-சந்தியாய் தூங்காமலிருந்த நேரமெல்லாம் நானே அவங்கமேல் குற்றச்சாட்டுகளை வாசிச்சு, நானேகுறுக்கு விசாரணைசெய்யிற அப்புக்காத்தராய் அவங்களை விளங்கி, நானே நீதவானாய் அவங்களையெல்லாம் குற்றவாளியாகக்கண்டு மரண தண்டனையும் ஆயுள்தண்டனையும்விதிச்சு பிறகு அவங்களைத் தண்டிக்கிற ஆசாமியும்நானேயான சமயந்தான் அவங்க என் கைவசமில்லையே என்கிற செய்தி வெளிச்சுது. அவங்களுக்குத் தண்டனை விதிச்சாச்சு- அதை நிறைவேற்றும்வரை, அவங்களை-அவங்களது குற்றங்களை- அவங்களுக்கு விதிச்சுத் தண்டனையளை-அதனால்

அவங்களையே என் மனசுக்குள் மறியல்வைச்சாச்சு.

'தண்டனையளை நிறைவேற்ற துங்காமற் தூங்கி நல்ல தருணம் பார்த்திருந்த சமயத்திலை, பொலிசு- சட்டம்-சாட்சி-பணம் எல்லாம் ஒண்டாகி, நான் செய்யாத குற்றத்துக்கு என்னை அஞ்சு வருசம் மறியலிலைபோட்டாங்கள். எந்தக் குற்றத்துக்கு மறியல்போட்டு வெளிவந்து கொண்டிருக்கிறேனோ அந்தக் குற்றம் செய்தவங்கள் இப்ப வெளியிலே. 'இந்தப் பழிக்காக நாங்கள் இனியும் அகப்படக்கூடாதே' என்கிற எண்ணத்திலை அஞ்சுவருசமல்ல, அவங்க சாவரைக்கும் மறியல் போடப்பட்டிருப்பாங்கள். அந்தமறியலிலை இருந்து அவங்களுக்கு விடுதலையே இல்லை.'

'மனிதனாக வாழப் போகிறேன்.'

இது தீர்மானமா? அவனுக்கே தெரியாது.

கடந்த நான்கு ஆண்டுகளாய், சிறைக்குள்ளிருந்து அவன்பெற்ற 'தரிசனம்' குருசாமியின் உபதேசங்கள் எல்லாம் அவன் உடல் மனமெல்லாம் செழித்து தன்னை ஒரு 'மனிதன்' ஆக்கிவிட்டதாகவே அவன் உணர்ந்தான்.

ஐந்தாண்டுகளின் முன்பு அவன் கண்ட உலகத்துக்கும், இன்று காணுகிற உலகத்துக்கும் எத்தனை பேதம்?

இந்தப் பேதத்தின் மூலம் என்ன?

உலகமா, அன்றி அவன் மனமா?

குருசாமியா?

குருசாமி சொன்ன கதைகளா?

கற்றைகற்றையாய், சுருள் சுருளாய்ப் புகைந்துகொண்டிருந்த அவன் மனதெரிமலைகளின் அலைவா?

அவ்வெரிமலைகள் அணைந்துவிட்டனவா?

நெஞ்சு வெறுமையாகிக் கனன்று விம்முகிறது. உள்ளே எரிமலைகள் மூடுண்டு கிடப்பதற்கு இது ஓர் அறிகுறியா?

கால்கள் பல மைல் தூரம் நடந்துவந்த களைப்பில் ஓய்ந்தன. எதிரிலே தென்பட்ட தேநீர்க்கடையுனுட் புகுந்து சாப்பாட்டுப் பெட்டியைப் பார்க்கிறான்.

"இரண்டு தோசை.'

காய்ந்தவாழைத்தடலிலே 'சப்ளையர்' இரண்டு தோசைகளை வைத்து, அவற்றைச் 'சாம்பார்' என்ற திரவத்தால் அபிஷேகித்துவிட்டு சோமுவையே பார்த்துக்கொண்டு நிற்கிறான். புளிப்பு சாம்பாரின் கசப்பு எல்லாம் முதல் கவளத்திலேயே சோமுவின் முகத்தை [illegible]

'மறியல் வீட்டுச் சாப்பாடு எவ்வளவோ மேல்' மற்ற

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, சோமு கல்லையைத் தூக்கி எறிந்து கை கழுவிவிட்டு, சட்டைப் பையினுள் கைவிட்டுப் பணத்தை எடுத்து மேசையின் மேல் வைக்கிறான். சிறைச்சாலையிலே அவன் செய்த சில சேவைகளுக்கு ஊதியமாகக் கொடுக்கப்பட்ட பணம், அவன் சட்டைப் பையினுள் சிறைச்சாலை வாழ்வுக்கு முந்திய வாழ்வின் கசப்பு நினைவுகளாய்க் கனக்கிறது.

'பத்துச் சதம்'- கூவிக்கொண்டே சப்ளையர் 'பிளெயின் டீயைக் கேட்டவரிடம் கொண்டு செல்கிறான். 'டீ'க்காரர் தேநீரைச் சுவைக்கிறார்.

"இதென்ன பிளெயின் டீயா, மலேரியாக் கஷாயமா? வெடிக்கிற இந்தச் சொற்களோடு 'பிளெயின் டீ' 'சப்ளையரின் மூஞ்சியைத் தழுவுகிறது. கண்ணாடித் தம்ளர் எதிர்ச் சுவரில் மோதி நிலத்தில் சிதறுகிறது.

திடீர் 'கதாநாயகன்' எழுந்து கம்பீரமாக வெளியேறுகிறார். கடையே ஸ்தம்பித்து விட்டது. காசு மேசையிலிருந்த முதலாளி எழுந்து நின்று கதாநாயகனுக்கு மரியாதை செலுத்துகிறார்.

மிகுதிக் காசையும் பெற்றுக்கொள்ளாமலே சோமு வெளிச்சென்று தெருவில் ஏறினான்.

உள்ளே அவன் இதயத்தின் உட்சுவர்களில் எச்சிற் கலயங்கள், கண்ணாடித் தம்ளர்கள், கஷாயம், புளிப்பு, கசப்பு என்பவற்றின் சாயல்கள் மோதிச் சிதறி. அவனது அமைதியை ஒரு கணம் கலக்கின.

மன அமைதி கலங்குகையில், அடிமனத்திலே தூங்கு நிலையிற் கிடந்த கசப்பூட்டு நினைவுகள் ஒவ்வொன்றாய் மேலெழுந்து, பேரலைகளாய் அவனைக் கடந்த காலத்துள் அமிழ்த்திவிட—

[2]

அக்கினி சுவாலித்து எரிகிறது.

அவன் தாய்- அம்மா-அச்சிதையிலே எரிந்துகொண்டிருக்கிறாள்.

'விடிவு வேண்டும்' என்ற விழைவு, 'விடியும்' என்ற நம்பிக்கை, 'கட்டுண்டோம்-பொறுத்திருப்போம், காலம் மாறும்'என்ற எதிர்பார்ப்பு, 'பிள்ளைகள் மனிதர் ஆவரோ' என்ற ஏக்கம், 'அவர் எப்போ வருவாரோ' என்ற அங்கலாய்ப்பு எல்லாவற்றையும் அவள் அக்கினிக்கே அர்ப்பணித்துவிட்டு, அவற்றைப்போலவே தானும் சாம்பராகிக்கொண்டிருப்பதை அவன், சோமு, தன் தம்பி ஆனந்தனோடு பார்த்துக்கொண்டு நிற்கிறான்.

'புண்ணியம்' என்று ஊரிலிருந்த நான்கு நல்ல மனிதர் வேறு சிலரின் உதவியோடு இவர்களின் தாயை-தாயின் உடலைச் சுடுகாட்டுக்குக் கொண்டுவந்து 'கொள்ளி' வைத்த பின்னர் நழுவிக்கொண்டிருக்கிறார்கள். மற்றவர்கள் முன்னரே போய்விட்டார்கள்.

'இந்தப் பிள்ளைகளோடு ஏதாவது பேசினால், அவர்கள் எம்மோடு ஒட்டிக்கொள்வார்கள்' என்று அஞ்சுகிற தோரணையில் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தபடி சிறுவர்களிடமிருந்து அவர்கள் விலகிச் சென்றுகொண்டிருக்கிறார்கள்.

பதினைந்து வயதுச் சோமு, திடீரென்று பத்து வயதுத் தம்பிக்குத் தாய் - தந்தை- தமையன் எல்லாமாகிறான்.

இது சமூகத்தின் நியதி!

சோமுவின் மனக்கண்களிலே அவர்களிடமிருந்து விலகிச் சென்ற நால்வரில் ஒருவர், 'மூத்த பையன் ஒரு பெண்ணாகப் பிறந்திருந்தால் என்ன கதி?' என்று அங்கலாய்க்கிறது தெரிகிறது.

''இரண்டுமேபெண்ணாய்ப் பிறந்திருந்தால் என்ன கதியாம்?''-இரண்டாம் ஆளின் பிரச்னை.

'அவதான் இந்த அஞ்சு ஆறு வரிசமா அதுகளை வைச்சு எப்படியோ காப்பாத்தினாள். அதுகளை எல்லாம் தவிக்கவிட்டிட்டு ஓடிப்போனானே அந்தத் தகப்பன்; அவனுக்குப் பிள்ளையாய்ப் பிறந்த குத்தத்துக்கு இதுகள் அலையத்தானே வேணும்'- இது மூன்றாமவரின் தீர்ப்பு.

'அவன்தான் என்ன செய்வான்; கடன் தலைக்குமேலை. செய்யிறேன்-உழைக்கிறேன் எண்டு நாலு காணியைக் குத்தகைக்கு எடுத்தான். ஊரெல்லாம் கடன்பட்டு நெல்லை விதைத்தான். மழை பெய்யவில்லை. அடுத்த வரிசம் அப்பிடி அடுத்து நாலு வரிசமா கடன்பட்டு, குடியிருந்த காணியை வித்து இவள் உடம்பிலை கிடந்த நகையளை அழித்து இந்த நிலங்களுக்கு நெல்லு நெல்லாய்ச் சாப்பாடு போட்டான். நெல்லெல்லாம் பொரிஞ்சது முளைக்கல்லை. வானம் இரங்கினத்தானே! அவன் மானம் தொலைஞ்சு மரியாதி கெட்டு. கடன் கொடுத்தவனெல்லாம் தொண்டைப்பிடியாப் பிடிச்சுட்டாங்கள். அவன் ஒண்டில் கழுத்திலை கயிறு போட வேணும் இல்லை கண்காணாமல் போயிடவேணும். கழுத்திலை கயிறுபோடத் துணிச்சலில்லை. தேசாந்தரமாய் போய்ட்டான்.'


முதலாம் ஆள், விளக்கந்தந்த களைப்பில் சால்வையை உதறி முகத்தைத் துடைத்துக்கொண்டார்.

மூன்றாமவர் பின்னால் திரும்பி தாயினுடலோடு பிஞ்சு உள்ளங்களையும் சுட்டுப் பொசுக்கி நிற்கும் அக்கினிச் சுவாலையின் பின்னணியில் சிலையாகி நிற்குஞ் சிறுவர்களை காணுகிறார்.

(12-ம் பக்கம் பார்க்க)

"ஈழநாடு" பத்தாவதாண்டு நிறைவையொட்டி நடாத்தப்பட்ட நாவல், போட்டியில் முதற்பரிசு பெற்ற இரு நாவல்களில் ஒன்று திரு.சு. இராஜநாயகன் எழுதிய 'பிரயாணி' இந் நாவல் இவ்வாரத்திலிருந்து தொடர்ந்து வெளிவருமென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

'ஆன்ற...
சான்றே...



வலம்புரி மு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் கிராமம் — 10

# ‘ஆன்று அவிந்து அடங்கிய கொள்கை சான்றோர் பலர் யான் வாழும் ஊரே’

— 3 —

ஊருக்குச் சிறப்புக் கோயில்கள். ‘கோயிலில்லா ஊரிற் குடியிருக்கவேண்டாம்’ என்பது பழமொழி. வாழ்வுக்கு இன்றியமையாதது பொருள். ‘பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை’ என்பது திருக்குறள். ஆனால் படிப்பது சிவபுராணம் இடிப்பது சிவன்கோயில் என்றநிலை இல்லா திருப்பதற்கும் பொருளை அறநெறியிலே தேடிப் புண்ணிய தொண்டுகளுக்குப் பயன்படுத்துவதற்கும் உள்ளம் உயர்ந்திருக்கவேண்டும். அதனாலேயே ‘உலகம் உயர்ந்தோர் மாட்டு’ என்றார்கள். உயர்ந்த உள்ளம் கொண்ட உன்னத குணவியல்புகள் வாய்ந்த உத்தமர்கள் ‘சான்றோர்’ எனப்படுவர். சான்றாண்மை அன்பு, நாணம், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை ஆகிய ஐம்பெருங் குணங்களிலே தங்கியுள்ளது என்பது தெய்வப் புலவர் திருவாக்கு.

அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண்.

சான்றோர் பிறர் தீமை சொல்லார்; மாற்றாரையும் பணிவால் வெல்வர்; தோல்வியை இழிந்தோர் மாட்டும் ஒப்புக்கொள்வர்; இன்னா செய்தார்க்கும் இனியவே செய்வர்; ஊழி பெயரினும் தாம் பெயரார்.

இத்தகைய சான்றோர்களாலேயே ஊர் சிறப்பெய்துகின்றது என்ற உண்மையை வலியுறுத்துகின்றது புறநானூற்றுப் பாடல் ஒன்று. பிசிராந்தையார் என்ற பெருமைசால் புலவரை நோக்கி ‘நுமக்கு வயது வந்தும் தலை நரைகொள்ளவில்லையே’ என்று கேட்டனர் சிலர். அதற்குப் புலவர் கூறிய பதில் மிகஅருமையானது. ‘உண்மைதான். யான் மூப்பெய்தியும் தலைநரை காணாமல் இருப்பதற்குப் பல காரணங்கள் உள. எனது மனைவி மாட்சியுடையவள். அறிவறிந்த மக்களும் எனக்கு உள்ளனர். யான் நினைத்ததையே ஊரிலுள்ள இளைஞர்களும் குறிப்பறிந்து செய்கின்றனர். வேந்தனும் அல்லவைசெய்யான். இவை அனைத்துக்கும் மேலாக அஃகி அகன்ற அறிவுடையவர்களும் உள்ளப்பக்குவம் பெற்றவர்களும்



வலம்புரி முத்து முத்துத்தம்பி உபாத்தியாயர்

உயர்ந்த கொள்கையுடையோருமாகிய சான்றோர் பலர் எனது ஊரின்கண் வாழ்கின்றனர். அதனால் கவலைகள் எதுவுமில்லாத வாழ்வைப் பெற்றுள்ளேன். ஒரே மகிழ்ச்சி; நிறைவு; பூரிப்பு அதனால் எனது தலை நரையற்றது’ என்கின்றார் புலவர். எல்லோர்க்கும் ஏற்ற உளவியற் கருத்தும் இன்றைய அறிவியல் உலகமும் ஒத்துக்கொள்ளும் உண்மையும் பொதிந்துள்ள புலவரின் அருமந்த பாடல் பின்வருமாறு.

யாண்டுபல வாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்
மாண்டவென் மனைவியொடு மக்களும் நிரம்பினர்
யான்கண் டனையரென் இளைஞரும் வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும்; அதன்தலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழும் ஊரே

எல்லோர்க்கும் மேலான நீதி வழுவா மன்னனுக்கும் மேலாகச் சான்றோரைக் குறிப்பிட்டிருப்பது கவனிக்கற்பாலது. சான்றோரும் பலவகைப்படுவர். ‘நான் உண்டு; எனது வேலையுண்டு. எனக்கேன் இந்தத் தொல்லை’ என்றிருப்பவர்கள் ஒருவகை. இத்தகைய ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர் பிசிராந்தையார் ஊர் போன்று நுணுவிலூரிலும் பலர். அவர்களுள் உன்னத சேவையாற்றிய ஒப்பற்ற ஒரு சிலரின் மேன்மைகள் பற்றிச் சிந்திப்பது நல்லது. அது ஊரை மேலும் சிறக்கச் செய்ய வல்லது.

## வலம்புரி முத்து

முத்து உபாத்தியாயர் என்று எல்லோரும் பக்தியுடன் அழைக்கும் முருகேசர் முத்துத்தம்பி அவர்களை ஈழத்துத் தமிழ்உலகம் இனிது அறியும். முத்து உபாத்தியாயர் மட்டுவில் தெற்கைச் சார்ந்தவர். ஆயினும் மட்டுவில் தெற்கும் நுணுவில் மேற்கும் உறவாலும் ஒற்றுமையாலும் ஒன்றான தன்மையாலும் முத்து உபாத்தியாயர் மட்டுவில் தெற்குக்கும் நுணுவில் மேற்குக்கும் மத்தியில் வாழ்ந்த பெற்றியாலும் அவர் நுணுவிலூருக்கும் உரித்துடையவராகின்றனர்.

முத்து உபாத்தியாயர் உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை அவர்களின் புண்ணிய மாணக்கர்களுள் ஒருவர். அவர் அறிவு நிறைந்தவர்; ஆற்றல் மிகுந்தவர்; பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்கியவர்; தெய்வந் தெளிந்தவர்; தெளிந்தோர்ப்பேணியவர்; அல்லும் பகலும் சைவமும் தமிழும் ஆர்வுடன் வளர்த்துச் செல்லும் தேயத்துக்கு உறுதுணை தேடியவர். இத்துணைச் சிறந்த ஆன்றோர்பற்றி அவர் சிவபதமெய்திய காலத்தில் (1965-ல்) பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் அரியதோர் கட்டுரை எழுதியுள்ளனர். அதன் சில பகுதிகள் பின்வருமாறு:

“குருபக்தி தெய்வபக்தி இரண்டின் உருவமே முத்துத்தம்பி உபாத்தியாயர் ஆவர்.

பழைய காலத்திலே குருகுலத்திலே நாற்பத்திரண்டு யாண்டு பிரமசரிய விரதங்காத்துக் குருவழிநின்று வெளிவரும் பிரமசாரியின் தேசஸ் என்பதைக்காணவேண்டுமானால், அதனை முத்துஉபாத்தியாயர்பாற் காணலாம். அவருடைய திருமுகம் வயதுமுதிர்ந்த காலத்துத் தெய்விக ஒளியை வீசிக்கொண்டேயிருந்தது. அவர் தம் குருவாகிய உரையாசிரியரின் ஆஞ்ஞைப்படி தமது ஊராகிய மட்டுவில் தெற்கில் சைவப்பிரகாசவித்தியாசாலையைத் தாபித்துத் தமிழையும் சைவத்தையும் மரணபரியந்தம் வளர்த்துக்கொண்டே வாழ்ந்து வந்தார்...

‘இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்’ என்ற நாவலர் அவர்களின் வாக்கை அனுபவத்திற் கொண்டவராய், நாள் தோறும் சந்திரமௌலீசரையும் சாந்தநாயகியம்மையாரையுந் தரிசிக்கும் நியமம் பூண்டவர். அவருடைய கண்கள் புண்ணியக் கண்கள்; அவருடைய கால்கள் ஆலயத்தை வலம்வந்த திருக்கால்கள்...’

இவ்விதம் முத்து உபாத்தியாயரின் வித்தை மேன்மையையும் பக்தி மாண்பினையும் முத்துத் தொண்டுகளையும் விதந்து கூறி “உபாத்தியாயர் வலம்புரிமுத்து” என்று முடிக்கின்றார் பண்டிதமணி அவர்கள்.

முத்து உபாத்தியாயர் ஒச் அபர கணித நிபுணர். அதனால் இயல்பாகவே சோதிடத்திலும் அவருக்கு நாட்டமுண்டாயிற்று. சோதிடக்கலையைச் சுத்தமாய்க் கற்றுத் தெளிந்து உண்மைச் சோதிடம் சொல்லிய வல்லாளர் அவர். வீடு, கிணறு என்பவற்றுக்கு நிலையம்பார்த்தல், ஏடு திறந்துவைத்தல், கேடுவரவொட்டாது வாழ்த்துச் சொல்லல் எல்லாமே எமது ஊரவர்க்கு முத்து உபாத்தியாயர்தான்.

இத்தகைய பெருமை சான்ற மேலோரின் மூச்சுப்பட்டுமூச்சுப்பெற்றவர்கள் நுணுவிலூரிலே பலர்.

## கல்வி வளர்த்த அதிபர்

K. S. S. என்ற எழுத்துக்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டில் புகழ்பெற்றவை. குடாநாடு என்ன, கிளிநொச்சி, வவுனியா போன்ற பகுதிகளிலும் இவ்வெழுத்துக்கள் பிரபல்யமானவை, தென்மராட்சி, கிளிநொச்சி, வவுனியா ஆகிய பகுதிகளின் கல்வி விருத்தியில் சாவகச்சேரி இறிபேக் கல்லூரிக்குப் பெரும் பங்கு உண்டு. ‘இறிபேக் கல்லூரியின் வளர்ச்சி ஒரு பெரிய காவியம். அந்தக் காவியத்தின் கதாநாயகன் K. S. S. என்று கல்விமான்கள் பெருமையுடன் கூறும் திரு. K. S. சரவணமுத்து அவர்களைப் பெற்றெடுத்த புகழையுமுடையது நுணுவிலூர்.

பிரபல போதகர் வண. J. K. சின்னத்தம்பி அவர்களின் மருகனாகிய திரு. K. S. சரவணமுத்து அவர்கள் 1930-ம் ஆண்டுமுதல் தொடர்ந்து 27 ஆண்டுகள் இறிபேக் கல்லூரியின் அதிபராகவிருந்த சிறப்புடையவர். அவர் சும்மா ‘இருந்த’ அதிபரல்லர். அவரை இவரை மகிழ்விப்பதற்காகக் கடமைவேலை பார்த்தவருமல்லர்’ சாவகச்சேரிப் பகுதிப் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காக கண் உறங்காது உழைத்த அதிபர். அதனால் மிகவும் உயர்ந்த அதிபர் ஊக்கு உழைக்கும் நோக்கமும் நோக்கத்துக்கேற்ற ஊக்கமும் யாருக்கும் ஏற்றதைச் செய்யும் ஆற்றலும்



ஆளுமை நிறைவும் நிர்வாகத் திறமும் பணிவும் துணிவும் பாங்குடன் குடிகொண்ட அழகினால் திரு. K. S. சரவணமுத்து அவர்கள் சித்தி நிறைந்த-வெற்றி மிகுந்த அதிபராக விளங்கினார். E L S.C வரையுமிருந்த இறிபேக் கல்லூரியை H. S. C வரை உயர்த்தினார். அதற்கு வேண்டிய கட்டிடங்களை நாற்புறமும் கட்டினார்; ஆய்வு



ஏழை பங்காளன் திரு கந்தையா சிவம் அவர்கள்

கூடங்களை அமைத்தார்; கைவினைத்தளங்களை நிறுவினார்; கனவைத் தக்க அளவுக்கு நனவாக்கினார்.

அவரின் மேன்மையை எங்கள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. என். நவரத்தினம் அவர்கள் போற்றிப் புகழ்ந்து பூரிப்படையும் திறம் இதோ.

“...எல்லாச் செல்வத்திலும் பார்க்கப் பெரிய கல்விச் செல்வத்தை அள்ளிக்கொடுத்து ஆயிரம் ஆயிரம் மக்களின் வாழ்க்கையை வளம்படுத்தும் வல்லமை ஒரு கல்லூரிக்கேயுண்டு இத்தகைய ஒரு கல்லூரி எங்கள் மத்தியில் இன்று இருப்பதற்கு உழைத்தவர்களுள் முதலிடம் பெறுபவர் திரு. சரவணமுத்து அவர்களே.

“அவர் முதன்முதல் இறிபேக் கல்லூரிக்குத் தலைமையாசிரியராக வரும்பொழுது அது மிகவும் சிறிய ஒரு பள்ளிக்கூடமாக இருந்தது: ஐந்தாறு வகுப்பறைகளும் பத்துக்குக் குறைந்த ஆசிரியர்களும், இநூறுக்கு மேற்படாதபிள்ளைகளுமே அன்றைய பள்ளிக்கூடம். அதன் இன்றைய நிலையை நான் எடுத்துக்கூறத்தேவையில்லை, எல்லாத் துறைகளிலும் வளர்ச்சியுற்றுப் பெரிய பெரிய கட்டிடங்களுடன் கல்லூரி காட்சியளிப்பதை எல்லோருமே கண்ணாரக் காணலாம். இத்தகைய முன்னேற்றத்துக்காகத் தமது நேரம் முழுவதையும்-ஏன் தம் வாழ்நாள் முழுவதையுமே-செலவிட்ட திரு சரவணமுத்து அவர்களின் சேவையை மக்கள் பாராட்டவேண்டிய அவசியமில்லை. இறிபேக் கல்லூரிக் கட்டிடங்களின் ஒவ்வொரு கல்லும் அவரின் சேவையின் சிறப்பைப் பறைசாற்றும். கல்லூரியின் ஒவ்வொரு மாணவ மாணவிகளின் நாவும் அவரின் புகழ்பாடிப் போற்றும். கல்லூரியின் தற்போதைய நிலையே அவருக்குச் சிறந்த நினைவு மலர்...” (சரவணமுத்து சேவை மலர்— இறிபேக்கல்லூரிச் சஞ்சிகை 1957)

## நுணுவிலூர்க் கவிஞர்
## வி. கந்தவனம்

இத்தகைய சிறந்த நற்புகழ் நிறைந்த எங்கள் அதிபர் இன்னும் பல்லாண்டுபல்லாண்டு காலம் வாழ்ந்து எம்மை நன்னெறிப்படுத்த எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவோமாக

## ஏழை பங்காளன்

நுணுவிலூர் பெற்றெடுத்த மற்றுமொரு சான்றோர் திரு. சின்னத்தம்பி கந்தையாசிவம் அவர்களாவர். இவரது இயற்பெயர் கந்தையா என்பதுமட்டுமே. ‘சிவம்’ என்ற பெயர் ஊர்மக்களாற் சூட்டப்பெற்றது. ‘அன்பே சிவம்’ என்ற உண்மைக்கு விளக்கமாக இவரது செயலும் சேவையும் அமைந்துவிட்ட காரணத்தினால் மக்கள் இவரைக் கந்தையா சிவம் என்றும் சிவம் கந்தையா என்றும் அழைக்கலாயினர்.

காலஞ்சென்ற கந்தையா சிவம் அவர்கள் நுணுவிலூரின் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் வழிவகுத்த பெருமகன்; முன்னின்று உழைத்த முதல் மகன்; உயிரையும் அர்ப்பணித்த உண்மைத் தொண்டன். நுணுவில் கணேச வித்தியாசாலைக்கு வித்திட்டு அதன் வளர்ச்சிக்கு அல்லும் பகலும் அயராது அவர் உழைத்ததை அனைவரும் அறிவர். பத்தொன்பது ஆண்டுகள் இப்பாடசாலையிலே தலைமையாசிரியராகப் பணிபுரிந்து ஊரின் வளர்ச்சிக்கு ஓயாது உழைத்தவர்.


இவர் பாடசாலை நடாத்திய விதமே தனி. பாடசாலையில் நல்லெண்ணெய், சீப்பு, கண்ணாடி, திருநீறு யாவும் ஓரிடத்தில் வைக்கப்பட்டிருக்கும்‘ தலையிழுக்காது வருகிறவர்கள் முதலில் அவ்விடத்துக்குச் சென்று எண்ணெய் வைத்துத் தலையிழுத்த பின்னரே வகுப்பில் வந்திருத்தல்வேண்டும் நீறில்லா நெற்றி பாழ். வெறும் நெற்றியைக் கண்டாரோ நல்ல வெளுவைதான் கிடைக்கும். தலைமையாசிரியர் கந்தையாசிவம் அவர்கள் இரண்டு பூசைகளுக்குப் பெயர் பெற்றவர். ஒன்று பிரம்பபூசை (அதுவும் ஒழுங்கற்றவர்களுக்குமட்டுமே) மற்றையது மகேசுரபூசை. அந்தக் காலத்திலே மற்றைய பாடசாலைகளிலே மதிய உணவாக பணிசு அல்லது விசுக்கோத்து மட்டுமே கொடுக்கப்பட்டது. கந்தையாசிவம் அவர்கள் தமது பிள்ளைகளுக்குச் சோறு போட்டார். போர்க்காலத்திலும் பிள்ளைகள் வயிறார உண்டனர், இதனை ஒரு வருடமோ இரண்டு வருடமோ - பெயருக்கோ புகழுக்கோ செய்தாரல்லர். தனது சேவைக்காலம் முழுவதுமே தொடர்ந்து இப்பணியைத் தனது செலவில் செய்தன

(12-ம் பக்கம் பார்க்க)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுக்கடங்காது தன்னிச்சையாகத் திரியும் தன்மையுடையன மிருகங்கள். மனிதர்களுக்கு ஆபத்து விளைவிக்கும் அந்த மிருகங்களை அடக்கி ஆள்பவன் மனிதன்தானே ... ... ... சோவியத் ரஷ்யாவில் மக்களிடையே மிகுந்த செல்வாக்குப் பெற்றுள்ள சர்க்கஸ் கம்பனிக் காட்சிகள் இங்கு பிரசுரமாகியுள்ளன

மனிதனின் அதிகாரத்துக்கும் அதட்டலுக்கும் உட்பட்டு நிற்கும் மிருகங்களை இங்கு காண்கின்றோம். மாஸ்கோவிலுள்ள பிரபலம் பெற்றுள்ள சர்க்கஸ் கம்பனியொன்றின் காட்சியின்போது இப் படங்கள் பிடிக்கப்பட்டுள்ளது.



இரு யானைகளுக்கிடையே பயிற்சி பெற்ற சர்க்கஸ்காரி அநாயாசமாக நின்று தன் திறமையை காட்டுகிறு.




பொறிஸ் டெனிசோவ் பழக்கப்பட்ட சிங்கங்களுள் ஒன்றுக்கு நன்றி நண்பா' என்று கைலாகு கொடுக்கும் காட்சி மாஸ்கோவிலுள்ள மக்களிடையே செல்வாக்குப் பெற்ற சர்க்கஸ் கொம்பனியில் கைலாகு கொடுக்கும் இச் சிங்கம் உள்ளது



பயிற்றப்பட்ட கரடிகள் பல்லாயிரக் கணக்கான மக்கள் முன் துடைப்பம் கொண்டு கூட்டும் காட்சி



மூர்க்கம் மிகுந்துள்ள நான்கு சிங்கங்களை கட்டியாடுகிறார் இறினு பக்கிறிமோவா என்னும் சிங்கப் பயிற்சியாளர்



இறினு பக்றிமோவ் என்னும் பயிற்சியாளர் தன் பயிற்சி கொடுக்கும் [illegible] டன் தோன்றும் காட்சி (மாஸ்கோவிலுள்ள சர்க்கஸ்கம்பனியில் பிடிக்கப்பட்ட படம்)


## 'சோவியத் நாடு'

★ சோவியத்-ஈழத்து மக்களின் நட்புறவின் குரல் ''சோவியத் நாடு''

'சோவியத்நாடு' வாசியுங்கள்

★ சோவியத் மக்களின் சாதனைகளைப் பற்றியும், விசேஷமாக மத்திய ஆசிய மக்களின் புதிய வாழ்வைப் பற்றியும் அறிந்து கொள்ளலாம்.



'சோவியத்நாடு' வாசியுங்கள்

எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்:-

தகவல் பகுதி, சோவியத் ஸ்தானிகராலயம்,
27, ஸர் எர்னஸ்ட் டி சில்வா மாவத்தை, கொழும்பு-7


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "கடந்தகால ஆதாரத்திலேதான் இளைஞரின் எதிர்காலத் திட்டம் உருவாக வேண்டும்"

இந்தியாவிலிருந்து வெளிவரும் 'திட்டம்' என்ற அரசாங்க வெளியீட்டில் பிரசுரமாகியுள்ள இக் கட்டுரை ஈழத்து இளைஞர்களுக்கும் பயன் தரவேண்டி இங்கு பிரசுரமாகின்றது.

## ஓ. பி. மிட்டல்

பரம்பரிய அதிகார முறை தளர்ச்சியுற்று வருவதால் இந்தியாவில் பெரிய சமூக மாறுதல்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன; இளைஞர் பிரச்னைகளைப் புதிய முறையில் அணுகவேண்டிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. 1. குடும்பம் - சமுதாயம் 2 ஓய்வு பொழுதுபோக்கு 3. முறையான கல்வி 4. வேலை வாய்ப்பு வேலைக்கு ஆயத்தம் ஆகிய நான்கு முக்கிய துறைகளில் உறுதிப்பாடு. திட்டமிடல், ஏற்பாடு செய்தல் ஆகியவற்றை மேலான வகையில் செய்வது இந்நிலையில் அவசியம்.

கருத்து விளம்பல், தோழமை; சமுதாய வாழ்க்கை, தேசியப்பணி, ஆகியவற்றுக்கான ஒரு வாய்ப்பு இளைஞர்களுக்குத் தேவைப்படுகின்றது இளைஞர் திட்டங்களின் நோக்கம், இளைஞர் சமுதாயத்துக்கு அதன் வளர்ச்சியில் உதவிசெய்வதாய் இருத்தல் வேண்டும். ஆரோக்கியமான, மகிழ்ச்சியுள்ள, செயலான வாழ்க்கையை அவர்கள் நடத்துவதற்கும் தேசிய உணர்வையும் சர்வதேசப் பிரிவுணர்வையும் வளர்ப்பதற்கும் உதவுவதாய் அது இருக்க வேண்டும்.

12லிருந்து 30வரையான வயதுள்ளவர்கள் இளைஞர்கள் என்று இந் நாட்டில் பொதுவாகக் கருதப்படுகிறது. இது மூன்று கட்டங்களாகப் பிரிக்கப்படுகிறது..

1; பாலர்கள்(11—17) 2) இளைஞர்கள் (காளைப்பருவம (18-21) 3. வயது வந்த இளைஞர்கள் (21-30)1961ம் ஆண்டு மக்கள்தொகைக் கணிப்பின்படி 12லிருந்து 30 வயதுவரை ஆனவர்கள் சுமார் 15கோடியே 10லட்சம் பேர் இருந்தார்கள். அதாவது மொத்த மக்கள் தொகையில் இது சுமார் 34 சதவிகிதம். 1981-ம் ஆண்டிற்குள் இந்தியாவின் மக்கள் தொகையில் 25 கோடி அதிகரிக்கலாம். இதில் இந்தப் பருவத்தினர் மூன்றில் ஒரு பங்கினராயிருப்பார்கள்.

குறிப்பிட்ட வயதுப் பிரிவிலுள்ள இளைஞர்களின் எழுத்தறிவு, தொழில் அக்கறை. நாட்டம் தேவைகள் கிராம நகர இளைஞர்களின் விருப்பங்கள் ஆகியவை சம்பந்தமாக இளைஞர் பிரச்னையின் இயல்பு அளவு குறித்து இப்போதைக்கு தகவல் ஏதும் இல்லை. இளைஞர் பிரச்னைகளின் அளவை மதிப்பிடுவதற்கு சரியான தகவல்கள் தேவையாகும். இந்தப் பிரச்னையை அதன் எல்லா அம்சங்களிலும் ஆராய்வதற்கு உதவியாகப் பல்கலைக்கழகங்கள் சமூகப் பணி நிலையங்கள் மற்றும் இவைபோன்ற ஆராய்ச்சிப் பயிற்சி நிலையங்களில் ஆய்வு நடாத்த வேண்டியது அவசியமாகும்.

### சமுதாய வாழ்க்கை

இளைஞர்களின் உடல்வளர்ச்சி நல்ல நடத்தை அறநெறிப் பயிற்சி ஆகியவற்றில் குடும்பவாழ்க்கை முக்கிய பங்கு வகிக்கிறது அதே சமயம் புதிய பொருளாதார சமூக அரசியல் சக்திகள் பழைய பழக்க வழக்கங்களிலிருந்து இளைஞர்களைப் பிரித்து அவர்களுக்கு இணங்கிச் செல்லவேண்டிய பிரச்னைகளைத் தோற்றுவிக்கின்றன. சமூக வாழ்க்கையைக் குலைக்கும் போக்கும் நெருங்கிப் பிணைந்த சமுதாய வாழ்வின் சீர்குலைவுப் போக்கும் காணப்படுகின்றன

சமுதாயத்தின் சமூகக் கட்டுப்பாடு என்பது மூத்தோர் கையில் இருக்கிறது. இளைஞர்கள் இடையறுது அவர்களின் கண்காணிப்புக்கும் உதவிக்கும் வழிகாட்டலுக்கும் உள்ளாகிறார்கள். இம்மாதிரியான நிலைமைகள் நமது சமூகத்தில் கிராமங்கள் பழங்குடியினரிப் பகுதிகளில் மட்டுமன்றி அரங்கங்கள் சிறு நகர்கள் பெரிய நகரங்களின் பழம்பகுதிகள் ஆகியவற்றிலும் நீடித்திருக்கின்றன. இந்த நிலையையில் குடும்பமும் சமுதாயமும் இளைஞர்கள்பால் இன்னும் கூடுதலான பொறுப்பை ஏற்கவேண்டும். மாறிவரும் சூழ்நிலையில் பொதுவாழ்வில் அறநெறித் தரங்கள் குறைந்தால் அது இளைஞர்களிடையே விரிவான அளவு மனக்கசப்பு, ஏமாற்றம் அதிருப்தி ஆகியவற்றிற்கு வழிகாட்டும்.

சமுதாயத்திற்கு நிரந்தர அடிப்படையில் சுகாதார ஏற்பாடும் ஓய்வுநேர அலுவல்களும் தேவை அரசும் ஊராட்சி மன்றங்களும் தொண்டு நிறுவனங்களும் விரிவான அளவில் இளைஞரிப் பணிகளுக்கு ஏற்பாடு செய்யவேண்டும். ஓய்வுநேர திட்டங்களில் அவர்கள் கலந்து கொண்டு மகிழ இது உதவும். அவர்களது வளர்ச்சிக்கும் இது துணை புரியும் சமூக கலாசாரத் துறைகளில் மனமும் உடலும் ஈடுபடக்கூடிய உள்வெளி நடவடிக்கைகள் விளையாட்டுக்கள் மலையேற்றம் போன்ற துணிவுச் செயல்கள் ஆகியவற்றின் வாயிலாக ஒய்வு நேரத்தை வளப்படுத்துவதற்கு முயற்சி செய்தல் வேண்டும். சமுகப்பணியில் கலந்துகொள்வதற்கு இளைஞர்கள் ஊக்கமளிக்கப்பட வேண்டும். தேசிய சேவைத் திட்டம் வாயிலாக பல்கலைக்கழக மாணவர்கள் இதில் ஈடுபடுவதற்கான தொடக்கம்செய்யப்பட்டுள்ளது இம்மாதிரித் திட்டம் ஒன்றை முன்னதாகச் சிபார்சு செய்த கல்விக்கமிஷன் ஒழுக்கம், கட்டுப்பாடு உடல உழைப்பு நாட்டம் சமூகப்பொறுப்பு உணர்வு ஆகியவற்றை வளர்ப்பதற்கு இந்தத் திட்டம் உதவும் எனக் கூறியது அம்மாதிரியான திட்டம் பல சமூகப் பிரச்னைகளையும் மாணவர்களுக்கு எடுத்துக் காட்டும். விரிவான இளைஞர் நல திட்டத்திற்கு இந்த தேசியசேவை திட்டம் முதல்பெரும் முயற்சியாகையால் இதை மதிப்பிடும் ஏற்பாடு பயிற்சிபெற்ற ஊழியர்களின் மேற்பார்வை இளைஞர்களைப் பணியில் ஈடுபடுத்துமுன் அவர்களுக்குப் பயிற்சியளித்தல் ஆகியவற்றைச் செய்தல் அவசியம்.

1960-ல் உலகில் 15—24 வயதுக்குட்பட்டவர்கள் 51கோடியே90 லட்சம்பேர் இருந்தார்கள். 2000-ம் ஆண்டிற்குள் இவர்களின் தொகை 112 கோடியே 80லட்சமாகி விடும்.

### கல்விக்கொள்கை

இளைஞர்கள் வளர்ச்சியடைவதில் கல்விக்கொள்கை ஒரு பெரும் பங்கு வகிக்கிறது. (1964-66-ம் ஆண்டு) கல்விக்கமிஷனின் சிபாரிசுகள் கல்வி சம்பந்தமான தேசியக்கொள்கைக்கு அடிப்படையாக அமைந்தன, நான்காவது திட்டத்தில் கல்விப் பிரிவைத் தயாரிப்பதற்கும் இது ஆதாரமாய் அமைந்துள்ளது. இந்தியாவில் கல்வியை தீவிரமாக மாற்றியமைக்க வேண்டும். அநேகமாய் ஒரு புரட்சியே தேவை என்று கமிஷன் கூறியது. துவக்கக் கல்வியில் பெரும் அபிவிருத்திகள் செய்யவேண்டும். பொதுக் கல்வியின் ஓர் இணைப்பாக வேலை அனுபவத்தைப் புகுத்த வேண்டும். செகண்டரிக் கல்வியை தொழில் முறைப்படுத்த வேண்டும். ஆசிரியர்களின் தரங்களை எல்லா மட்டங்களிலும் உயர்த்தி போதிய எண்ணிக்கையில் ஆசிரியர்களை நியமனம் செய்ய வேண்டும். எழுத்தறியாமையைப் போக்கி விவசாயம் மற்றும் அதன் சார்பு விஞ்ஞானங்களிலும் கல்வி ஆராய்ச்சியில் கவனம் செலுத்தவேண்டுமென்று கல்விக்கமிஷன் சிபார்சு செய்தது.

இப்போது இளைஞர்களிற் பெரும்பான்மையினருக்கு குறிப்பாக 17 வயதும் அதற்குமேல் வயதுள்ளோருக்கும் கல்வி அல்லது நலத் திட்டம் ஏதும் இல்லை. இதில் சம்பந்தப்பட்ட பெருந் தொகையினரைக் கருதி இவர்களுக்குச் சில நலவளர்ச்சி திட்டங்களைத் தொடக்க வேண்டியது அவசியம். இவர்களைச் சமூகவிரோத சக்திகள் மேம்படுத்திக் கொள்ளும் ஆபத்து இருக்கிறது. பள்ளிக்கூடங்களிலிருந்து வெளியேறும் இளைஞர்களின் சமூக மற்றும் சொந்த வளர்ச்சியைத் தொடர்ந்து கவனிப்பதற்கும் வேலை விளையாட்டு எனும் வயதுவந்த பருவநிலைக்கேற்ப திருப்தியான முறையில் தங்களைத் தகுதிப்படுத்திக்கொள்வதற்கும் போதிய ஏற்பாடு செய்தல் அவசியம் மத்திய அர முன்னேடி திட்ட அடிப்படையில் தொடங்கியுள்ள தொழிலுக்கு முந்திய பயிற்சித் திட்டத்தின் வாயிலாக இதற்கு ஒரு முயற்சி செய்யப்படுகிறது. பள்ளிக்கூடங்களை விட்டு வெளியேறுவோர் 11- 14 வயதுக்குட்பட்டவர்களின் பொருளாதார சமூக சொந்தக் காரணங்களுக்காகப் படிப்பை நிறுத்திக்கொள்வோர் ஆகியோரின் கல்வி தொழில் பிரச்னைகளை இந்தத் திட்டம் கவனிக்கிறது. இம்மாதிரிப் பயிற்சி நிலையங்கள் 64 இப்போது நாட்டில் இயங்குகின்றன. இவற்றில் 3512 பேர்கள் சேர்ந்திருக்கிறார்கள். 1966 —69-ல் சுமார் 1930 பேர்கள்பயிற்சி முடித்திருக்கிறார்கள்.

சோதனைமுறையில் இந்தத் திட்டத்தை நீடிக்க வேண்டும் என்று இந்தப் பயிற்சி திட்டம் பற்றிய ஆய்வுக்குழு கருத்து வெளியிட்டது. இப்போதைய பாடங்களைத் திருத்தியமைக்கவேண்டும் பெண்களுக்குக் குடும்பத் தொழில்களிலும் கூடுதலாக முழுநேரப் பகுதிநேரப் பாடங்கள் நடத்த வேண்டும் என்றும் அக்குழு சிபார்சு செய்தது. இதற்காக 2 கோடி ரூபாய் செலவிடுவதற்கு நாலாவது திட்டம் வகை செய்கிறது மாணவரல்லாத இளைஞர்களுக்கென சிறப்புத் திட்டங்களும் வரையப்பட்டிருக்கின்றன.

# திருமணச் சடங்கு...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

களை பேரறிஞர் பேர்னட்ஷோ பின்வருமாறு விளக்குகின்றார்.

எவனொருவன் திரவியத்தை தனக்காகத் தன் சொந்த நன்மைக்காக சுவீகரித்துக் கொள்வது தவருனதோ? அதுபோலவே எவனொருவனும் மற்ற மானிடர்களை சுவீகரித்துக்கொள்ளப்படாது திருமணமான ஒரு மனிதன் தனது மனைவியையும், திருமணமான ஒரு பெண் தனது கணவனையும் மகிழ்விப்பதிலேயே தனது வாழ்நாளையும் சக்தியையும் அறிவையும் விரயம் செய்கிறார்கள். அவர்களுக்குக் கடவுளைப்பற்றிச் சிந்திக்கவோ கடவுளின் தொண்டைச் செய்யவோ நேரமிருக்காது "உன்னுடைய திரவியம் எங்கே இருக்கிறதோ அங்கே தான் மனமும் இருக்கும். ஒரு மனிதன் தனது லட்சியங்களை அடைவதற்கு மன உறுதியும் மனத்தைரியமும் தேவைப்படுகின்றன. அவன் திருமணம் செய்தவுடனே அந்தப் பண்புகளை இழந்துவிடுகிறான். பெண்கள் தங்கள் கணவருக்காகவும் பலவிதமான அடிமைத்தொழில்கள் புரிந்து தங்கள் உடல்களையே விற்கத் துணிவார்கள். திருமணம் செய்யாத ஒருபெண் அவ்விதம் செய்ய வேண்டியதில்லை. இதிலிருந்து யேசுகிறிஸ்து பிரமச்சர்யத்தை அனுஷ்டிக்க வேண்டும் என்று கட்டளையிட்டார் என்று நினைப்பது தவறு. மனிதகுலம் நீடிக்க வேண்டும். அதே சமயம் ஆண்களும் பெண்களும் தங்களுக்குள்ளிருக்கும் டிரலோக ராஜ்யத்திற்கு முழுநேரக் கடமை செய்வதற்கு திருமணம் தடையாய் இருக்கப்படாது.

இது பேரறிஞர் பெர்னாட் ஷோவின் கருத்து.

திருமணச்சடங்கு இல்லாத சமுதாயம் எப்படி ஒழுக்கமான வாழ்க்கை நடத்தலாம் என்ற கேள்வி எழக்கூடும். மனிதகுலம் ஒன்றைத்தவிர மிருகங்களும் பறவைகளும் மற்றும் ஜீவசந்துக்களும் தங்கள் இனத்தை நீடிப்பதற்கு அன்றி உடலுறவு வைத்துக் கொள்வதில்லை. மானிட ஆண்களும் பெண்களும் அறிவு வளர்ச்சியின் மூலம் திருமணம் என்ற சடங்கு இல்லாமலே யே வாழ்க்கையை நடத்த முடியும். புரட்சிகரமான இந்தக் கருத்தைத்தான் ஈ.வே.ரா பெரியார் [illegible]ருக்கிறார் போலும்,


நிகோந ஏல நிலையம்

காணிகள் உடன் விற்பனைக்கு:

★ ஆஸ்பத்திரி வீதியில், யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியை அடுத்து 2 பரப்புக் கட்டிடத் துண்டு.

★★ யாழ். மாநகர சபை எல்லைக்குள், பிறவுண் வீதியில், அம்மன் வீதிச் சந்திக்கு அண்மையில் 6 1/2 பரப்பு 2 கட்டிடத் துண்டுகள் முறையே 3 1/2 பரப்பு, 3 பரப்புத் துண்டுகளாக, வாங்குபவர்கள் எம்முடன் தொடர்பு கொள்க

நகர்த்தக் கூடிய உபகரணங்கள்:

பாவித்த பொருட்களை சகாய விலைக்கு யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்யும் ஒரே நிறுவனம் கொள்வனவாளர்கள் பாவித்த பொருட்கள் உடன் வாங்கத் தீர்மானிக்கு முன் எம்முடன் கலந்தாலோசிக்கும் வண்ணம் ஆலோசனை தருகின்றோம் எம்மிடம் விலைப் பட்டியலுடன் கூடிய பல விதமான பொருட்களுண்டு.

காரியாலய நேரத்தில் ஒரு முறை விஜயம் செய்து எமது சேவையை நீங்களாகவே தெரிந்து கொள்ளுங்கள்.

2-வது மாடி, [illegible]பிள்ளை கட்டிடம்,
166, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்,

எஸ்.நரசிங்கம் J. P.
ஏல விற்பனையாளர்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆன்று அவிந்து

( 9-ம் பக்கத் தொடர்ச்சி )

ரென்றால் அவரின் உயரிய சேவை மனப்பான்மையை உணர்தல் எளிதாமோ? இதனால் சோர்வு நீக்கி ஆர்வுடன் கல்வி பயின்றவர்கள் பலர். வறுமைபோக்கி வாழ்வு பெற்ற குடும்பங்கள் பல.

தீபாவளிக்கு ஏழைப்பிள்ளைகளுக்கு உடைகள் வாங்கிக் கொடுப்பதுவும் வருடத் தொடக்கத்தில் புத்தகங்கள் சிலேற்றுகள் உதவியளிப்பதுவும் கந்தையாசிவம் அவர்களுடைய வழக்கம். வருடப் பிறப்புக்குக் கைவிசேஷம் கொடுக்கும்போது ஆளைப்பார்த்துத்தான் கொடுப்பார். இந்நாட்களிற் பலர் பார்ப்பதைப் போன்று பிள்ளை குட்டி, மாமன் மச்சான் என்று அவர் பார்த்ததில்லை. ஏழை என்று சொன்னால் அம்மானுக்கு இருபத்தைந்து ரூபாய் ஐம்பது ரூபாய் என்று கூட அவர் கைவிசேஷம் கொடுப்பதுண்டு.

யார் யார் எப்படி எப்படி வாழ்கிறார்கள் என்பது கந்தையாசிவம் அவர்களுக்கு நன்கு தெரிந்த ஒரு சங்கதி. ஏனெனில் சாவகச்சேரிப் பட்டணசபைக்கு எமது வட்டாரங்களிலிருந்தும் அவரேதான் சாவகச்சேரிக்கிராம சபை பட்டினசபை நகரசபைஎன வளர்ச்சி பெற்ற முக்காலங்களிலும் அங்கத்துவம் வகித்த பெருமையுடையவர் கந்தையா சிவம் அவர்கள். சபையின் உபதலைவராகவும் இவர் பலமுறை பணியாற்றி இருக்கின்றார். நுணுவில் மேற்கு வட்டாரத்தில் போட்டியின்றிப் பலமுறை தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார் மற்றைய வட்டாரங்களில் வாக்கெடுப்பு நடக்கும் நாளில் நுணுவில் மேற்கு வட்டாரத்தில் திறந்த கார் ஒன்றில் கந்தையா சிவம் அவர்களைப் படலைக்குப் படலை மாலையிட்டுச் சகல நல்லிசை வாத்தியங்களும் ஒலிக்க மக்கள் ஆர்ப்ப சோடனைகளால் பொலிந்த வீதிகளாலும் ஒழுங்கைகளாலும் ஊர்வலமாக அழைத்துச்செல்வது வழக்கம்.

நுணுவில் மேற்கில் இன்று காணப்படும் சுற்றுதங்கள் மடங்கள், கிணறுகள், வாய்க்கால்கள் என்றிவற்றுட் பெரும்பாலானவை கந்தையாசிவம் அவர்களின் ஊக்கத்தாலும் உழைப்பாலும் நேர்மையாலும் சேவை மனப்பான்மையாலும் தோன்றியவை எனலாம். மூன் மட்டுமன்றி கோயில் திருப்பணி வேலைகளையும் இவை நின்று முடிக்கும் சிவபக்தர் இவர். ஐக்கிய நாணய சங்கம், கூட்டுறவுச் சங்கம், கிராம முன்னேற்றச் சங்கம் போன்றவற்றை நிறுவி அவற்றைச் செவ்வனே செயற்பட நடாத்திய பெருமையுமுடையவர் இவர்.

இவ்விதமாகத் தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்த திரு. கந்தையா சிவம் அவர்கள் எம்மைவிட்டுப் பிரிந்து விட்ட போதிலும் சமூகத்தொண்டன் என்றும் தகைசால் பண்பாளன் என்றும் பலரும் போற்றி ஏற்றக் குன்றின்மேலிட்ட தீபமன்ன இன்றும் விளங்குகின்றார்; என்றும் விளங்கி நிற்பார்.

## நவரத்தினம்

நவரத்தினம் என்றால் நவரத்தினந்தான். அதற்கு வேறு அடைமொழி வேண்டியதில்லை. இரத்தினக்கற்கள் அரியவை. அழகானவை. யாரையும் கவரும் கவர்ச்சி மிக்கவை. உறுதியானவை. உயர்ந்தவை. என்றும் குன்றாத ஒளியுடன் நின்று விளங்க வல்லவை. இத்தகைய காரணங்களினால் பெறுமதி கூடியவை. இக்குணங்கள் அனைத்தும் ஒருங்கே அமையப்பெற்ற பெறுமதி மிகுந்த சாவகச்சேரித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. என். நவரத்தினம் அவர்களைப் பெற்றெடுக்கத் தவம் செய்தது எங்கள் ஊர் இன்று ஈன்ற பொழுதிலும் பெரிதுவந்து மிகவுயர்ந்து விளங்குகிறார் நுணுவிலூர் அன்னை.

திரு. நவரத்தினம் அவர்களின் கல்விநலம், ஆற்றல் வளம், அரசியற் களம் என்பவை யாவும் மிகவும் பிரசித்தமானவை அவைபற்றி யான் கூறித்தான் உலகம் அறிந்துகொள்ளவேண்டுமென்ற நிலையில்லை. அவர் இன்று நுணுவிலூருக்கு மட்டுமா உரித்தானவர். தமிழ் கூறும் நல்லுலகம் முழுவதற்குமே சொந்தமாகி விட்ட பெருமகனவர்.

கொள்கைச் சான்றோர் என்று குறிப்பிட்டார் பிசிராந்தையார். உயர்ந்தவோர் கொள்கைக்காகப் போராடிவரும் தீரர்களுள் மிகவும் அடக்கமானவர் திரு. நவரத்தினம். இந்த அடக்கம் எங்கள் ஊருக்கே உரித்தான சொத்து. தமிழுக்காகத் தலைகொடுத்தான் குமணவள்ளல். அவ்விதம் தலையைக் கொடுத்தேனும் தமிழைக்காக்க, தமிழ்ப் பாரம்பரியத்தைப்பேண. துணிந்து நிற்பார் எங்கள் நவம். அவர் திண்ணியர். ஆதலால் எண்ணியாங்கு எய்துபவர். எங்களுக்கு வேந்தர் திரு. நவரத்தினம் அவர்கள்தான். அவரைக்காணும் தமிழன்பர்கள்

தன்பொருவில் கன்றுதனி தாரவில் கண்டாங்
கன்புருகு சிந்தையொடு மாவுருகு மாபோல்
என்புருகி நெஞ்சுருகி நஞ்சுருகி நிற்பார்.



ஏற்றமும் தோற்றமுமுடைய அவரின் மேன்மைக் குணவியல்புகளை உணர்ந்தவர்கள் 'புத்திரர் இனிப்பெறுதல் புலிது' என எண்ணுவதுமுண்டாம்.

இத்தகைய சான்றோரும் இவர்களைப் போன்றோரும் இன்னும்பல ஆன்றோரும் நுணுவிலூரில் வாழ்வதால் அங்கு அடக்கம் விளங்குகிறது. அமைதி நிலவுகின்றது. இன்பம் குலவுகின்றது. அதனால் பிசிராந்தையாருக்குப் போன்று தலை நரைப்பதும் இல்லையாம்.

சமய வேறுபாடு, சாதி வேறுபாடு யாம் பார்ப்பதில்லை. எல்லோரும் ஒரு குலம். யாவரும் கேளிர். இந்த இடத்தில் சமுதாய அமைதிக்காக உழைத்த கதிரவேலு விதானையார் அவர்களும் நினைவுக்கு வருகின்றார்கள். ஊருக்கோர் உடையார் என்று யாவராலும் அழைக்கப்பட்ட இவர் காலத்தில் யாரும் வழக்காடவென்று கோட்டுக்குச் சென்றது இடையாது. இன்று சமுதாய ஒற்றுமையை நிலைநாட்டி வரும் பெரியார்களுள் ஒருவரான திரு. க. சின்னர் பற்றியும் குறிப்பிடல் வேண்டும். திருமாலையொத்த வண்ணம்; திருநீறு வைத்த வெற்றி; அரிதாய நல்ல எண்ணம்; அது செய்ய வல்ல பெற்றி உடையவர் சின்னர். அவருக்குத் தெரியாத செய்தி இல்லை. அவர் சிரிக்காத நாளுமில்லை. தனது சமூகத்தவர்களுக்குத் தனிப்பெருந் தலைவரை விளங்கித் தனது சமூகத்துக்கும் மற்றைய சமூகத்துக்குமிடையே நல்லுறவை வளர்க்கும் பாலமாக அமைந்து அரும்பணி புரிந்து வருகின்றார் சின்னர், அவர் தொண்டு வாழ்க.

[வளரும்]

# பிரயாணி

(8 ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மனத்திலும் ஈரம் பிறக்கிறது. "இந்த அறுதைப் பிள்ளையள் என்ன செய்யப்போறாங்களோ?" என்று பெருமூச்சுவிட்டார்

இதுவரை மௌனமாய் வந்த நான்காமவர் தானும் ஒருமுறை திரும்பிக்கல்லாய்ச் சமைந்துநின்ற சிறுவர்களைப் பார்த்துவிட்டு, "கல்லினுள் தேரைக்கும், கருப்பை உயிர்க்கும் புல்லுணவு தரும் ஈசன் இவங்களுக்கும்ஏதோ வழிவகுப்பான் தானே" என்று, கடவுளின் கருணைக்குள் தன்னை மூடி மறைத்தார்.

"அது சரி; இவங்கள் இனி எங்கே போவாங்கள் எங்கே இருப்பாங்கள்? சும்மா சொல்லி கடவுளிலைவிட்டாப் போதுமா? ஏதாவது வழி பிறக்கணுமே"

"ஏன் அவங்க இருந்த கொட்டில்—"

"கொட்டிலா? காணிக்காரன் இரண்டு வரிசமா இதைத்தானே எதிர்பார்த்திருந்தான். உனக்குத்தெரியாதா? ஆமா. நீகான் முன்னமாச் சுடலைக்கு வந்திட்டியே-பிணம் கொட்டிலை விட்டுப்புறப்பட்ட உடனையே, காணிக்காரன்வேலைக்காரரை விட்டுப் பெட்றோல் ஊத்திக் கொட்டிலுக்கும் கொள்ளி வைச்சிட்டான். இதுவரை கொட்டில் சாம்பலும் சாத்துக்குப் பறந்திருக்குமே!"

"அட பாவி! அதுகளின்ரை சாமான்கள், உடமைகள்—"

"உடமைகளா? அதுகளுக்கு உடமைகள் ஏதப்பனே? எல்லாம் சாம்பல் தான்."

சமூகத்தின் மனம்போல வரண்டு கிடந்த வயல்வெளியைத் தாண்டி, ஊர்மனைக்குள் புகுந்து, ஒருவர் ஒருவராய்ப் பிரிந்து செல்கிறார்கள்.

'எல்லாம் கடவுள் செயல்' -அவர்கள் பிரியும் போது ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டது இது

'எல்லாங் கடவுள் செயல்' என்றுதான் அவளும், அந்தத் தாயும், எண்ணுதெல்லாம் எண்ணி, மனத்தைத் தேற்றிவைத்திருந்தாள்.

பஞ்சம், பட்டினி என்ற ஓநாய்களின் பிடுங்கல்களின் நடுவிலேகூட அவள் கழுத்திலே, அழுக்கேறிய மஞ்சட் கயிற்றிலே கோத்த தாலி, அவள் நம்பிக்கையின் சின்னமாய் மினு மினுக்கிறது. அவள் இறந்து போகிற அன்று காலையிலே, குழந்தைகளின் கண்ணீரால் தொண்டையைநனைத்துக்கொண்டு, நடுங்கும் கைகளால் சோமுவின் கைகளைப்பற்றி, இந்தத் தாலி உங்க அப்பாவுக்குரியது-நான் இப்பவோ நாளைக்கோ. நான் செத்த பிறகு சுடலைவரை இது என் உடம்பிலேயே கிடக்கட்டும். பிறகு பத்திரமா இதை எடுத்து வைச்சு உங்கஅப்பா வார போது. இல்லை. நீங்க அவரைக் காணுற போது. அவர் காலிலை வைச்சு எனக்காக அவரைக்கும் பிடுங்கோ." என்றவள், சில நிமிடங்களின்பின் 'எல்லாம் கடவுள் செயல்' என்று கூறித்தான் தன்னுயிரைவிட்டாள். எல்லாம் கடவுள் செயல்'என்றுகூறிக்கொண்டு நிற்கிற வயசா அவர்களுக்கு? அப்படி நின்றுதான் என்னவது?

சுவாலை தணிந்து விறகும் உடலும் தணலாகித் தரையிலே படிந்து, நீறுபூக்க ஆரம்பித்த போது அவர்கள் சிறிது அசைந்தார்கள். புறத்தே இருள் சூழ்ந்துவிட்டது. தாயின் உடல் வீதிக்கு வரமுன்னரே அவர்களது கொட்டில் சாம்பராகிவிட்டதை அவர்களும் கண்டார்கள்.

களை பிடுங்கி, அருவி வெட்டி, நெல்லுப்புடைத்து செய்யாத தொண்டெல்லாம் ஊருக்குச் செய்து அவர்கள் வயிற்றுக்குக் கஞ்சி ஊற்றிய தாயே சாம்பராகி விட்டாள். அந்தக்கொட்டில் மழைக்கும் வெயிலுக்கும் ஈடுகொடுக்க முடியாத அந்தக் கொட்டில், சாம்பராகிப் போனால் என்ன?

ஆனந்தனை அணைத்துக் கொண்டு சோமு அருகிருந்த சுடலை மடத்துட் சென்றான். சோமு தூணொன்றிலே சாய்ந்து கொண்டிருக்க, ஆனந்தன் அண்ணன் மடியிலே படுத்து விம்மினான்

கொள்ளி வைக்க முன்னர் அவன் தாயின் கழுத்தில் இருந்த தாலியை யாரோ கழற்றி அவனிடம் கொடுத்திருந்தார்கள். அது அவன் மடியிலே அம்மாவாய்க் கனத்தது.

அதைத் தொட்டுப்பார்த்ததுமே, சோமுவையும் பிய்த்துக்கொண்டு அழுகை பிறந்தது. விம்மிவெடித்துப் பொருமி அவன் சக்தியெல்லாம் கரைந்துவிட்டபோது. அவனும் நிலத்திலே சரிந்தான் அப்பொழுது ஆனந்தன் ஆழ்ந்த தூக்கத்திலோ மயக்கத்திலோ நினைவற்றுக் கிடந்தான்.

(வளரும்)

# சிறுகதை

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வெறும்வாயை மெல்லுகிறவனுக்கு அவல் கிடைத்துவிட்டது. என்னுள்ளத்தெழுந்த மகிழ்ச்சியை வெளிக்காட்டாமல் அவரைத் தொடர்ந்தேன். ஆற்றங்கரையில் ஒதுக்குப்புறமாக இடம்தேடி அமர்ந்துகொண்டு அவர்கதையை ஆரம்பித்தார்.

தம்பி நீ என்னவெல்லாமோ கேட்கவேண்டுமென்று எண்ணிக்கொண்டிருப்பாய்! காலையிலிருந்தே நான் ஒரு நிலையில் இல்லை என்பதையும் கவனித்திருப்பாய்தானே!

நான் பதிலிறுக்கவில்லை மௌனம் தான் அந்த உணர்ச்சிகரமான வேளைக்கு உகந்தது என்று எண்ணிப் பேசாமலிருந்தேன்.

அதை அவர் புரிந்திருக்க வேண்டும்! இலக்கியம் படைப்பவரல்லவா!

'தம்பி. அது நடந்து இருபத்தைந்து வருடங்களாகி விட்டது. நான் அம்மாவுக்கு ஒரே பிள்ளை என்பது உனக்குத் தெரியும்தானே.

(அடுத்தவாரம் முடியும்)

# கைரேகை

( 7-ம் பக்கத் தொடர்ச்சி)

இருதயரேகை பலவடிவங்களாக அமைந்துள்ளது சிலருடைய கையில் இருதய ரேகை முதல்விரலின் மூன்றாவது அங்குலாஸ்தியிலிருந்து உற்பத்தியாயிருக்கும். இத்தகையவர்கள் எடுக்கின்ற காரியங்களிலெல்லாம் சித்திக்குறைவாயிருக்கும். சிலருடைய கையில் இருதய ரேகை (a) பகுதி மேடாகிய குருமேட்டை வளைத்துக் கொண்டு இருக்கக் காணலாம். இத்தகையவர் பெரும்பாலும் மற்றையவர்களின் முன்னேற்றத்தைக் கண்டு பொறாமைப்படுவார்கள். இவ்வாறான ரேகை அமைப்பையுள்ளவர்களில் சிலர் சோதிடத்தில் ஆராய்ச்சியுள்ளவர்களாக விருப்பர் சிலருடைய கையில் இருதயரேகை (b) பகுதி மேடாகியசனிமேட்டிலிருந்து உற்பத்தியாயிருக்கக் காணலாம். இத்தகையவர்கள் புத்திக் கூர்மையும் நுண்ணறிவும் உள்ளவர்களாகக் காணப்படுவர். இருதயரேகை சிலருடைய கையில் ரோமத்தைப் போன்று அமைந்திருக்கும். இத்தகையவர் கொலைசெய்யத்தக்க கெட்டஎண்ணமுள்ளவர் என்பதைக் காட்டும், சிலர் தமது வாழ்க்கையில் எதையோ பறிகொடுத்தது போலவும் அமைதியற்றநிலையிலும் காணப்படுவர். இவர்களுடைய கையில் இருதய ரேகை அமைப்பில் பட்டும் படாமலுமிருக்கக் காணலாம்.

"நிலமே மக்களின்
நிரந்தரச் செல்வம்"

எங்களிடம் யாழ்ப்பாண மாவட்டத்தில் விற்பனைக்கு சகல வசதிகளும் அமைந்த பல காணிகள் உண்டு.

நேரில் தொடர்பு கொள்ளுங்கள்:-

இலங்கா நிதி லிமிட்டெட்

284, காங்கேசன்துறை வீதி - 284, K. K. S. ROAD.
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திரா வாழ்வில் . . . . .



உலகத்தின் கண்ணும் காதும் இன்று புதுடில்லியை நோக்கித் திரும்பியுள்ளது. 60 கோடிக்கும் அதிகமான மக்களின் தலைவியாக இன்று பெரும்பான்மை வெற்றியை யீட்டித் திரும்பவும் நாட்டின் நிர்வாகத்தை ஏற்றுப் புகழ்மிக்க அத்தியாயத்தின் பொன் னேடாகத் திகழவிருக்கின்றார் பிரியதர்சினி இந்திரா. இந்திரா இன்று உலகின் மிகப்பெரிய ஜனநாயகத்தின் தலைமைப் பீடத்தையடைய விடுதலை வரலாற்றின் விளக்கொளியான இவரது தந்தை நேருவின் செல்வாக்கே எனச் சிலர் கருதுவர். இது உண்மையன்று ஜவகர்லால் நேரு தன் மகள் தனது செல்வாக்கால் தலைமைப் பதவிகளை

## நான்கு வயதில் போலிசாரைத் தாக்க முயற்சித்த பிரியதர்சினி

வகிப்பதையோ, பெறுவதையோ அவர் விரும்பவில்லை இதை அவர் அடிக்கடி கூறுயிருக்கிறார். அறிவும் கூர்மையும் அரசியல் செல்வாக்கும் நிறைந்த சூழ்நிலையில் பிறந்து வளர்ந்தவர். இதனால் தியாக சிந்தையும் தன்னிச்சையாகத் தனித்து நின்று செயலாற்றும் துணிவும் திறமையும் மிக்கவர் அவர் பிறந்தகால அரசியல் சூழ்நிலை இந்திராவுக்கு இப்பண்புகளை அளித்தது. இவையே அவரைத்தலைமைப் பதவிகளுக்கு உயர்த்தியது எனலாம்

### பாரம்பரிய சொத்து

பாரதத்தின் வரலாற்றை நோக்குமிடத்து ஒரு பெண்மணி அங்கு பிரதமரானது முதல்தடவையாகவிருக்கலாம். ஆனல் பல தலைமைப் பதவிகளை வகித்த பெண்களைப் பெற்றது பாரதம் என்பது அதன் வரலாற்றால் நாம் அறிந்துகொள்ளலாம். இந்து முஸ்லிம் ஆட்சியின்போது பல மங்கையர் தலைவர்களாக இருந்து ஆட்சிசெலுத்தியுள்ளார்கள் ரஜியா சுல்தான ராஜதந்திரமும் அரசியல் அறிவும் மிக்கவர். இவர் டில்லியில் அரசபுரிந்துள்ளார். தென்னாட்டின் ராணியான சாந்தி பீ. பீ ஆண்களைவிட நன்றாக அரசோச்சிப் புகழ் பெற்றவர். ராணி நூர்ஜகான் தனது கணவரிலும் பார்க்க நாட்டைச் செவ்வனே வழிநடத்திச் சென்றவர் பாரதத்தை அடிமைப்படுத்திய பிரிட்டிஷாருக்கு எதிராக நடைபெற்ற கலகத்தின்போது ஜான்ஸிராணி தனது ராஜ்யத்திற்காகவும் நாட்டின் விடுதலைக்காகவும் போராடி உயிர்த்தியாகம் செய்தவர். எனவே இந்தியாவின் தலைமையும் ஆற்றலும் பாரதப் பெண்களின் பாரம்பரிய சொத்து என்பதை எவரும் மறுக்க முடியாது. இந்திராவின் வாழ்க்கையனுபவங்களை நாம் சிந்தித்துப் பார்த்தால் அவை இந்திராவின் வளர்ச்சிக்கு அடிகோலியுள்ளமை தெள்ளெனப் புலப்படும்.

அன்பும் அறிவும் சேர்ந்து இணையுமானால் அத்தகைய படைப்பு ஒரு மாபெரும் அற்புதமாக அமையும் என்றார் அறிஞர் ரஸ்கின். இத்தகையதொரு படைப்புத்தான் இந்திராபிரியதர்சினி. இவரது தொண்டின் காரணமாக கங்கையெனப் பொங்கிவரும் தியாகசிந்தையும் மனிதாபிமானமும் இவரிடம் குடிகொண்டுள்ளன. இந்திராவின் வாழ்க்கை மங்கையருக்குத் தம் நாட்டின் வளர்ச்சிக்கும் வீட்டின் வளர்ச்சிக்கும் பாடுபட வழிகாட்டும் ஒரு வழிகாட்டி.

### சிறுமி இந்திரா

இந்திராவின் குடும்பம் மிக வசதியான குடும்பம். அரண்மனைபோன்ற ஆனந்த பவன் மாளிகை. இதில்தான் குழந்தை இந்திரா பிறந்து வளர்ந்தாள். இவள் 4 வயதுச் சிறுமியாகவிருக்கும்போதே எல்லாக் கஷ்டங்களிலும் பெரிதான மனக் கஷ்டத்தை அனுபவிக்கத் தொடங்கினாள் இவளுக்கு அப்போது 4 வயதிருக்கும். நாட்டின் விடுதலைப்போரில் ஈடுபட்டிருந்த தந்தை நேருவும் கண்ணின் மணியென அவளைக் காத்துவந்த பாட்டா மோதிலால் நேருவும் சிறைக்கனுப்பப் பட்டார்கள் இவர்களது பிரிவால் வாட்டிய துன்பத்தை மேலும் அதிகரிக்கச் செய்தது இவளது தாய், பாட்டி அத்தைமார் செய்த வேலை. அவர்களும் இவளை ஆனந்த பவனில் தனியே தவிக்கவிட்டு விட்டு அன்னிய பொருட்கள் விற்பனை நிலையங்களை மறியல் செய்யச் சென்றுவிட்டார்கள். யாவரும் இன்றித் தனியே நின்ற சிறுமி இந்திராவும் ஒருவகையில் பூட்டப்பட்டிருந்த ஆனந்த பவனுள்யன்னல்கம்பிகளுக்கூடாக வீதியைப் பார்த்த வண்ணம் சிறையிருந்தாள். வீதியில் அன்னிய ஆட்சியின் கூலிப்படைகளான பொலிசார் தன் அன்னை, பாட்டி, தந்தை, பாட்டா போன்ற வயதுடைய பலரை விரட்டுவதையும் அடிப்பதையும் கண்ட இந்திராவுக்கு பொலிசார்மேல் ஆத்திரமும், அதேவேளையில் கவலையும் ஏற்பட்டது கொடியேந்திச் சென்ற பாட்டியையும் அம்மாவையும் வீதியில பார்க்கையில் அவளுக்குக் கோபம் கோபமாக வந்தது என்னையும் இவர்கள் அழைத்துப்போனால் என்ன? நான் முன்னர் கேட்டும் இவர்கள் மறுத்துவிட்டார்களே! கதவு திறந்திருந்தால் நான் பாய்ந்தோடி விடுவேனே' என இப்பாலகி எண்ணி ஏங்கினாள் இவ்வாறு எத்தனை மணித்தியாலங்கள் தான் எண்ணிக்கொண்டிருக்க முடியும். விளையாட்டு எண்ணம் வந்துவிடவே பாட்டனார் வாங்கிக்கொடுத்த பொம்மைகளிடம் சென்றாள் சிறுமி இந்திரா.

### பொம்மைகளின் புரட்சி

இப்பொம்மைகளை வைத்துக்கொண்டே வீதியில் தான் கண்ட காட்சியைச் சிந்தித்தாள். செயல்படுத்த ஆரம்பித்தாள். பொலிசார் பொம்மைகளை ஒருபக்கம் நிறுத்தினாள் கன்னாட்டு மக்கள்போல மறியல் செய்தவர்கள் போன்ற குல்லாவும் கதராடையும் அணிந்த பொம்மைகளை எதிர்ப்புறம் நிறுத்தினாள். இப்பொம்மைகள் கையில் தேசியக் கொடிகளை வைத்து இணைத்

**கே. ஜி.**

தாள். இணைத்ததும் இவற்றைப் பொலிசார் பொம்மைகளை நோக்கி நகர்த்தி இருபிரிவினரையும் மோதவிட்டு இறுதியில் போராட்டக்காரருக்கு வெற்றியை யீட்டிக்கொடுத்தாள். அவர்களது வெற்றியைக் கண்டு கைகொட்டிக் குதூகலித்தாள் இந்திரா இந்த விளையாட்டுக்குப் பின்னர் பொலிஸாரின்மேல் அருவருப்பும் அவர்களைப் பழிவாங்கும் எண்ணமும் சிறுமி இந்திராவின் சின்னஞ்சிறு பிஞ்சுள்ளத்தில் பசுமரத்தாணி போல் பதிந்துவிட்டது

### பொலிசாரை தாக்கமுயன்றாள்

மற்றுமொரு தடவை பாட்டன் மோதிலால் நேருவும் தந்தை நேருவும் சிறைக்கு அனுப்பப்பட்டிருந்தார்கள் இவர்களுக்குச் சிறைத் தண்டனையோடு விதிக்கப்பட்ட அபராதத்தை இவர்கள் செலுத்த மறுத்தார்கள். மறுக்கவே அரசாங்கம் ஆனந்த பவனில் உள்ள பொருட்களிற் சிலவற்றை அந்த அபராதப் பணத்துக்குப் பெறுமதியளவு எடுத்துவர பொலிசாரை அனுப்பியது. ஆனந்த பவனுக்குப் பொலிஸ்படை விரைந்தது சிறுமி இந்திரா அங்கு தனியே இருந்தாள் ஆயா அலுவலாக உட்புறம் சென்றுவிட்டாள் அம்மாவும் பாட்டியும் அத்தைமாரும் வெளியே போராட்டத்தில் கலந்து கொள்ளப் போய்விட்டார்கள். பொலிஸ்படை அங்கிருந்த அழகிய சோபா செட்டையும் சில பொருட்களையும் அகற்றி வானில் ஏற்ற ஆரம்பித்தது. இச்செயல்களைக் கவனித்துக் கொண்டிருந்த இந்திராவுக்கு முதலில் அவர்களைக் கண்டதில் பயமேற்பட்டது. எனினும் தம் பாட்டனாரின் அழகிய பொருட்களை அகற்றிய அவர்கள் மேல் அடங்கா ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. பலவாறாக அப் பொலிசாரைத் திட்டினாள். அவர்கள் பொருட்படுத்தவில்லை அதிக ஆத்திரம் வரவே அடித்தால் ஓடிவிடுவார்கள் என நினைத்தாள் இச்சிறுமி. உடனே தன் சின்னஞ்சிறு கைகளை முஷ்டியாகப் பிடித்துக்கொண்டு அவர்கள் முன் சென்று அவர்களைத் தாக்கப் போவதாகப்பயமுறுத்தினாள் அவர்கள் சிறிதுதானும் ஈவு இரக்கமின்றிச் சிரித்துவிட்டு தம் அலுவல்களையும் முடித்துக்கொண்டு சென்றுவிட்டார்கள்.

இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர் அவள் பொம்மைகளோடு விளையாடுவதில் அதிக விருப்பம் கொள்வதில்லை. வீட்டிலும் வெளியிலும் நடக்கும் நிகழ்ச்சிகளிலேயே கூடிய கவனம் செலுத்தத் தொடங்கினாள். அரசியல் கொந்தளிப்பும் சமூக எழுச்சியும் நிறைந்த காலத்தில் பிறந்து வளர்ந்ததால் இந்திராவின் எண்ணங்களும் லட்சியங்களும் சிறுபிராயத்திலிருந்தே அந்தக் காலத்தைப் பிரதிபலிப்பவையாகவே அமைந்தன.

(தொடரும்)

### அறிந்து கொள்ளுங்கள்

சமையல் செய்யும் போது கொஞ்சம் எலுமிச்சம்பழச்சாறு வேண்டும் என்றால் உடனே முழுப்பழத்தையும் வெட்டிச் சாறுபிழிந்து வீணாக்கக்கூடாது சிறிய ஊசியினால் எலுமிச்சம்பழத்தைக் குத்தி அதன் மூலம் சாறு பிழிந்துகொண்டால் போதும். அதே எலுமிச்சம்பழம் மீண்டும் நமக்கு வேண்டியபோது பயன்படும்.

0 0 0

கண்ணாடிப் பாத்திரங்களின்மீது உப்புத் தூளைத் தூவிப் பிரஷினால் போட்டுத் தேய்த்தால் கண்ணாடிப் பாத்திரங்கள் பளபளவென்று வந்துவிடும்.

0 0 0

ஷூபாலிஷ் உலர்ந்து இறுகிவிட்டால், என்ன செய்வது எனக் கவலைப்படத் தேவையில்லை. துணியில் கொஞ்சம் பெட்ரோலை நனைத்துப் பொலிஷின்மீது தடவினால்போதும் பொலிஷ் இளகி உபயோகத்திற்குத் தகுந்த பக்குவதிற்கு வந்துவிடும்.

# குழந்தையின் ஆரோக்கியமும் அழகும்!

டாக்டா தயசியா லவோவா



அழகு என்பது முக்கியமாக ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட ஒரு விஷயம் என்ற கருத்துக்கு நம் காலத்தில் மேன்மேலும் ஆதரவு பெருகிவருகிறது. மனிதர்களிடையே எத்தனையோ பெரும் வேறுபாடுகள் இருந்தாலும் எது அழகு என்பதை நிர்ணயிக்க சில பொதுவான அளவுகோல்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. பருமனில்லாத உறுதியான உடல்வாகு; நல்ல தோற்றம்; நிமிர்ந்த தலை; நேரான தோள்கள்; உள்ளடங்கிய வயிறு; இளமை நலம் கெடாத சருமம்; பிரகாசமான கண்கள்; 'உயிர்த்துடிப்புள்ள' கேசம் ஆகியவற்றை இத்தகைய அளவுகோல்களாகக் கூறலாம் இவை யாவும் நல்ல ஆரோக்கியத்தின் அறிகுறிகளேயாகும்.

### குழந்தையின் ஆரோக்கியம்

குழந்தை பிறந்த முதல் ஆண்டில் அவனது ஆரோக்கியம்பற்றி எடுத்துக்கொள்ளப்படும் அக்கறை எதிர்காலத்தில் அவன் அழகானவனாக வளர்வதற்கு உத்தரவாதமாக அமைகிறது. தசைகளுக்கு வலுவூட்டுதல், அவற்றைத் தேய்த்துப் பிசைந்துவிடுதல் சீரான ஆகாரம் ஆகியவற்றின்மூலம் குழந்தையின் உடல் நெகிழவும் உரமும் பெறுகிறது. அவன் நேரான கடினமான படுக்கையில் படுத்துறங்குவது நல்லது அவனது உடல் அமைப்பு நன்கு உருவாவதற்கு இது துணைபுரியும் கீழ் நோக்கி அமுங்கும் மிருதுவான ஸ்பிரிங்குகளை உடைய மெத்தைகளில் குழந்தைகளைப் படுக்கவைக்கும்போது அவர்கள் சுருண்ட நிலையில் உறங்குகின்றனர். இதனால் அவர்களது முதுகெலும்பு வளைந்துவிடுகிறது.

சின்னஞ்சிறு குழந்தைகளை அடிக்கடி தூக்கி உட்காரவைப்பது கூடாது குழந்தை உட்கார்ந்த நிலையில் இருக்கும்போது குனிகிப் போய் அவனது உடல் பருசரிவர வளர்ச்சியடையாது அவன் முதுகெலும்பை அழுத்துகிறது

### பயிற்சி

இரண்டு வயதிலேயே குழந்தை காலையில் எழுந்ததும் தன் வயதுக்கேற்ற உடற் பயிற்சிகளைச் செய்யவும், குளிக்கவும், அல்லது ஈரத்துணி கொண்டு உடம்பைத் துடைத்துக்கொள்ளவும் பழக்கிவிடவேண்டும் குழந்தையின் தசைகளையும் மூட்டுகளையும் தேய்த்துப் பிசைந்துவிடுவதும் நல்லது. இதற்குப் பிறகு குழந்தை எப்போதும் துருதுறுவென்றிருக்க விரும்புவான்.

(12-ம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பஸ்மாசுர மோகினி நாட்டிய நாடகத்தில் வேல் ஆனந்தனும் விஜயமலர் விஜயேந்திராவும்.

# ஈழத்து தமிழ் நாடக உலகில்புதிய திருப்புமுனை டயல் 'எம்' போர் மேடர்!

ஈழத்துத் தமிழ்நாடகங்களைப் பார்த்துப் பார்த்து அலுத்துச் சலித்துப் போய்விட்டீர்களா? அப்படியானால் இனிக் கவலைப் படாதீர்கள்.

புதிய திருப்புமுனை ஒன்றை ஏற்படுத்தி, ஈழத்துத் தமிழ் நாடக உலகுக்கே புதுப் பாதை காட்டப்போகிறார்கள் லிட்டில் ஸ்ரேஜ் நாடகக்குழுவினர்.

'தமிழ்நாடகம் தானு' என்று மூக்கின்மீது கை வைத்து ஆச்சரியத்தால் அங்கலாய்த்து போகப் போகிறீர்கள் மேனாட்டுத் திகில்மிகு துட்பறியும்மர்மத் திரைப்பட மன்னன் அல்பிரட் ஹிச்கொக் வழியிலே இன்னொரு எம்.எம். மக்கீனை 'லிட்டில் ஸ்ரேஜ்' குழு இப்போது இனம் கண்டு கொண்டு அவர் ஆற்றலையும் திறமையையும் முழுக்க உசச்கி எடுக்கக் கங்கணம் கட்டிவிட்டது!

மக்கீன் என்ற 'மாணு'வின் திறமையை நான் கண்டுபிடித்து ஆண்டுகள் பலவாகிவிட்டபோதிலும் ஈழத்துத் தமிழ் நாடக ரசிகர்கள் முற்றும் முழுதாகப் பெற்றுக்கொள்ளப் போகிறுர்களென்றால் அந்தப் பெருமை 'லிட்டில் ஸ்ரேஜு'க்கே உரியதாகும்.

அல்பிரட் ஹிச்கொக்கின் 'டயல் எம் போர் மேடர்' என்ற திகில்மிகு நாடகத்தை இம்மாதம் 25-ந்திகதி பொரளை வை எம். பி ஏ. அரங்கில் மாலை 6-30க்கு மேடையேற்றுகிறார்கள். லிட்டில் ஸ்ரேஜ் குழுவினர்". பிரடெரிக் நொட்" எழுதிய இந்த நாடகத்தை மக்கீன் தமிழில் எழுதி அவரே டைரக்ட் செய்துள்ளார்.

1960-ம் ஆண்டு மக்கீனின் இந்த நாடகத்தை கருவாக் காட்டிலுள்ள லயனல் வென்ட் தியேட்டரில் 'புதுமை அரங்கினர்' மேடையேற்றினர். அப்போது இந்த நாடகத்தைப் பற்றி பிரபல ஈழத்து எழுத்தாளரும் விமர்சகருமான சில்லையூர் செல்வராசன் எழுதிய விமர்சனத்திலிருந்து சில பகுதிகளை கீழே தருகிறேன்.

'அல்பிரட் ஹிச்கொக் என்ற அயல்நாட்டு யானைக்கு எங்களூர்ப் பூனைகள் எந்தவகையிலும் சோடை போகவில்லை என்ற எண்ணமே இந்த நாடகத்தை பார்த்தபோது மேலெழுந்து நின்றது. எம்.எம். மக்கீன் நமது நாட்டுப் பின்னணிக்குத் தக்கபடி, ஆனல் மூலத்திலிருந்து பிசகாத வண்ணம் நாடகத்தை நல்ல முறையில் தமிழாக்கியிருந்தார். இலங்கையில் தமிழ் நாடகங்கள் நடைபெற்று வந்த தோரணையில் நிச்சயமாக இது ஒரு திருப்பம். எம்.எம் மக்கீன் பாராட்டப்படவேண்டியவர்.

நாடக முடிவில் யானைக்கும் அடி சறுக்கும்; நாங்கள் பூனைகள்; தவறுகளை மன்னியுங்கள் என்று தயாரிப்பாளர் சொன்னார்,

பூனைகளாக இருக்கட்டுமே அடிசறுக்குகிற யானைகளைவிட இவர்களைப் போன்ற அடிசறுக்காத பூனைகளே இப்போது இங்கு தமிழ் நாடக வளர்ச்சிக்குத் தேவை.'

பத்தாண்டுக்குப் பின்னர் இப்போது மேடையேற்றப்படும் மக்கீனின் இந்த நாடகம் லிட்டில் ஸ்ரேஜுக்கும் மக்கீனுக்கும் பெரும்புகழைத் தேடித்தரும் என்று சொல்லவும் வேண்டுமா?

பிரபல சிங்கள—தமிழ் நட்சத்திரமான ஹெலன் குமாரியைப் புதுக்கோணத்தில் டைரக்டர் மக்கீன் உங்களுக்கு இந்த நாடகத்தில் தருகிறார் பிரபல நடிகர் ஸ்ரீசங்கர், சுசில்குமார், தீன்குமார், ஹிவேரியன் ஆகியோருடன் முக்கிய பங்கெடுத்து கொள்ளும் பாத்திரங்கள் உண்டு. நான் சொல்லமாட்டேன்.

25-ந் திகதி என்னுடன் வருகிறீர்களா? நிச்சயமாக அந்தப் பாத்திரங்களைப் பார்க்கலாம்.

—பாமா ராஜகோபால்

# அசலுக்கும் நகலுக்குமுள்ள வித்தியாசத்தை அப்பட்டமாக காட்டினர் கலைஞர்வேல்ஆனந்தன்!

அகில இலங்கை இளம் நடிகர் சங்கம் தனது பத்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மகத்தானதோர் சாதனையைச் செய்துள்ளது. யாழ்ப்பாணத்தில் உள்ளதரமான நாட்டியக் கலைஞர்களான 'கலைக்கோவில்' வேல் ஆனந்தன் குழுவினரை அழைத்து கொழும்பில் அவர்களது கலைத்திறமையை இலவசமாகக்காண்பித்தார்கள். அசலுக்கும் நகலுக்கும் உள்ள வித்தியாசத்தைஅப்பட்டமாகக்காண்பித்தார்கள்!

வம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் கூட்டம் நிரம்பிவழிந்தது. நீண்ட நாட்களுக்குப் பிறகு கலை நிகழ்ச்சியொன்றுக்கு இவ்வளவு திரளான மக்களைக் காணக்கூடியதாகஇருந்தது. முதலில் செல்விகள் நளாயினி இராஜதுரை, நகுலமாலா நவரத்தினம் ஆகிய இருவரும் தீப வணக்கஞ் செய்து நடனஞ்சலியை ஆரம்பித்துவைத்தனர். பின்னர் விஜய சகோதரிகளான மலர், மாலினி இருவரும் கிருஷ்ணுஞ்சலி செய்தனர். கல்பனு விக்னேஸ்வரன், கிரிஜா சின்னத்துரை இருவரும் அலாரிப்புச் செய்தனர். இவர்கள் மிகவும் கடினமாகவும் அபிநய கலைத்துவத்துடனும் நடனமாடி சபையோரின் பாராட்டுதலைப் பெற்றனர். குமாரி பத்மினி நடராசா ஆடிய'வர்ணம்' உண்மையிலேயே வண்ணந்தான். செல்விகள் பவளராணி பரராஜசிங்கம், விஜயமாலினி விஜேந்திரா ஆகியோரின் கலைத்தாண்டவ நடனம் எல்லோரையும் பிரமிக்க வைக்கும்படியாக இருந்தது

நவரசம்

நிகழ்ச்சிகளின் சிகரமாக கலைஞர் வேல் ஆனந்தனின் 'நவரசம்' அமைந்தது. கோபம், வீரம், தாபம், நகைப்பு பயம், துக்கம்' வெருட்சி போன்ற நவரசங்களையும் கலைஞர் ஆனந்தன் மிகத் தத்ரூபமாகச் செய்து காண்பித்தார். ஒவ்வொரு ரசத்திற்கும் அமோகமான கைதட்டலைப் பெற்றார். இவர் அபிநயம் செய்து காண்பித்தவற்றுள்'இராமாயணத்தில் அநுமார். கொஞ்சம் வெளியேபோவீர்களா!, போடா வெளியே. கிருஷ்ணன் வருகை, பெண்கள் தலைவாருதல் முதலியன மிகவும் சிறப்பாகவும் நகைச்சுவையாகவும் அமைந்தன. தம்மால் எவ்விதநடிப்பையும் ஒழுங்காகச் செய்து காண்பிக்க முடியும் என்பதைக் கலைஞர் நன்ருக நிரூபித்துக் காட்டி விட்டார்.

இடைவேளையின் பின்னர் 'பஸ்மாசுரமோகினி' என்ற ஓரங்க நாட்டிய நாடகம் இடம்பெற்றது. இதில் சிவனுக செல்வி விஜயமலர் விஜேந்திராவும், மகாவிஷ்ணுவாக செல்வி நகுலமாலாவும் மோகினியாக குமாரி பத்மினி நடராசாவும் பஸ்மாசுரனுக கலைஞர் வேல்ஆனந்தனும் நடித்தனர். பஸ்மாசுரனுகநடித்த கலைஞர் உண்மையிலேயே துடிப்புடனும் வீரத்துடனும் வேகத்துடனும் நடனமாடித்தமதுபாத்திரத்தைச் சிறப்பாக்கினார் மோகினியாக வந்த குமாரி பத்மினி தமது பாகத்தைச் சிறப்பாகச் செய்தார். அசுரனை மயக்கி அவனதுவரம்பெற்ற கைவிரலை அவனது தலையிலேயே வைக்கச் செய்து அவனது கொட்டத்தை அடக்கும் கட்டம் அபாரம். மொத்தத்தில் இந்த நாட்டிய நாடகம் கண்ணுக்கு விருந்தாகவும் கலகலப்பாகவும் கலைநயத்துடனும் மிளிர்ந்தது தமது மாணவிகளுடன் சேர்ந்து நடனமாடித் தம்மையும் அவர்களையும் சிறப்பித்த கலைஞர் வேல் ஆனந்தனை என்னால் பாராட்டாமலே இருக்க முடியாது! இந்த விழாவினை ஏற்பாடு செய்த திரு. எஸ். திருச்செல்வத்தையும் நிச்சயம் பாராட்டத்தான் வேண்டும்.

க. பே.

## 'தியாக தீபம்'

பருத்தித்துறை ஒலிம்பிக் விளையாட்டுக் கழகத்தின் 5-வது ஆண்டு விழாவில் பருத்தித்துறை எம். ஜி. ஆர் மன்றம் 'தியாகதீபம்' என்னும் நாடகத்தை அரங்கேற்றியது.

பருத்தித்துறை எம். ஜி. ஆர் மன்றத்தின் முதலாவது தயாரிப்பான இந்த நாடகம் பலரின் பாராட்டுதலையும்பெற்றது.

என். சிவலிங்கராசா, எஸ். ஜெயபால், பொன். அண்ணல்ஸ், என். பாலகிருஷ்ணர், ஆர். பஞ்சலிங்கம் ஆகியோர் திறம்பட நடித்து ரசிகர்களின் மத்தியில் கரகோஷம் பெற்றனர்.

(சொர்ணம்) மு. சொர்ணலிங்கம், கதை வசனம் டைரக்ஸனில் உருவாகியது மேற்படி நாடகம்.




# நமது நூல் நிலையம்

**தமிழமுது**
(இலக்கிய இதழ்)
கௌரவ ஆசிரியர்:
சரவணையூர் மணிசேகரன்
விலை சதம்: 50.

தமிழென்றகடலில் கடைந்தெடுத்த அமுதத்தின் நாலாவது துளியாக மிளிரும் "தமிழமுது" ஈழத்தில் தரமுள்ள இலக்கிய ஏடுகளை படைக்க முயல்கின்ற இளைஞர்களின் அறுவடையாகவுமுள்ளது.

இன்று ஈழத்து இலக்கிய உலகில் முன்னணியிற் திகழும் படைப்பாளிகளின் கைவண்ணத்தை தன் உள்ளுடனுகக் கொண்டுமிளிரும் தமிழமுது நல்ல கவிதைகள், கதைகள், ஆக்கபூர்வமான கட்டுரைகள் பிறப்பதற்கு வழி அமைப்பது வரவேற்கப் படவேண்டியதே.

இலக்கியம் என்கிற இலட்சியத்தை நோக்கி ஈழத்தில் ஆங்காங்கு சஞ்சிகைகள் தோன்றி அற்ப ஆயுளுடன் அஸ்தமனமாகின்ற நிகழ்ச்சி சர்வசாதாரணமானது. இந்த நிலையில்இலக்கியத்தை மட்டுமே முன்வைத்து பீடுநடை போடுகின்ற 'தமிழமுது' நிர்வாகிகளின் முயற்சி திறனைப் பிரதிபலிக்கின்றது. நால் ஆண்டுகளுக்கு ஒன்ருக மிளிரும் தமிழமுதத்தின் 4-வது துளியிது: வளர்ச்சியின் வேகமுடன், தரத்திலும் புஷ்டியுடையதாக அமைவதை கடந்த பிரதிகளைக் கவனிப்போர் கண்டு கொள்ளலாம்.

அட்டைப்படத்தில் இந்த நாட்டில் முன்னணியில் திகழும் தான்தோன்றிக் கவிராயர் கம்பீரமாகக்காட்சி தருகிறார். அவரது 'கற்றுல் வருமோ கவித்துவம்?' என்ற கேள்வியுடன் அமைந்துள்ள கட்டுரை அனுபவத்துடன் அமைந்த ஆராய்ச்சியின் அறுவடையாகவுள்ளது.

'ஆண்மை' என்ற எஸ். பொவின் படைப்பிலே ஆண்மைதளிர்விரிக்கின்றது. "ஆண்மைக்கு விடுக்கப்படும் சவாலை ஆண்மையுடன் ஏற்பதைப்பார்க்கிலும் ஆண்மை வேறு ஒன்று இருக்க முடியுமா'? என்ற கேள்விக் குறிப்புடன் ஆண்மைக்கே உண்மையான இடத்தைக் காட்டியுள்ளார்.

வைவந்த எழுத்தாளர்களின் படைப்புகளை 'தமிழமுதம்' தாங்கிநமது இலக்கியத்தின் ஆற்றலுக்குசிறந்தஉரைகல்லாகவும்விளங்குகின்றது.

—'சசு!'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

REGAL - Jaffna
Daily 3 shows
Poya days 4 Shows
Peter Sellers
Claudine Longet
in
THE PARTY

MANOHARA
Jaffna
10-30, 4-45, 7&9-45p.m.
Espionage
in
LISBON
AGENT-077
Spy Film

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி 2-30, 6-30, 9-30
ராமராவ் அஞ்சலிதேவி
நடித்த
பால நாகம்மா

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா நாட்கள் 2-30
எம்.ஜி ஆர் - ஜெயலலிதா
நடித்த
அடிமைப்பெண்

நாகம்ஸ் சினிமா
சுன்னாகம்
தினசரி 6-30, 9-30
சிவாஜி - சரோஜாதேவி
நடித்த
அஞ்சல் பெட்டி 520

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி கணேஷன்
ஜெயலலிதா
நடித்த
எங்கிருந்தோ வந்தாள்

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் - லெட்சுமி
முத்துராமன் - நிர்மலா
நடித்த
வீட்டுக்கு வீடு

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி - நாகேஷ்
நடித்த
கலங்கரை விளக்கம்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள் போயா நாட்கள் 4 காட்சிகள்
கல்கியில் 'சோ' எழுதிய 'யாரோ இவர் யாரோ'
தொடர்கதை முழுநீள ஹாஸ்ய படமாக...





ஜெய்சங்கர் - வாணிஸ்ரீ
சோ - மனோரமா - வாசு
நடித்த
ஆயிரம் பொய்

கெப்பிட்டல் (கொழும்பு)
விஜயா (மட்டக்களப்பு)
சிவாஜி காஞ்சனா
நடித்த
சிவந்த மண்

வெகு விரைவில்
கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா
வெலிங்டன் (யாழ்நகர்)
ரவிச்சந்திரன் - ஜெயலலிதா
நடித்த
மூன்றெழுத்து
(கலர்ப்படம்)


# பாரியும் திமிரியும்...

8ம் பக்கத் தொடர்ச்சி

டைக்காலத்தில் தலைசிறந்து விளங்கிய நாதசுர மேதைகள் எல்லோரும் ஐந்தரை கட்டை சுருதியில் திமிரி நாதசுரத்தையே வாசித்தார்கள். காலஞ் சென்ற மதுரை பொன்னுச்சாமிப் பிள்ளை தனது தள்ளாத வயதில் 4 1/2 கட்டை சுருதியில் நாதசுரம் செய்வித்து அதற்கு பாரியென்று நாமமிட்டு வாசித்துவந்தார். ருக்வேதத்தில் திமிரியின் அளவை சொல்லப்பட்டிருக்கிறதே தவிர பாரியைப்பற்றி ஒரு சாஸ்திரத்திலும் தரப்படவில்லை, காலம் செல்ல செல்ல உலக்கை தேய்ந்து உளிப்பிடியானது போல் இரண்டு கட்டைக்கு வந்து விட்டது. கட்டை குறைய குறைய ஒலிபெருக்கி இல்லாத இடத்தில் வாசித்தால் முன் இருந்து தவில் வாசிப்பவருக்குக் காதில் விபரமான ஒலி விழாமல்போற நிலை உண்டாகிறது. இரண்டு பொருள்கள் ஒன்று சேர்ந்தால்தான் இன்பமுண்டாகிறது. ஆகவே சுருதியும் ஒலியும் ஒன்றுசேரவேண்டும்.

சுருதி குறைய குறைய வாசிக்கும் சங்கதிகள் விபரமில்லாமலும் வீரம். ஆனந்தம் இல்லாமலும் நிரவல் செய்ய முடியாமலும்போய் விடுகிறது. வாசிக்கும்பொழுது வெகுதூரத்தில் இருப்பவர்களையும் கவர்ந்து இழுக்கும் சக்தி திமிரிக்குதான் உண்டு.

நாதசுரம் என்று ஒன்று உண்டு; அதில் ஆனந்தம், ஆச்சரியம் ஏற்படும்படியான இன்னிசையை வாசித்து ரசிகப் பெருமக்களை இன்ப சாகரத்தில் மூழ்கச் செய்த தெய்வப் பிறவிகளான நாதசுர மேதைகள் திருமருகல் நடேசபிள்ளை, மன்னார்குடி சின்னபக்கிரியா பிள்ளை. செம்பனார் கோவில் ராமசாமிப்பிள்ளை, ரி. என். இராஜரத்தினம் பிள்ளை நம் நாட்டு ரசிகப் பெருமக்களை இசை இன்பசாகரத்தில் மூழ்கச் செய்த திருச்சேறை முத்துக்கிருஷ்ணபிள்ளை போன்றோர் கையாண்டது 5 கட்டை திமிரிதான்.

இன்று இந்தியாவில் தலைசிறந்துவிளங்கும் நாதசுர கலாநிதி குழிக்கரை பிச்சையப்பாபிள்ளை வாசிப்பதும் திமிரியே. இது உலகறிந்த உண்மை.

பாரி மைக் வைத்து மெல்லிசை வாசிக்கச் சிறந்தது. சங்கீத ரசனை சில நிமிடங்களில் அனுபவிக்கக்கூடிய தல்ல மணிக்கணக்கில் அதனை ரசித்து அனுபவித்துசுவைக்க வேண்டும். நம்நாட்டு ரசிகப் பெருமக்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு கைவந்த கலை இது ஆகையால் ஒரு கலைஞருக்கு ஆகக்குறைந்தது நான்கு மணி நேரமாவது கொடுக்கவேண்டும்.

முப்பது ஆண்டுகளுக்கு முன் ஒரு வித்துவான் ஒரு ராகத்தை வாசித்தால் அதையே மற்றவர்களும் வாசிக்கவேண்டுமென்ற நியதி இருந்தது இது ஒருவரின் வித்துவத்திறமையை அறிய ஒரு சிறந்த விதி. ஆனால் இப்போ அப்படியல்ல. ஒருவர் பல்லவி வாசித்தால் மற்றவர் சினிமா பாட்டு வாசிக்கிறார். இது முறையானதல்ல

கே: பாரி வாசிப்பவர் திமிரி சுலபமாக வாசிக்க முடியுமா?

ப: எந்த ஒரு சிறுபிள்ளையும் இதற்கு விடை பகருமே. இரண்டுக்குப் பின் தான் மூன்று என்று. இரண்டாம் புத்தகத்தை சுலபமாக வாசிக்க முடியாதவன் மூன்றும் புத்தகத்தை சுலபமாக வாசிக்கமுடியுமா? மூன்றும் ... எவ்வளவு சுலபமாக வாசிப்பானோ அப்படியேதான்.

சுருதி கூடக்கூட வாசிப்பதற்கு சாதனையும். வீரமும் மிகமிக அவசியம் என்பது எல்லோரும் நன்கறிந்ததே

செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் அச் செல்வம் செல்வத்துக்கெல்லாம் தலை" என்ற வாக்குப்படி சிறந்த கலைஞர்களைவிட கேள்விஞானத்தால்மேலான சங்கீத ஞானத்தைக் கொண்ட பெரியார்கள் பலர் நம் நாட்டில் இருக்கிறார்கள் என்பதைநாம்மறந்து ஏமாற்ற நினைத்தால் ஈற்றில் நமக்கே ஏமாற்றத்தையும் தீங்கையும் உண்டாக்குமென்பது திண்ணம்.

செல்வம் வந்துற்றபோது தெய்வமும் சிறிதுபேணார். சொல்வன அறிந்து சொல்லார் செய்வன அறிந்துசெய்யார் என்றபடி வாசிப்பில் சிறிது பாண்டித்தியத்தையும், சிறிது செல்வத்தையும் பொதுஜன அபிப்பிராயத்தைம் பெற்ற இரண்டு மூன்று தவில் வித்வான்கள் நாதசுரத்திற்கு பக்க வாத்தியமே தவில் என்ற பண்டைய நியதியை மறந்து உண்டாக்கிய விதண்டாவாதமேயல்லாது நாதசுர வித்வான்களிடமோ அல்லது ரசிகப்பெருமக்களிடமோ எழுந்த பிரச்னையாக இது பிரதிபலிக்கவில்லை.

நம் தாய் நாட்டில் தலைசிறந்து விளங்கிய சில தவில் மேதைகளும் நம் நாட்டில் விளங்கிய திரு. காமாட்சி சுந்தரம், சின்னத்தம்பி போன்றவர்களும் தனித் தவில்களாக வாசித்தார்கள். இதுபோலவே இன்றும் இந்தியாவில் செய்கிறார்கள். ஏன் திரு. தட்சணாமூர்த்தி கூடத்தான் இந்தியாவில் செய்யப்போகிறார்! நம்நாட்டிலுள்ளவர்களும் இந்த முறையைப் பின்பற்றினால் பொருளாதார சுபீட்சம் உண்டாவதுடன், இது போன்ற பிரச்னைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்பது திண்ணம்

கே: நாதசுரத்தில் ராகம், தானம், பல்லவி யாரும் வாசிக்கலாமா?

தானம் வாய்ப்பாட்டிலிருந்துதான் தோன்றியதோ அன்றி நாதசுரத்திலிருந்து தோன்றியதோ என்பதை அடியேன் அறியேன்.

இற்றைக்கு நாற்பது ஆண்டுகளுக்கு முன் ஒரு நாதசுரம் ஒரு தவிலாக இருந்த காலத்தில் ராகம் தானம் வாசித்துத்தான் பல்லவி வாசிப்பது வழமை.

இரண்டு நாதசுரம் தோன்றியபின்தான் தானம் இல்லாமல் போனது தானம் வாசிப்பது அவசியம் கையாளவேண்டியது. அது ஒரு கெட்டித்தனமல்ல

## மாநகர ட்சி மன்றம் யாழ்ப்பாணம்
## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் குத்தகைகளுக்குரிய கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாண மாநகராட்சிமன்ற ஆணையாளரால் 1971-ம் ஆண்டு பங்குனிமாதம் 26-ம் திகதிவெள்ளிக்கிழமை பி.ப. 3-00வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

குத்தகையின் பெயர்

1. முத்திரைச் சந்தையிலிருக்கும் கடைஅறைக் குத்தகை.

2. செங்குந்தர் சந்தையிலிருக்கும் 5-ம் இல கடைஅறை

குத்தகைக்காலம்

1 1-4-71 தொடக்கம் 31-12-75 வரை.

2 1-4-71 தொடக்கம் 31-12-73 வரை.

இது சம்பந்தமாகமேலதிக விபரங்களை அறியவிரும்புவோர் மாநகர ஆணையாளரிடமிருந்து அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

ஏ ரி சுந்தரம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சிமன்றம்,
யாழ்ப்பாணம்,
16-3-71.

2200

## கேள்விப்பத்திர அறிவிததல்

மன்னார் மாவட்டம் இலுப்பைக்கடவை கிராம சபையில் ஒரு மத்திய நூல் நிலையம் கட்டும் சேவைக்கு ஒப்பந்தக்காரரிடமிருந்து விண்ணப்பங்கள் 4-4-71-ந் திகதி காலை 9-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் 3-4-71-ந் திகதி மாலை 4 மணிக்குமுன் எமது கிராம சபையில் மேற்காட்டிய வேலைக்கு ரூபா 50/- கட்டுப் பணமாகவும், ரூபா 10/- விண்ணப்பப்படிவப் பணமாகவும் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் பெறுமதிரூபா 10/-ம்எக்காரணம் பற்றியும் திருப்பிக்கொடுபடமாட்டாது. வேண்டிய விபரங்கள் எமது கிராமசபை அலுவலகத்தில் அல்லது மன்னார் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அவர்களின் அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

ஒப்பம்:
வே. கைலாயபிள்ளை,
இ. ச. தலைவர்.

கிராமசபை அலுவலகம்,
இலுப்பைக்கடவை,
15-3-71.

3211

## வரி விளம்பரம்

### தேவை

தையல் வேலையில் அனுபவமுள்ள பெண் பிள்ளைகள் தேவை. ஜோமதி காமன்ஸ் விளாவை களபூமி, காரைநகர். 2891

எதிர் வரும் சித்திரை க பொ. த. (உயர்தர) பரீட்சைக்காகக் கடந்தகால பொருளியல் பரீட்சைகளின் (1) 90 வினாக்களும் அதற்கான 100 பக்கங்களைக் கொண்ட விடைகளும், (2) 91 பக்கங்களைக் கொண்ட பொருளியல் தொகுப்பும் அனுபவமுள்ள பட்டதாரிகளால் தயாரிக்கப்பட்டன. சித்தி நிச்சயம். விலை முறையே ரூபா 10-00, 7-50 வர்த்தகக்கல்லூரி, பருத்தித்துறை. 1924-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 2899

தையல் மிசின்

புத்தம் புது சிங்கர் தையல் இயந்திரம் (Semi Automatic) விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். No 37, பிறவுண் ரோட், யாழ்ப்பாணம். 2896

### கல்வி

G. C. E. மாணவர்கள் காலத்தை வீண்போக்காது ஹோமியோபதி டாக்டர் பயிற்சிபெறத் தங்களின் பெற்றோரில் ஒருவருடன் அல்லது பாதுகாவலருடன் வந்து கலந்தாலோசிக்கவும். ஹானமன் வைத்தியக் கல்லூரி, 184/A, நாவலர்வீதி, யாழ்ப்பாணம். 2714

### வாடகைக்கு

நாச்சிமார்கோவிலுக்கு அருகில் சகல வசதிகளுமுடைய வீடொன்று ஏப்ரல் மாதம் தொடக்கம் காலியாகின்றது. விபரங்களுக்கு: பத்மசிகாமணி, மின்சார நிலையம், சுன்னாகம். 2886

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




# பத்திரிகைத் தணிக்கை ஊரடங்குச் சட்டம் அமுலில்லை

## சேகுவேரா இயக்கத்தினர் கைது

கொழும்பு, புதன் அவசரகாலநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ள போதிலும் பத்திரிகைத் தணிக்கை, ஊரடங்கு உத்தரவு போன்ற விதிகள் அமுலுக்குக் கொண்டுவரப்படவில்லை

சேகுவேரா இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்றழைக்கப்பட்டவர்கள பலரைப் பாதுகாப்புப்படைகள்கைது செய்யத்தொடங்கியுள்ளன. திடீர் சோதனைகளின் போது கைக்குண்டுகள், எறிகுண்டுகள், வெடிகுண்டுகள் மற்றும் துப்பாக்கிகளையும் அவர்கள் கண்டெடுத்ததாகக் கூறப்படுகிறது.

ஏப்ரல் நடுப்பகுதியில் வரும் சிங்கள-தமிழ் புத்தாண்டுச் சமயத்தில் நாட்டில் பெரும்கிளர்ச்சியைஏற்படுத்துவதற்கு சேகுவேரா உயக்கத்தினர் திட்டமிட்டிருந்ததாகவும் இத்திட்டம் முறியடிக்கப் பட்டுவிட்டதாகவும் அரசாங்க வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது. (சி. பீ ஏ.)

# யாஹ்யா-முஜிபுர் சந்திப்பு இடையில் முறிந்தது

## மீண்டும் பேச்சுவார்த்தை நடக்குமாம்

டாக்கா, மார்ச் 17 கிழக்குப் பாகிஸ்தானின் அவாமிலீக் தலைவர் ஷேக் முஜிபுர் ரஹ்மானுக்கும் அதிபர் யாஹ்யாஹானுக்கு மிடையில் டாக்காவில்நடைபெற்ற 2வது சுற்றுப்பேச்சுவார்த்தை இன்றுதீர்மானம் எதுவும் எடுக்கப்படாமல் இடைநடுவில் முடிவுற்றதை தொடர்ந்து கிழக்குப் பாகிஸ்தானில் அரசியல் நிலைமை மிகவும் தீவிரமாகியுள்ளது.

ஒரு மணித்தியாலம்மட்டும் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டுவிட்டு முஜிபுர் ரஹ்மான் அதிபர் மாளிகையிலிருந்து வெளியேறிவிட்டதாகவும் இப்பேச்சுவார்த்தை 2 மணிநேரம் வரை நடைபெறத்திட்டமிடப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

பேச்சுவார்த்தை பற்றிய விபரம் எதையும் வெளியிட முஜிபுர் ரஹ்மான் மறுத்துவிட்டார் ஆயினும் தேவை ஏற்படும்போது 3வது சுற்றுப் பேச்சுவார்த்தை நடைபெற்று முடிந்ததும் பத்திரிகை நிருபர்களிடம் நிலைமையை விளக்குவதாகஅவர் சொன்னார்.

கிழக்குப்பாகிஸ்தானில் இன்றுடன் 16-வது நாளாக அகிம்சை வழியில் ஒத்துழையாமை இயக்கம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அரசாங்க காரியாலயங்கள் எல்லாம் மூடப்பட்டுள்ளன.

கிழக்குப்பாகிஸ்தான் நீதிபதிகள், வக்கீல்கள் அவாமிலீக்கின் 4 அம்சக்கோரிக்கையையும் ஏற்றுக்கொள்ளும்படி ஜனாதிபதி யாஹ்யாஹானிடம் வற்புறுத்தி மகஜர் அனுப்பியுள்ளனர்.

டாக்காவில் தங்கியிருக்கும் ஜனாதிபதி இன்றோ, நாளையோ மீண்டும் முஜிபுர் ரஹ்மானுடன் பேச்சுவார்த்தைநடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

### இன்று

### 'விஞ்ஞானி' வெளியீட்டுவிழா

யாழ்ப்பாணம், வியா. வடமாகாண 'விஞ்ஞானி' ஆசிரியசங்கத்தின்விஞ்ஞானி என்னும் காலாண்டுபத்திரிகை வெளியீட்டு விழா இன்று வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் சங்கத் தலைவர் தலைமையில் நடைபெறும்.

வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் திரு டபிள்யு டி சிமாரத்தில ஆசிமொழிகூறி முதல் இதழை வெளியிட்டு வைப்பார். விழாவில் பேராசிரியர் திரு அ சின்னத்தம்பி விஞ்ஞானமும் நாமும் என்னும் பொருள்பற்றி உரையாற்றுவார்.

## 22-ல் தமிழ்நாடு சட்டசபை கூடும்

சென்னை, மார்ச். 17 தமிழ்நாடு சட்டப்பேரவையின் முதலாவதுகூட்டம் இம்மாதம் 22-ந் திகதி நடைபெறவிருக்கிறது.

## சுற்றுப்பிரகாரம்

புலோலி, புதன் வடமராட்சியின் யாத்திரைகஸ்தலமான புனிதசூசையப்பர் தேவாலய சுற்றுப் பிரகாரம்நாளை நடைபெறும்

# ஈழநாடு

சாதாரண வருடம் பங்குனி மாதம் 4-ந் திகதி [18-3-71]

## ஒரு பெரிய எச்சரிக்கை!

ஏசலமுலை என்ற கிராமத்திலே ரகசியமாக ஒரு குடிசையில் கைக்குண்டுகளைச் செய்துகொண்டிருந்த மாணவர்கள்உள்ளிட்டுஆறுவாலிபர்கள்பலியானபெரிய சம்பவம்,வாலிபர்களுக்கும் பெற்றோர்களுக்கும் எச்சரிக்கையாகுமென்று, இதுபற்றி தகவல் இலாகா வெளியிட்டுள்ள அறிக்கை தெரிவிக்கின்றது. வாலிபர்களுக்கும் பெற்றோர்களுக்கும்மட்டுமல்ல. அரசாங்கத்துக்கும் கூட இது பெரிய எச்சரிக்கையாகும்

இந்நாட்டில் படித்துவிட்டு வேலையில்லாதிருக்கும் வாலிபர்களின் பிரச்னைகளுக்கு நல்ல தீர்வு காணாவிடில் இந்த ஆபத்து அதிகரித்து பலாத்காரப் புரட்சியும் ஏற்படக்கூடும்.

இவ்விஷயமாக அரசாங்கம் தன் பொறுப்பை நன்குணர்ந்திருப்பதாயும், ஒரு லட்சம்பேருக்கு வேலை வாய்ப்பளிக்க 20 கோடி ரூபாய் முதன்முறையாக ஒதுக்கியுள்ளதாகவும், வாலிபர்களுக்கு இவ்விஷயமாக "நியாயமான அக்கறை" இருப்பதாகவும் அதே அறிக்கை கூறுகிறது. இந்த மான்யம் ஒதுக்கப்பட்டுள்ளது நல்லதுதான். ஆனால் இதனால் இப்பிரச்னை தீரமுடியுமா? கடப்பாறை விழுங்கியவனுக்கு சுக்குக் கஷாயம் அளிப்பது போதுமா?

பிரிட்டன் முதலிய நாடுகளிலும் வேலையில்லாக் கஷ்டம் உள்ளது. ஆனால் அங்கு வெடிகுண்டு, பலாத்கார ஆபத்துக்கள் இல்லை. ஏன்? வேலையற்றோருக்கு கஷ்ட நிவாரண உதவிகளை அங்கு அரசாங்கம் அளிக்கின்றது. அதேபோல இலங்கையிலும் கூடியவரை உதவி அளிக்க முடியாதா? கஷ்ட நிவாரணத்துக்கான ஒரளவு உதவி அளிப்பதாயின், மனமுடைந்த வாலிபர்கள் வெடிகுண்டு, பலாத்காரத்தில் இறங்க நினைக்கவும்மாட்டார்கள்:

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு மார்ச் மாதம் 18-ந் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது

## குழப்பம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### பதுக்கலும் கொள்ளைலாபமும்

இன்னொரு விஷயம் என்னவென்றால், பொருள்களைப் பதுக்குதல், கொள்ளைலாபம் அடித்தல் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படுத்தல் போன்ற செயல்களில் ஈடுபட்டுவருகின்றது. இந்த தீய சக்திகளுடன் நேர்மையற்ற வர்த்தகர்களும் சேர்ந்து செயல்பட்டு வருகிறார்கள். சில பொருட்களுக்கு நாட்டில் தட்டுப்பாடு ஏற்படுவது ஒன்றும் பெரிய விஷயமல்ல. இதனைப் பயன்படுத்தி நாட்டில் இவ்வித தேசவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டு நாட்டில் குழப்பத்தையும் ரத்தக்களரியையும் ஏற்படுத்த இவர்கள் முயல்கின்றனர். இவர்கள் மீது அரசு கடும் நடவடிக்கை எடுக்கும். நாட்டில் வாழும்மக்களுக்கு பாதுகாப்பும் அமைதியும் அளிக்கவேண்டியது அரசின் பொறுப்பாகும். அந்தப் பொறுப்பை அரசு தட்டிக் கழிக்கமுடியாது. எனவே, நாட்டில் அவசரகாலநிலைமையைப் பிரகடனப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டது. நாசகார சக்திகளை அடக்க முப்படைகளுக்கும் வேண்டிய அளவு அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளன. இந்த நாட்டில் பொருளாதாரத்தில் தன்னிறைவுகாண அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு மக்கள் தம் ஒத்துழைப்பை நல்கவேண்டும்.

## 'போதனையை விட்டுச் சாதனையை மேற்கொள்வோம்"

### —கிரிதாரி பிரசாத்

யாழ்ப்பாணம், வியாழன் 'சேவையினாலேதான் ஞானம்பிறக்கும். சேவையில்லாப்பக்தியினால் பயனில்லை. பயன்கருதாத சேவைதான் பரமனுக்குப் பிடித்தமானது இன்றைய உலகம் இதனை அடிப்படையாகவைத்துப் போதனையைவிடுத்து இலட்சிய சாதனைசெய்யவேண்டும்'

இவ்வாறு திரு நா கிரிதாரி பிரசாத் பேசுகையில் தெரிவித்தார் யாழ்ப்பாணம் திவ்வியஜீவனசங்கமண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்துக்கு முன்னாள் மாவட்ட நீதிபதி திரு செ தனபாலசிங்கம் தலைமை வகித்தார்

அவர் தொடர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது: உள்ளத்தின் அழுக்கை அகற்றிவிடுகின்ற தாய்மையான அன்பே இறைவனை அடையும் வழியாகும் அருட்சோதிவள்ளலாரின் வாழ்க்கை இந்த தாய்மையான அன்புக்கு இலட்சியமாக அமைந்திருந்தது

திரு நா கிரிதாரி பிரசாத்தை திவ்வியஜீவன சங்கச் செயலாளர் மாலைசூட்டி வரவேற்றார்

('கு வி ம)

## 340வது தேசிய சுவீப்

கொழும்பு, வியாழன் 340-வது தேசிய சுவீப் இன்று பிற்பகல் 3-15 மணிக்கு கெக்கிராவை பட்டின சபை மண்டபத்தில் அதிர்ஷ்டம் பார்க்கப்படும்.

## கைக்குண்டு வீச்சு

(நமது நிருபர்)

கட்டைவேலி கிராம சபைக்கு கடந்த சனிக்கிழமை இரவு யாரோ கைக்குண்டு வீசியதாகத் தெரியவருகிறது. இது சம்பந்தமாக இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை. பருத்தித்துறைப்பொலிசார் புலன்விசாரணை செய்து வருகிறார்கள்.

(வல் நி)

## அரசு அமைக்க இந்திராவுக்கு அழைப்பு

புதுடில்லி, மார்ச்17 பாரத மத்திய அரசாங்க புதியமந்திரிசபையை அமைக்கும்படி ராஷ்டிரபதி திரு வி வி கிரிஇந்திராகாந்தியை அழைத்துள்ளார்.

ஜெகஜீவன்ராம் தலைமைக் காங்கிரசின் ஆட்சிமன்றக் குழுத்தலைவராக திருமதிஇந்திராகாந்தி தெரிவுசெய்யப்பட்டதைத் தொடர்ந்து ராஷ்டிரபதி இவ்விதி அழைப்பை இன்று விடுத்தார். நாளையதினம் மந்திரிசபை பற்றிய விபரம் வெளியிடப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

## பண்டிதரின் தொல்லைக்குப் பதில்

ஊர்காவற்றுறை, புதன் பண்டிதர் கா பொ இரத்தினம் எம் பி ஊர்காவற்றுறை வங்கிக்கிளைக்குப்புதிய கட்டிடமும், விடுதி வசதியும் வேண்டுமென நாளை முதல் தொல்லை கொடுக்கப் போவதாக தமது பேச்சின் போது குறிப்பிட்டார். இக்கோரிக்கையைத் தாம் நிறைவேற்றித்தருவதாக நிதி அமைச்சர் இங்கு நடைபெற்ற விழாவில் பகிரங்கமாகக் கூறினார்.

# சமதர்மம் மலர உழைப்போம்

## திரு. கருணாநிதியின் வானொலிச் செய்தி

சென்னை, மார்ச். 16 பல ஆண்டுகள் வீரம்மிக்க போராட்டங்களை நடத்தி 1967-ம் ஆண்டு அண்ணா தலைமையில்ஆட்சிப்பொறுப்பினை ஏற்று, மக்கள் கட்சியாக தி.மு.க. விளங்கியமை தமிழக வரலாற்றில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்.

இவ்வாறு தமிழ்நாட்டு மக்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி வானொலி மூலம்விடுத்த செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறியதாவது: திராவிடமுன்னேற்றக் கழகம் தனதுகொள்கைகளை மக்கள் முன்வைத்து. அவர்களின் ஆன்பானகட்டளையை ஏற்றுதன்னுட்சியை நல்லாட்சியாக நடத்தி வந்திருக்கிறது. மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியின்படி, தமிழ் மொழி சிறப்புறப் பாடுபட்டோம். ஆங்கிலமும் தமிழும் ஆட்சிமொழியாக வேண்டுமென்ற மக்களின் எண்ணங்களைப் பிரதிபலித்திடும் வகையில்இருமொழிக்கொள்கையை சட்ட மன்றம் ஒருமுகமாக நிறைவேற்றியது. தமிழ்மொழி வளர்ச்சிக்கும், எங்கும் தமிழ் மணக்கவும் எமது அரசு பலவித நடவடிக்கைகளை எடுத்தது:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org